வெளி வந்துவிட்டது!                    வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

# ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந்நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப்புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்


| மலர் | ஈஸ்வர௵ ஆவணி௴ | இதழ் |
| --- | --- | --- |
| 8 | 1937௵ ஆகஸ்டு௴ 15உ | 8 |


## பொருள் அடக்கம்


| | | |
| --- | --- | --- |
| ஆசிரியர் குறிப்புகள் | ... | 445 |
| நான்விட்ட சாடு | ... | 452 |
| பிறநலம் பேணல் | ... | 455 |
| விவசாயம் | ... | 457 |
| கமலகாந்தா | ... | 459 |
| நண்பனை வய்த்த நவநீதம் | ... | 463 |
| காதல் உலகம் | ... | 468 |
| 'விஜயராம் அல்லது போலிச் சாமியார்' | ... | 476 |
| கனவும் நனவும் | ... | 483 |
| ராமமூர்த்தியின் தந்திரம் | ... | 492 |
| சிவகாமி அல்லது தன் கற்பை காத்த காரிகை | ... | 498 |



குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனை பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் எழுதிய

# அனுபவ வைத்திய நூல்

(இரண்டாம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப்பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழிகளும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

அனுபவ வைத்திய நூலை வைத்துக்கொண்டே எவரும் ஒரு சிறந்த வைத்தியராகலாமென்பது திண்ணம்.

முன் பதிப்பைவிட இப்பதிப்பில் அநேக விஷயங்கள் சேர்க்கப்பட்டு உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டுள்ளது. சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்.

இதன் விலை ரூபா 2.

பழைய 2-ஆம் பாகம் விலை அணா 8. தபால் சார்ஜ் வேறு.

---

உங்கள் கைரேகைப் பலன்களை நீங்களே பார்த்துக் கொள்ளலாம்.

# திரிகால ரேகை சாஸ்திரம்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் தூய்மையான தமிழில் எளிய நடையில் படங்களுடன் விளக்கமாய் அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திர ஆசிரியரான சக்தி தாஸரால் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் படித்தும், இதில் படங்கள் மூலம் விளக்கப்பட்டிருக்கும் கை ரேகைகளின் குணகுணங்களைப் பார்த்தும், ஒவ்வொருவரும் அவரவர்களின் ஆயுள், விவாகம், சந்தானம், பக்தி, அதிர்ஷ்டம், கண்டம், காரியசித்தி, இல்லற சுகம் முதலியவைகளை எல்லாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். இப்புத்தகம் வேண்டுவோர் பன்னிரண்டு அணா ஸ்டாம்புகள் அனுப்பி அன்ரிஜிஸ்டர் பார்சலாகப் பெற்றுக் கொள்ளலாம். வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது.

'தமிழரசு' புக்டிபோ,

31, வைத்தியநாத முதலி தெரு, ஜி. டி. சென்னை.




17 AUG 1937

## காங்கிரஸ் பதவி ஏற்றல்

புதிய அரசியலைப் பிடித்திருந்த பீடை இறுதியாக நீங்கி விட்டது. காங்கிரஸ் கட்சியினர் தாங்கள் பெரும்பான்மைக் கட்சியினராக இருக்கும் ஆறுமாகாணங்களிலும் பதவி ஏற்றுக்கொண்டார்கள். நாடும், ஆங்கிலேயர்கள் கூறுவதுபோல் காங்கிரஸின் நண்பர்களும் அதன் எதிரிகளும் (Friend and Foe) காங்கிரஸ் கட்சியினர் மந்திரி பதவிகளை ஏற்கவேண்டும் என்று ஏகமனதாக விரும்பினர். காங்கிரஸின் நண்பர்கள், காங்கிரசை ஆதரிப்பவர்கள் காங்கிரஸ் கட்சியினர் பதவி ஏற்றால் நாடு நலம்பெறும், பாமரமக்களின் துயர்களைய முயற்சிகள் செய்யப்படும் என்ற நோக்கத்துடன் காங்கிரஸ்கட்சி பதவி ஏற்கவேண்டும் என விரும்பினர். காங்கிரஸின் எதிரிகளோ காங்கிரஸ்வாதிகள் பல அரிய பெரிய காரியங்களை எல்லாம் தாங்கள் செய்வதாக ஓட்டர்கட்கு வாக்குக் கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் பதவி ஏற்றால் அக்காரியங்களைசெய்ய இயலாது போகும், அப்பொழுது மிக எளிதில் தாங்கள் அவர்களை வெல்லக்கூடும் என்ற எண்ணத்துடன் காங்கிரஸ்கட்சி பதவி ஏற்க வேண்டுமென விழைந்தனர். இவ்வினத்தோர் எண்ணம் பலிக்காது என்றே நாம் கருதுகிறோம்.

காங்கிரஸ்கட்சி பதவி ஏற்ற இக்குறுகிய காலத்திலே அவர்கள் செய்திருக்கும் செய்கைகள் மிகவும் பாராட்டத் தக்கனவாகும். அரசியல் கைதிகளை விடுதலை செய்ததும், பத்திரிகைகளிடம் ஜாமினாக வாங்கிப் பறிமுதல் செய்தபணத்தை திரும்ப அவைகளிடம் கொடுக்கும்படி உத்திரவிட்டதும் சாதாரணமாய் எந்த மந்திரிகளும் செய்யக்கூடியவைதான் என்று சிலர் தர்க்கிக்கலாம், ஆனால் இதைக்கூட இதற்கு முன்னிருந்த மந்திரிகள் செய்யவில்லை. அப்படியே இது அவ்வளவாய் பாராட்டத்தக்க செய்கை அல்ல என்று வைத்துக் கொண்டாலும் காங்கிரஸ் மந்திரிகளின் மற்றைய செய்கைகளை அவ்வளவு எளிதாய் போற்றத்தக்கவையல்ல என்று கூறிவிட முடியாது. முதலில் சென்னை மந்திரிகள் நிர்ச்சுவான்தார்கட்கு சிறிது நன்மையளிக்கும்பொருட்டு மறுபைசல்கள் (Resettlement) செய்வதை எல்லாம் நிறுத்திவிடும்படி உத்திரவிட்டிருக்கிறார்கள் இரண்டாவது சிக்கனத்தை கையாளும் சம்பந்தமாய் அவர்கள் தாங்கள்

மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 சம்பளமும் வீட்டுப்படியாக கொஞ்சத் தொகையும் எடுத்துக்கொள்ளத் தீர்மானித்து விட்டார்கள். இங்கு இதற்குமுன் சர்க்கார் நிர்வாகத் தலைவர்களுக்கு சம்பளமாக கொடுக்கப்பட்டுவந்த தொகையையும் இப்பொழுது அவர்கட்கு கொடுக்கப்படும் தொகையையும் சிறிது பாகுபடுத்திப் பார்த்தல்

## வைஸ்ராய்—மகாத்மா சந்திப்பு

வெகு காலத்துக்குப் பிறகு டேல்லியிலிருந்து ஓர் நற்செய்தி இப்பொழுது வந்துள்ளது இது நாடெங்கும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஆடி மாதம் 20-ம் நாள் புதன்கிழமை யன்று வைஸ்ராயும் மகாத்மாவும் டேல்லியில் சந்தித்து பேசியுள்ளார்கள். இப்பொழுது ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி பதவிகளை ஏற்றுக்கொண்டமையால் வைஸ்ராய் தேசத்தின் ஒப்பற்ற தலைவரான மகாத்மாவை கண்டு அவருடன் தான் அளவளாவ விரும்புவதாய் அவரை அழைத்தது மிகவும் பொருத்தமான செய்கையாகும். அவர்கள் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட விவகாரத்தைப்பற்றி வாதிக்க சந்திக்கவில்லை. ஒருவருடன் ஒருவர் பழகிக்கொள்ளவே சந்தித்தனர். இருந்தாலும் இருவரும் கிராமப்புனருத்தாரணத்தில் ஆர்வங் கொண்டவர்கள். எனவே இதுபற்றி ஏதேது பேசியே இருப்பர். இவர்களின் இச்சந்திப்பு இனி நாட்டில் பூசல்கலாங்கள் ஒழிந்து நாடு நலம்பெற அறிகுறியாய் விளங்கும் என்று கருதுகிறோம்.

வேண்டும். இதற்குமுன் நான்கு நிர்வாகசபை மெம்பர்களும் மூன்று மந்திரிகளும் இருந்து வந்தனர் நிர்வாகசபை மெம்பர்கள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு ஐயாயிரத்துச் கொஞ்சம் சம்பளம் வாங்கினர்கள். எனவே அவர்கட்கு மொத்தம் மாதம் சம்பளமாக சுமார் இருபத்தோராயிரம் கொடுக்கப்பட்டது. மந்திரிகள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு நாலாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினர்கள். எனவே அவர்கட்கு மொத்தம் மாதம் சம்பளமாக பன்னிரண்டாயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. இதுபோக சட்டசபைத் தலைவருக்கு மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டது.

இப்படியாக மாதம் ஒன்றுக்கு பெரும் சம்பளமாக 35000 ரூபாய் கொடுக்கப்பட்டது. இப்பொழுது பத்து மந்திரிகள் இருக்கிறார்கள். அவர்கட்கு மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்நூறுவிதம் கணக்கிட்டுப் பார்த்தால் மாதம் ஒன்றுக்கு மொத்தம் மந்திரிகள் சம்பளம் ஐயாயிரமே. அசெம்பிளி தலைவருக்கும் சட்டசபைத் தலைவருக்கும் ஆளுக்கு மாதம் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபாய்விதம் ஒரு மாதத்திற்கு அவர்கட்கு மொத்தம் சம்பளவகையில் செலவு ஆயிரம். ஆகவே பெரிய அதிகாரிகள் என்ற வகையில் இப்பொழுது மாதச் சம்பளமாக ரூபாய் ஆறாயிரம் செலவிடப்படுகிறது. மந்திரிகளின் பார்லிமெண்டு செக்ரட்டரிகள் சம்பளமும் மந்திரிகளின் வீட்டுவாடகைப்படி முதலியவைகளும் அதிகமாய் போனால் ரூபாய் ஐயாயிரத்துக்குமேல் போகாதென்று கருதுகிறோம். இதையும் சேர்த்துப் பார்த்தால் மாதம் மொத்தம் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் சம்பளமாக ரூபாய் பதினோராயிரம் செலவிடப்படும். இப்படியாக இதற்கு முன் மாதம் 35000 செலவிடப்பட்ட இடத்தில் இப்பொழுது மாதம் பதினோராயிரம் செலவிடப்படுவது கவனிக்கத் தக்கது. காங்கிரஸ் மந்திரிகளின் செய்கையினால் இந்தவகை செலவில் மாதம் ஒன்றுக்கு சுமார் இருபத்திநாலாயிரம் ரூபாய் மீதப்பட்டுள்ளது. அதாவது ஒருவருடத்தில் இரண்டு லட்சத்து எண்பத்தெட்டாயிரம் ரூபாய் மீந்திருக்கிறது. இவ்வளவு பெருந்தொகை மிகுந்திருப்பதை நாட்டின் நன்மைக்காக வேறு ஏதாவது ஒருவகையில் செலவிடலாமன்றோ! மற்றும் காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் சம்பளத்தை குறைத்துக் கொண்டதோடு நில்லாது மற்றைய பெருந்தொகை சம்பளம் வாங்குபவர்களின் சம்பளத்தையும் குறைக்கவும் முயற்சி செய்ய போவதாய் தெரிகிறது. புதிதாக பெரிய உத்தியோகங்கள் சிருஷ்டிப்பதையும் தடுத்துவிடப் போவதாயும் தெரிகிறது. ஆகஸ்டு மாதம் முதல்தேதி முதற்கொண்டு புதிதாய் இரண்டு போலீஸ் டிப்டியூ சூப்பரிண்டெண்ட் பதவிகள் சிருஷ்டிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் மந்திரி சபை அப்பதவியை தற்சமயம் சிருஷ்டிக்க வேண்டாம் என்று உத்தரவிட்டுவிட்டது. காங்கிரஸ் மந்திரிகளின் இன்னோரன்ன செய்கைகள், அவர்கள் சிக்கனம் செய்வதில் எவ்வளவு ஆர்வமுடன் இருக்கிறார்கள் என்பதை காட்டுகின்றன அல்லவோ!

ஸ்தலஸ்தாபனங்கள் சம்பந்தமாயும் அவர்கள் புதியதோர் கொள்கையை கைக்கொண்டு விட்டார்கள். அவர்கள் ஸ்தலஸ்தாபனங்கட்கு அங்கத்தினர்களை நியமனஞ் செய்யும் முறையை அறவே நிறுத்திவிட்டார்கள். மற்றும் ஏற்கனவே இருக்கும் நியமனஸ்தானங்களை ரத்துசெய்யவும் சட்டசபையில் மசோதா கொண்டுவரப் போகின்றனர். கலால்முறை சம்பந்தமாய் அவர்கள் கையாளத் தீர்மானித்திருக்கும் கொள்கை இவைகள் எல்லாவற்றையும் விட

மெச்சத்தக்கதாகும். அவர்கள் முதலில் சேலம் ஜில்லாவில் பூரண மதுவிலக்கை ஏற்படுத்தப் போகிறார்கள். பின்னர் நாள்பட மற்றைய ஜில்லாக்களிலும் அதைப் புகுத்தப் போகிறார்கள். எனவே காங்கிரஸ் மந்திரிசபை சரியான வழியிலே வேலைசெய்ய ஆரம்பித்துள்ளது. அதன் முயற்சிகள் கைகூடுமென்றும், அவைகட்கு பூரணமாக பொதுமக்கள் ஆதரவு கிடைக்கும் என்றும் கூறுவது மிகையாகாது. காங்கிரஸ் மந்திரிகளின் இச்செய்கைகள் பாராட்டக் கூடியவையல்ல என்று யாராவது கூறமுடியுமா?

ஆனால் சென்னை காங்கிரஸ் மந்திரிசபை ஒரு விஷயத்தில் மிகக் கவனமாய் இருக்க வேண்டும். அதாவது எல்லா வகுப்பினரின் உரிமைகளையும் கோரிக்கைகளையும் திருப்தி செய்வதில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இம்மாகாணத்தில் ஒரு விநோதமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்த உண்மையை மறைக்கவோ மறக்கவோ இயலாது. அந்த விநோதமான, உண்மையான நிலை என்ன? ஏனைய இடங்களில் எல்லாம் சிறுபான்மைச் சமூகத்தினரே தங்கட்கு எல்லா இனத்திலும், சர்க்கார் உத்தியோகத்திலும் சம உரிமை தங்கட்குரிய பங்கு வேண்டுமென்று போராடுகின்றனர். ஆனால் இங்கோ பெரும்பான்மைச் சமூகத்தார் தங்கட்கு சர்க்கார் சேவையிலும் மற்றையவைகளிலும் தங்கட்குரிய பங்கு, உரிமை வேண்டுமென்று போராட வேண்டியதாயிருக்கிறது இதுதான் அந்த விநோதமான, உண்மையான நிலையாகும். இது சம்பந்தப்பட்டமட்டில் காங்கிரஸ் மந்திரி சபை தன்னையறியாதே ஒரு தப்புச் செய்துவிட்டாலும், அதற்கு நாட்டில் ஆதரவு சிறிது குறையும். இதற்கு முன்னிருந்த மந்திரிகளை நம்மக்கள் ஆதரித்ததிற்கு, அவர்கள் தங்கட்கும், அதாவது பெரும்பான்மைச் சமூகத்தாருக்கும் ஏனையோர்க்கும் அவரவர்கட்கு உரிய பங்கு உரிமைகளை அளித்து ஏதாவது நன்மை செய்வார்கள் என்று எதிர்பார்த்ததே காரணம். ஆனால் அவர்களோ மாதா மாதம் சம்பளம் வாங்கிக்கொண்டதைத் தவிர வேறொரு நன்மையும் செய்யவில்லை அதனாலே மக்கள் அவர்களை அதிகாரத்திலிருந்து ஓட்டி, அப்பதவியில் காங்கிரசை வைத்துள்ளார்கள். காங்கிரஸ் மந்திரிசபை எல்லோருக்கும் நீதி வழங்கும் என்ற உறுதியான எண்ணத்துடனே இவ்விதம் செய்துள்ளார்கள். எனவே காங்கிரஸ் மந்திரி சபை இதை மனதில் வைத்துக்கொண்டு எல்லா சமூகத்தினருக்கும் நியாயம் வழங்கும் முறையிலே காரியம் செய்யவேண்டும். நாம் மேலே குறித்தபடி காங்கிரஸ் மந்திரிசபை தன்னையறியாதே, செய்யவேண்டுமென்ற கருத்தில்லாதே ஒரு பிசகு செய்துவிடுமாயின், அது அதன் விரோதிகள் மீண்டும் தலைதூக்க இடங்கொடுத்துவிடும். இப்பொழுது தங்கூட காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே 'பார்ப்பனரல்லாதார் கட்சி'

ஒன்று ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டதாய்த் தெரிகிறது. காங்கிரஸ் மந்திரிகளை வாழ்த்தி மதுரை முனிசிபாலிட்டியில் தீர்மானம் நிறைவேற்றியபோது, அத்தீர்மானத்திற்கு 'காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே பார்ப்பனரல்லாதார் கட்சி ஒன்று நியமிக்க பிரயத்தனப்பட்டவர்களை மந்திரி சபையில் சேர்க்காததுபற்றியும் முதல் மந்திரியை வாழ்த்துகிறோம்' என்று ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதிலிருந்தே அவ்வித முயற்சி நடந்திருக்கிறது என்று வெளிப்படையாய்த் தெரிகிறது. ஆகவே காங்கிரஸ் மந்திரிகள் தங்கள் எதிரிகள், தாங்கள் வகுப்புவாதிகள் என்று தூற்றியவர்கள் மீண்டும் தலைதூக்குவதற்கு ஏதுவான காரியங்களை செய்யமாட்டார்களென்று நம்புகிறோம்.

## சாரணர் இயக்கம்

சாரணர் இயக்கத்தின் தந்தையாகிய பேடன்-பௌவல் பிரபு இந்தியாவுக்கு வந்து திரும்பித் தன் சொந்த ஊர்போய்ச் சேர்ந்த வேலை என்ன வேலையா? அவர் அங்குபோய்ச் சேர்ந்ததுமே அவர் வாக்கில் சனி புகுந்துவிட்டான்போலும். பாவம்! இது அவருக்கு எப்படித் தெரியும்? தெரிந்திருந்தால் வாயைத் திறந்திருக்கவேமாட்டார். இது தெரியாது வாயைத்திறக்கவே சனி அவரை உளறும்படி செய்துவிட்டான். அந்தோ! அதன் பயன் என்ன? பிள்ளையாரைப் பிடித்த சனி அரசமரத்தையும் சேர்த்துப் பிடித்ததாம். அதைபபோல் அவரது வாக்கில் புகுந்த சனி அவர் தோன்றுவித்த சாரணர் இயக்கத்தையும் பிடித்துவிட்டான். இப்பொழுது இந்தியாவில் எங்கும் அவரைப்பற்றி கண்டனம், சாரணர் இயக்கம் அல்லோலப்படுகிறது. அவர் இந்தியாவிலிருந்து திரும்பி லண்டன்போய் சேர்ந்ததுமே 'இந்தியர்கட்கு உடல் நலம் இல்லை. அவர்களிடம் நன்னெறியில்லை' என்று கூறினாராம். அத்துடன் நிற்கவில்லை, இந்திய பாஷைகளில் 'ஹானர் (Honour)' என்ற ஆங்கிலப் பதத்துக்குச் சரியான சொல் இல்லையாம். இவ்வளவும் யாரிடத்தில் சொன்னார்? ராயிட்டர் ஏஜென்ஸி பிரதிநிதியிடம் சொல்லிவிட்டார். அந்தப் பிரதிநிதி சும்மா இருப்பாரா? அவர் தமக்கு நல்ல செய்தி கிடைத்ததென்று உடனே அதை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். அச்செய்தி வந்ததுமே முதலில் பத்திரிகைகள் அவரை கண்டித்தன. சிற்சில பொதுக்கூட்டங்களிலும் கண்டிக்கப்பட்டன. என்ன கண்டனம்? 'இந்தியர்கட்கா நன்னெறியில்லை. என்ன அகம்பவமான பேச்சு இது? இப்படிப்பட்ட அகம்பாவம் படைத்தவர்களுடன் நமக்குத் தொடர்பு வேண்டவே வேண்டாம்' என்ற கண்டனந்தான். முதலில் இவ்வாறு சாதாரணமாக நடந்து வந்த கண்டனம் பம்பாய் கார்பொரேஷனின் செய்கையால் தீவிரப் போக்கை அடைந்துவிட்டது. பம்பாய் கார்பொரேஷன் தனது

ஆதிக்கத்தின் கீழிருக்கும் பாடசாலைகளிலுள்ள சாரணச் சிறுவர் சிறமி ஸ்தாபனங்களை பேடன்–பௌவல் சாரண இயக்கத்திலிருந்து அறவே பிரித்து, அதை தேசிய முறையில் அமைக்கத் தீர்மானித்து விட்டது. அதன் பிறகே மற்றைய ஸ்தாபனங்கள் அதைப் பின்பற்ற ஆரம்பித்தன ஆந்திர நாட்டில் சில கல்லூரிகளிலுள்ள சாரணர்கள் தங்கட்கும் அவ்வியக்கத்துக்குமுள்ள தொடர்பை அறுத்துக் கொண்டனர். சென்னை மாகாணச் சாரணர் சங்கமும் அதிலிருந்து அறவே அறுத்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டது. இவைகள் லார்டு பேடன்–பௌவலுக்குச் சரியான பாடம் கற்பிக்கும் என்று கருதுகிறோம். நம்மை சமத்துவமாக சகோதர பாவத்துடன் நடத்தாத செருக்குமிகுந்த எவருடனும் நாம் தொடர்பு வைத்துக் கொள்ளாதிருத்தலே மானமிக்க செய்கையாம். 'மதியாதார் வாசல் மிதியாமை கோடியுறும்' என்பது நமது முன்னோர்கள் கைக் கொண்ட கொள்கையன்றோ? நமது சுயமதிப்பை காத்துக்கொள்ள இதைவிட வேறு சிறந்த வழியுண்டோ? எனவே பேடன் பௌவல் பிரபுவின் சாரண இயக்கத்துடன் நாம் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளாதிருப்பதே மேல். ஆனால் நம்மவர்களிலே சிலர் அவரைத் தாங்கிப் பேசுவதின் தத்துவத்தைத்தான் எம்மால் அறிய முடியவில்லை. அவர்கள் அவர் அவ்விதம் சொல்லி இருக்கமாட்டார் என்றும், உண்மையை தெரிவிக்கும்படி அவரை கேட்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். இந்நாள்வரை அவரிடமிருந்து அதற்கு மறுப்போ அல்லது வேறு பொருள்படக் கூறியதாக ஒரு அறிக்கையோ வந்தபாடில்லை. இந்தியாவில் கண்டனங்கள் நடைபெறுவதும், சாரணர் இயக்கம் அலங்கோலப்படுவதும் அவருக்கு இதுவரை தெரியாமலா இருக்கும்? அவருக்குத் தெரிந்தே இருக்கும். ஆனால்தான் சொன்னதை இல்லை என்று எப்படி மறுப்பதென்பது யோசனை போலும். ஏன்? அவர் மறுத்தால் உடனே ராயிட்டர் பிரதிநிதி தன்னிடத்தில் முதலில் கூறியதை இப்பொழுது இல்லை என்று ஒரு பெரிய மனிதர் மறுக்கிறாரே என்று தன் கைவரிசையைக் காட்ட முற்பட்டுவிடுவார். இதை எல்லாம் உத்தேசித்து 'மௌனம் கலக நாஸ்தி' என்ற கொள்கையை கைக்கொண்டுவிட்டார் பேடன் துரை. அதுவரை அவர் விவேகிதான்.

இனி, இதுவரை இருந்துவந்த சாரணர் இயக்கத்தின் நிலை என்ன, அதை அழித்து விடுவதா என்பது ஒரு கேள்வி? அதை அழித்துவிட வேண்டிய அவசியமில்லை. அதை நமது நாட்டின் நிலைமைக்கு ஏற்றாப்போல் திருத்தியமைக்கவேண்டும் அவ்வியக்கம் எந்த அரசியல் கட்சியின் சார்பிலும் வேலை செய்யக்கூடாது. அது பொதுநலத் தொண்டில்மட்டுந்தான் ஈடுபடவேண்டும். சமுதாயத் துறையில் அது வேலை செய்ய எவ்வளவோ இடமிருக்கிறது. சாரணர் இயக்கத் தலைவர்கள் அதை தேசிய முறையில் திருத்தி

அமைத்து அதை பொதுநலத்தொண்டின் நடுநாயகமாய் விளங்கச் செய்வர் என்று நம்புகிறோம்.

## சென்னை மந்திரிகள்

1. திருவாளர் ஸி. ராஜகோபாலாசாரியர்:—முதன் மந்திரி. பொக்கிஷம், போலீஸ், (உள்நாடு) இலாகாக்கள் இவரிடமிருக்கிறது. திரு ஏ. காளேசுவர ராவ் இவருக்குக் காரியதரிசி.

2. திரு டி. பிரகாசம்:—வரி வருமான இலாகா மந்திரி. திரு. டி. விசுவநாதன் இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

3. திரு. டி. எஸ். எஸ். ராஜன்:—சுகாதார இலாகா மந்திரி. திரு. ஏ. ஷெட்டி இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

4. டாக்டர் சுப்பராயன்:—சட்டம், கல்வி இலாக்காக்களின் மந்திரி. திரு. ஸி. ஜே. வார்க்கி இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

5. திரு. ஆலிஜனாப் யாகூப் ஹாஸன் சேட்:—மராமத்து இலாகா மந்திரி. திரு. கே. ஆர். காந்த் இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

6. திரு. வீ. ஐ. முனிசாமி பிள்ளை:—விவசாயம், கிராமப் புனருத்தாரண இலாகா மந்திரி. திரு. என். எஸ். வரதாச்சாரி இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

7. திரு எஸ். ராமநாதன்:—விளம்பர இலாகா மந்திரி. திரு. எம். பாப்பிரீ இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

8. திரு. வி. வி. கிரி:—தொழிலாளர், கைத்தொழில்கள் இலாகா மந்திரி. திரு. பி. எஸ். என். மூர்த்தி இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

9. திரு. கே ராமன் மேனன்:—கோர்ட்டுகள், சிறைச்சாலைகள் இலாகா மந்திரி, ஆலிஜனாப் ஏ. கே. எம். மைதீன் மரைக்காயர் இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

10. திரு கோபால் ரெட்டி:—ஸ்தலஸ்தாபன இலாகா மந்திரி. திரு. எம். பக்தவத்சலம் இவருக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர்களில் கனம் டாக்டர் சுப்பராயனும் கனம் திரு. முனிசாமிப் பிள்ளையுமே சிறைவாசம் செய்யாதவர்கள். திரு. பிள்ளை தாழ்த்த வகுப்பை சார்ந்தவர்.

திரு. புலுசுசாம்பமூர்த்தி அசெம்பிளி தலைவராயும் டாக்டர் யு. ராமராவ் கவுன்சில் தலைவராயும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

# நான் விட்ட சரடு

[M. ஜேயி]

நான் 5 வயதுள்ள ஒரு கிழவன். எனக்கு 7 வயதுள்ள ஒரு பேரன் இருந்தான். 5 வயதுள்ளவன் கிழவனா? அவனுக்கு 7 வயதுள்ள பேரனும் உண்டா? எனக் கேள்வி கேட்டு விடாதீர்கள். சைபருக்கு மதிப்பில்லை என்று விட்டேன். அதையும் திருத்தி 50 என எழுதியும் விட்டேன்.

என்னுடைய பெயரைச் சொல்ல மறந்துவிட்டேன். 'ஏன் சிரிக்கிறீர்கள்? ஆகையால் நான் என் பெயரைச் சொல்லவில்லை. என் பெயரைச் சொன்னால் செவிடனுக்கும் வெறுப்புண்டாகும் என்றால் நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்? அது இருக்கட்டும், எனது பேரன் தினந்தோறும் கதை சொல்லும்படி என்னை வற்புறுத்திக்கொண்டே வந்தான். நானும் பாட்டி கதைகளைச் சொல்லி அவனைச் சந்தோஷப் படுத்திக்கொண்டே வந்தேன்.

ஒருநாள் அவன் என்னை ஒரு கதை கேட்கும்போது

நான்:—அடே போ, இவ்வளவு நாளாய் நான் இக்கதையைச் சொல்லவேயில்லை.

பேரன்:—எனக்குத்தான் சொல்லவில்லையா? அல்லது மற்றவர்களுக்குமா?

நான்:—உனக்கும், மற்றவர்களுக்குந்தான்

பேரன்:—ஏன்?

நான்:—எனக்குத் தெரிந்தால்தானே சொல்லுவேன்.

பேரன்:—இப்பொழுது இக்கதையை எங்கு படித்தாய்?

நான்:—படிக்கவா வேண்டும் உம், உம்.

பேரன்:—பின் எப்படித் தெரியும்?

நான்:—இன்று தோட்டவேலை செய்ய வேறொருவனை நியமித்து விட்டேன். லீவும் எடுத்துக்கொண்டேன்.

பேரன்:—லீவு எடுத்துக்கொண்டால்..........

நான்:—சொல்லுகிறேன் கவனமாய்க்கேள்.

இப்பரத நாட்டிலே, கோதாவரி கிருஷ்ணா நதிகள் பாயும் செழிப்பான இடத்திலே முன்னொரு காலத்தில் சித்தலைச்சாத்தனார் என்ற பெரியார்.............

பேரன்:-சரி, சரி, சரி நிறுத்து, போதும் இக்கதை. இது எனக்கு

விளக்கெண்ணை போலிருக்கிறது. கதையை பூராவும் கேட்டுவிட்டால் பேதியாகிவிடும்போல் தோன்றுகிறது. வேறொரு கதை சொல்லு

நான்:—இக்கதை ஒரு பக்திக்குரிய நல்ல கதை.

நான்:—சரி, வேறொன்று சொல்லுகிறேன் கேள்.

பேரன்:—பேஷ், சரி சொல்லு

நான்:—ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு விறகுவெட்டி இருந்தானாம்.

பேரன்:—இப்படிப்பட்டக் கதைதான் வேண்டும்.

நான்:—சரி, கதை சொல்லும்போது மத்தியில் பேசக்கூடாது.

பேரன்:—சரி, கதையைச் சொல்லு.

நான்:—ஒரே ஒரு ஊரிலே ஒரு விறகுவெட்டி. அவனுக்கு ஒரு காலத்தில் 10 ஏர்மாடுகள் இருந்தன. அதோடு அவனுக்குக் கொஞ்சம் நிலமும் இருந்தது.

பேரன்:—பின் ஏன் அவன் விறகுவெட்ட வேண்டும்.

நான்:—குறுக்கே பேசக்கூடாது என்றால் ஏன் அவசரம்?

பேரன்:—சரி, இனிப் பேசவில்லை.

நான்:—பஞ்சகாலம் ஏற்பட்டதால் 10 ஏர்மாடுகளையும் விற்றுத் தின்றுவிட்டுப் பிறகு தன் காடுகளில் உள்ள மரங்களையாவது வெட்டி தன் உயிரைக்காப்பாற்ற நினைத்தான்போலும். ஆனால் ஒருநாள் காட்டுக்கு வரி வசூலிக்கும் பொருட்டு ஒரு கவர்ன்மெண்ட் (Government) ஆள்வந்து வரிகொடுக்கும்படி கேட்டான்.

விறகு வெட்டியிடம் அரையில் ஒரு கோவணமும் அன்றைக்கு விறகுவிற்ற இரண்டணாவும் தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் அவன் 'இப்பொழுது என்னைச் புரட்டிப் புரட்டி அடித்தாலும் செல்லாத காசும் கிடைக்காது. இந்த வருஷம் மழையே இல்லை என்று தெரியாதா?' என்றான்.

வந்தவன்.—வரி கொடுக்காவிட்டால் பார் விடப்போகிறார்கள்?

விறகு வெட்டி:—(தனக்குள் இது என்னடா சனியனாய் இருக்கிறது. நாம் காடு வைத்திருப்பதும் போதும். அதனால் அடையும் பலனும் போதும்) சரி, ஐயா நாளைக்குவந்தால் பணம் எப்படியும் கொடுத்து விடுகிறேன்.

வந்தவன்:—(தனக்குள் உண்மையாகவே இவனிடம் பணம் இல்லை போலும்நாளைக்கு இவனைவிடுவதா) சரி, நாளை கண்டிப்பாய் வருவேன்.

விறகுவெட்டி:—சரி, போய்வாரும் (தனக்குள் நாளைக்கு எப்படியும் ஏமாற்றிவிடலாம் என்று நினைத்துக் கொள்ளுகிறான்)

மறுநாள விறகு வெட்டி கோடாரியுடனும், கோவணத்துடனும் காடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். அவனுடைய கண்கள் ஏதோ ஒரு உருவம் தன்னை நோக்கிவருவதாகக் கண்டன. சற்று உற்றுப்பார்த்து அவ்வுருவம் வரிவாங்க வந்தவன் என்று அறிந்தான். உடனே பக்கத்தில் இருக்கும் பிள்ளையார் கோவிலுக்குள் மறைந்துகொள்ள ஓடினான்.

அவனுடைய பார்வை ஆடையில்லாத ஒரு கற்சிலைமேல் (சுவாமி) சென்றது. மறுகணம் கண்களில் நீர்ததும்ப அழலாயினன். அவ்வுருவத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு 'ஐயோ நான்தான் பத்து ஏர்மாடுகள் உடையவனயிருந்து இக்கோவணத்துடனும் கோடாரியுடனும் இருக்கிறேன். நீ எத்தனை ஏர்மாடுகளை வைத்திருந்து இப்படி ஒன்றுமில்லாமல் நிர்வாணமாய் இருக்கிருய்?' என்று சொல்லி அழுதான்.

வந்தவன் 'விறகுவெட்டி என்னைக் கண்டவுடன் எங்கேயோ ஓடிவிட்டான். அவனை இன்று எப்படியாவது கண்டுபிடித்து வரி வாங்குவதே சரி' எனத் தேடினன். பிள்ளையார் கோவிலிருந்து அழும் சத்தம்கேட்டது. சென்றுபார்த்தான். விறகுவெட்டி கற்சிலையைப் பிடித்துக்கொண்டு அழக்கண்டான். உடனே கோபம் பொங்கிற்று. மறுநிமிஷம் விறகுவெட்டிக்கு கன்னம்வீங்கிற்று. கற்சிலையும் எடுத்து எறியப்பட்டது

கற்சிலையிருந்தவிடத்தில் ஒரு பணப்புதையல் இருக்கக்கண்டு அது இவ்விறகு வெட்டியினுடையதே என்று நினைத்து வரிப்பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, நமக்குச் செலுத்தவேண்டிய பணத்தை எடுத்துவர இங்கு வந்தவனை நாம் அடித்தோமே என்று வருத்தப்பட்டவனய் விறகு வெட்டியைப் பார்த்துத் தன்னை மன்னிக்கும்படியும், வரிப்பணம் எடுத்துக்கொண்டு மீதியை அங்கேயே வைத்திருப்பதாயும் தெரிவித்து பின்னும் கேட்கலாயினன்.

வந்தவன்:—நீ ஏன் அழுதாய்?

விறகுவெட்டி:—இச்சிலைக்கு ஒரு ஆடையுமில்லாமல் இருக்கிறதே என்றுதான் அழுதேன்.

வந்தவன்:—இவனே பரோபகாரி, தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காக்கின்றவன்' என்று வணங்கிச் சென்முன். விறகுவெட்டி புதையலை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினன்.

---

## மதிப்புரை.

'வறுமைப்பேய்' அல்லது 'வாலிப ஜமீன்தார்' என்ற நாடக நவீனப் புத்தகம் ஒன்று வரப்பெற்றேம். இது பணச்செருக்கால் ஏற்படும் தீமையைத் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. இது சினிமாப் பிடிக்க ஏற்ற முறையில் இதன் ஆசிரியராலேயே வகுத்து எழுதப்பட்டிருக்கிறது. சினிமாவுக்கு இது ஏற்றதோர் கதையாகும். செல்வச் செருக்கின்தீமையை எடுத்துக் காட்டுவதுடன் பின்னர் அதனல் கஷ்டங்கள் பல அனுபவித்ததின் பயனக பொதுநலத் தொண்டில் ஈடுபடும் சிறப்பையும் விளக்கிக்காட்டுகிறது. இதன் ஆசிரியர் திரு. எ. அரங்கநாத முதலியார். விலை ரூபாய் ஒன்று. வேண்டுவோர் நெ 27. ஸ்டான்ஸ்ரோட் பெரம்பூர் பாரக்ஸ், சென்னை. என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

# பிறநலம் பேணல்

['குமாரன்']



என் இன்னுயிர்த் தோழி கமலாவுக்கு,

கமலா! உனக்கு நான் கடிதம் எழுதி ஏறக்குறைய நான்கைந்து மாதங்களிருக்கலாம். என்ன செய்வது? வேலை ஒழிந்தால்தானே. வேலை ஒழிந்தாலும் சமய சந்தர்ப்பங்கள் ஒத்துவர வேண்டாமா?

சிலதினங்களுக்கு முன் நீ எழுதிய கடிதத்தில் மனித வாழ்வு எப்படியிருக்க வேண்டுமென்று கேட்டிருந்தாய். இது ஒரு சாதாரணக் கேள்வியல்ல. இந்தப் பெரிய கேள்வி இப்படித் திடீரென உன்னுள்ளத்தில் தோன்றக்காரணம் என்னவோ! ஆனால் மனித வடிவந்தாங்கிய யாருக்கும் இக்கேள்விக்குரிய விடை தெரிந்திருக்க வேண்டியதுதான்.

மனித வாழ்க்கை ஒரு பெரிய கடல்போன்றது. அதன் கொள்கைகளும், போக்கும் கடலலைகள்போல் எண்ணிறந்தன. ஆகவே மனித வாழ்க்கைக்கு ஒரு சேரிய திட்டம் என்றால் அவ்வளவு சுளுவாக வகுத்துவிட முடியாது. ஆனாலும் வாழ்க்கைத் துறையில் மிக அடிப்படையாகவுள்ள 'பிறநலம் பேணல்' என்ற கொள்கையைப் பற்றி ஈண்டு சிலவரிகள் வரைய விரும்புகிறேன்.

மனிதன் எப்போதும் தனித்து வாழக்கூடியவனல்ல. கூடி வாழ்வதாகிய சிறந்த முறையைத் தன் அனுபவத்தில் கொண்டவன். கூடிக்குலாவுதலில்தான் மனிதன் இன்பங்காண்கிறான். அத்தகைய வாழ்வில்தான் மனிதனுக்கு இளமைதொட்டே மோகமுண்டாகிறது. எனவே சேர்ந்துவாழும் வாழ்க்கையே, மனிதனுக்குரிய இயற்கை வாழ்வாகிவிட்டது.

இத்தகைய இயற்கை வாழ்வில் பழகவேண்டிய மனிதன் காலப் போக்கில் சில கொள்கைகளைத் தழுவவேண்டியவனானான். வாழ்க்கைக்கு இன்றியமையாத சில சட்டதிட்டங்களைச் செய்துகொண்டான். பிறரது நலத்தைப் பாதிக்காதிருக்கவேண்டி எவனும் சில ஒழுக்கு திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டுவது அவசியமன்றோ!

தொன்று தொட்டு நம் நாட்டவர் வாழ்வு இத்தகைய சமூக ஒழுங்குகளுக்குச் சிறிதும் முரண்படாவண்ணம் நடைபெற்று வந்தது. அது காரணமாக அச்சட்டங்கள்பாற்பட்ட நூல்கள் பல

வெளிப் போந்தன. கீதை, திருக்குறள்போன்ற உண்மையான நூல்கள் பலமக்கள் வாழ்வின் லட்சியங்களை, அமைப்பு முறைகளை பலபடவிளக்கிக் கூறுகின்றன.

கமலா! பார்த்தனுக்குப் பகவானால் உபதேசிக்கப்பட்ட அந்தக் கீதையின் திரண்ட கருத்து என்ன தெரியுமா? உலகத்தில் மனிதன் பிறருக்காக வாழவேண்டும் என்பதுதான். திருவள்ளுவ நாயனார் அருளிய தமிழ் வேதத்தின் நுண்பொருளும் அதுவே யாகும். ஆகவே நம்முன்னோர்கள் கையாண்டுள்ள—தங்கள் நூல் களின்மூலம் விளக்கிக் காட்டியுள்ள வாழ்க்கை முறையின் ரகசியம் 'பிறர்க்குரியனாக வாழ்வாயாக' என்பதுதான்.

உண்டிக்கும், உடைக்கும் உலகில் ஒரு பெரிய போராட்டம். இது ஓய்வின்றி எப்பொழுதும் நிகழ்ந்துகொண்டிருப்பதுதான். இந்தப் போராட்டத்தில் மனிதன் இறங்கியதே தன் நலத்தையே பெரிதும் நாடத் தொடங்குகிறான் அதனால் பிறர்நலம் நாச முறுவதை அவன் தெரிந்தோ தெரியாமலோ கவனிக்காதவன்போல இருந்து விடுகிறான். இதனால் போட்டியும், போராட்டமும் மிகுகின்றன. ஒவ்வோர் சமயங்களில் இவை வரம்புகடந்து மிகுமேல் மன்பதைக்கு அழிவு உண்டாக்கவுஞ் செய்கிறது.

தனி வாழ்வில் இன்பமில்லை என்பதை மனிதன் அறியாம லில்லை ஆனாலும் என்னவோ ஒருவித பேய் மயக்கத்தில் மனிதன் தன்னை, தன் நிலைமையை மறந்துவிடுகிறான்.

கமலா! சுயநலம் என்பது உண்மையில் ஒரு பேய் போன்றது; அந்தப் பேய் மனிதனைப் பிடித்துக்கொண் டிருக்குமளவும் அவன் முன்னுக்கு வருதல் இயலவேயியலாது. அது மனிதனுக்குச் சமயங் களில் நல்லுணர்வு போதிக்கவல்லதான மனசாட்சியைக்கூட அமுக்கித் தள்ளிவிடும்.

சுயநலவாழ்வு மனிதவாழ்வைக் கரைப்படுத்தவல்லது. ஆகவே அதை மேற்கொண்டொழுகும் எந்த மனிதனும் மனிதனாக எண்ணப் படான் ஏனெனில் கூட்டு வாழ்க்கையில் இன்பங் காண்பதான மனித லட்சியத்தை அவன் தன் சுயநலமாகிய வாளால்வெட்டி வீழ்த்தி விடுகிறான்.

கமலா! இற்றைநாளில் மக்கள் கொண்டுள்ள வாழ்வின் பெரும் பாகம் இந்தச் சுயநலப்பேயின் ஆட்சி நிறைந்ததாகவே யிருக்கிறது. இதைத்தான் இவர்கள் நாகரிக வாழ்வென்று கருதுகின்றனர். 'அவனவன் தன்தன் பாட்டைப் பார்த்துக்கொள்ளுதலாகிய இந்த வாழ்வுதான் உயரிய நாகரிக வாழ்வாம்! கமலா! நம் சகோதர சகோதரிகளது மனப்பான்மை எப்படிப் போய்விட்டது பார்த் தாயா? அவர்களது இந்த நிலைக்கு நாம் பெரிதும் இரங்கவேண்டும்.

பரோபகாரம் பிறந்து வளர்ந்தது நம் நாட்டில் என்பது உனக்குத் தெரியும். அத்தகைய நம் நாட்டிலே பொதுநல வாழ்வை

# விவசாயம்

[ரஹி]

உழைக்க வேண்டுமென்பது ஒரு இயற்கைச் சட்டம். பொதுவாக எல்லா உயிர்களுக்குப், சிறப்பாக மனிதனுக்கும் இச்சட்டம் பொருந்தும். எனவே, ஒவ்வொருவரும் ஏதாவதொரு தொழிலை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அவ்விதம் செய்யுந் தொழில்களையெல்லாம் சீர்தூக்கி 'நெய்யும் தொழிலுக்கு நேரில்லை' என்றார் வள்ளுவனார். எனினும், இந்நெய்தலாகிய தொழிலுக்கு வேண்டிய பஞ்சு விவசாயத்தாலேயே கிடைக்கிறபடியால் எல்லாத் தொழில்களுக்கு தலையாயது விவசாயம் என்றால் மிகையாகாது.

விவசாயத்திற்கு கிருஷி, வேளாண்மை, பயிர்த்தொழில், உழவு எனப் பல பெயர்களுண்டு. நிலங்களில் நெல், கோதுமை முதலிய பயிர்கள் விளையும் நிலம் நன்செய் என்றும் இதர தானியங்கள் விளையும் நிலம் புன்செய் என்றும் சொல்லப்படும்.

பயிரிடுவோர் தக்க காலங்களில் நிலத்தை உழவேண்டும். அகல உழுவதை ஆழ உழு என்னும் முதுரையை மேற்கொண்டு ஆழ

---

மேற்கொண்ட உத்தமர்கள் இப்போதும் இல்லாமற் போகவில்லை. 'பெருங்காய மிருந்த பாண்டம்' என்பார்களே அதுபோல நம் பாத கண்டத்திலும் அவ்வப்போது உத்தமர்கள் தோன்றிக்கொண்டுதானிருக்கிறார்கள்.

மனிதன் ஆற்றும் வினைகள்பல அவ்வினைகள்யாவும் சுயநலமற்றவைகளாய்ப் பரிணமிக்க வேண்டும்; அங்கேதான் அவன் உண்மை மனிதனாகிறான். எந்த வினையில் ஒருவன் ஈடுபடினும் அதன் முடிவு பிறநலத்தில் காணப்பட வேண்டும். மனிதன் பிறருக்காக வாழவேண்டும் என்னும் ரகசியம் இதுதான்.

மனிதனது உயரிய ஒழுக்கத்தால், அவனது பொதுநல மனப்பான்மையால் அவனுடைய புத்திரர்களும் உத்தமர்களாக—பொது நலத்தொண்டில் ஆர்வமுடையவர்களாக—வாழ்வர். அப்போது நாடு எவ்விதப் பூசலுமற்று எல்லாவகை நலன்களுமுற்றுத்திகழும்.

கமலா! நேரமாயிற்று. வீட்டு வேலை தலைக்குமேல் கிடக்கிறது. அடுத்தமுறை, சமயம் கிட்டும்போது உன்னைச் சந்திக்கிறேன்.

சிவகாமி.

உழுவதே சிறந்ததாகும். உழுதபின் விதை விதைப்பார்கள். விதைத்தற்குரியகாலம் ஆடி மாதமே. 'ஆடிப்பட்டம் தேடிவிதை' என்றொரு பழமொழியும் வழங்குகிறது. பயிர் கொஞ்சம் முளைத்ததும் அதை நசுக்கக் களைகள் முளைக்கும். அவைகளைப் பிடுங்குவார்கள். தக்க காலங்களில் நீர்பாய்ச்சுவார்கள். கதிர் முற்றினதும் அறுவடை செய்வார்கள். நல்ல எருவைப் போட்டால் பயிர் செழிப்பாக வளரும். மிகுந்த லாபம் பெறக் குடியானவன் பிரதிதினமும் சென்று தன் நிலத்தை பார்வையிட்டுக் குற்றங்குறைகளை நீக்கவேண்டும். 'உடையவன் கண்ணோடாப் பயிர் கெடும்'

ஏர், கலப்பை, பரம்புச் சட்டம், மாடுகள் முதலியன பயிர்த் தொழிலுக்கு இன்றியமையாத சாதனங்களாம். பயிர் செழிப்பதற்குக் பருவகால மழையும் அத்தியாவசியமானது. 'மாரியல்லது காரியமில்லை' அன்றோ!

விவசாயத்தில் முன்னேற கல்வியும் அவசியம். பல விடங்களில் ஒரு பயிர் பயிரடப்படும் விதம், எருக்களின் தன்மை, இடம் பொருள் ஏவல் முதலியவற்றைத் தக்கவாறு ஆராய்ந்து விவசாயத்தை நெறிநின் நடத்தவும், தன்னிடம் ஊழியம் செய்பவர்களை அன்போடு ஆதரிக்கவும் கல்வியே வழிகாட்டியாய் இருக்கிறது.

விவசாயம் மிகுந்த சிறப்புடையதென்று புலவர் பெருமக்கள் பாராட்டி யிருக்கிறார்கள்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்'

என்று புலவரேறு திருவள்ளுவர் கூறியிருக்கிறார். இன்னும் 'மேழிச் செல்வம் கோழைபடாது' சீரைத்தேடின் ஏரைத்தேடு' என்றெல்லாம் அறிஞர் அறிவுறுத்தி யிருக்கின்றார்கள். விவசாயத்தினால் வெகு சீக்கிரம் உணவு கிடைக்கிறது. அதனால் பலருக்கு நிறைந்த பலனும் நீடிய இன்பமும் கிட்டுகிறது.

இவ்வித பல நன்மைகளின் மத்தியில் சில தீமைகளும் இருக்கின்றன. மண்ணைத் தோண்டுவதினால் வெட்டுவாயில் நசுக்குண்டு எத்தனையோ பூச்சிகள் இறக்கின்றன. உழும்போது பூச்சிகள் காலைப் புண்படுத்துகின்றன. வெயிலில் ஏர் உழும்போது மாடுகள் கதிரவனின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் வேதனைப்படுகின்றன.

எனினும் விவசாயமில்லையேல் உலக நடவடிக்கைகளில் யாதொன்றும் நடைபெறாது. அன்னத்துக்கு வழியில்லாவிட்டால் துன்பக்கேணியில் விழுந்து துடிக்க நேரிடுமன்றோ? அடுக்கடுக்காய் கஷ்டம் நேரிட்டாலும் கைசோரவிடாது விவசாயத்தை பழைய உன்னத ஸ்தானத்துக்குக் கொண்டுவர வேண்டியது நம்மவர் கடன். சுயேச்சை வாழ்வைத் தரக்கூடிய சாதனங்களில் இதுவுமொன்றென்பது நாம் மறக்கவொண்ணாத உண்மையாகும்.

# கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

## அத்தியாயம் 31.

### உண்மைக் குற்றவாளி தண்டனை!

நீதிபதி மிஸ். சரோஜினியை நோக்கி, 'மறைந்த கைதி பிடிபட்டானா?' எனக் கேட்க, 'பிடிப்பட்டான்' எனப் பதிலுரைத்தாள். 'எவ்வாறு? இப்பொழுது எங்கிருக்கின்றான்?' எனக்கேட்டார்.

'மேலமாட வீதி 49 நம்பர் பாழடைந்த வீட்டில் பொறுக்கியெடுத்த காகிதத்துண்டுகளின் கையெழுத்தையும், கமலகாந்தனுக்கு வரையப்பட்டிருந்த காகிதத்தின் கையெழுத்தையும் சற்று உற்றுக்கவனித்தேன். இரண்டு கடிதங்களின் கையெழுத்துக்களும் ஒன்றுபோலிருந்தன. உடனே எனக்கு சந்தேகம் பிறந்தது. முன்பு கதிரேசனின் கலியாண காலத்தில், கமலகாந்தாவைத் தன் வயப்படுத்தும் பொருட்டு, அப்பாதகனால் சூழ்ச்சி செய்யப்பட்டு எழுதப்பட்டு இறுதியில் என்னால் தேடி எடுக்கப்பட்டு கதிரேசனை தண்டனைக்குள்ளாக்கி கமலகாந்தாவை மீட்க ஹேதுவாகவிருந்த கடிதத்தின் ஞாபகம் வந்தது. அதன் கையெழுத்தையும் இவைகளுடன் ஒத்திட்டுப் பார்த்தேன். அனைத்தும் ஒத்திருந்தன. ஆதலின், கதிரேசனே இவையனைத்திற்கும் காரணமென்பதையும், நான் பொறுக்கியெடுத்து ஒன்றுசேர்த்து வாசித்த ஜர்மனிக் காந்திமதியின் கடிதம் மேலமாடவீதி 49 நம்பர் வீட்டில் கிழிந்து கிடந்ததால் கொலையுண்டது காந்திமதியேயென்றும், கமலகாந்தாவின் மேஜையின் உள்ளிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் எடுத்துவந்த கடிதத்தினின்றும் கமலகாந்தாவைக் கவர்ந்து செல்லும் நோக்கத்துடன் அங்கு வருமாறு எழுதியிருப்பானென்றும், அப்பழியை நிரபராதியான கமலகாந்தன்மேல் சுமத்தும்பொருட்டு அவனையும் பின்னேரத்தில் அங்கு வருமாறு கடிதமெழுதியிருப்பானென்றும் ஊகித்திருந்தேன். எனது ஊகமும் சரியாக முடிந்தது. பின்பு கதிரேசனைக் கண்டு பிடிக்க கங்கணங் கட்டிக்கொண்டேன். இராப்பகல் உறங்காமல் ஆண்வேடத்துடன் சுற்றியலைந்தேன். ஒருநாள் நள்ளிரவில் ஜமீந்தார் வீட்டின் பின்புறமுள்ள பூங்காவின் பின்புறவாயலின் வழியாக ஒரு ஆண் உருவம் வெளிவந்து மெல்லமெல்லப் பதுங்கி நடந்து

சென்றது. அவனே மறைந்த கைதியாகிய கதிரேசன். மெல்ல அவனைப் பின்தொடர்ந்தேன். நீண்டதோம் நடந்தபின் ஒரு சிறிய காட்டை யடைந்தோம். அங்கு பல புதர்களின் மத்தியில் சுரங்கக் கதவுபோல் ஒரு கதவிருந்தது. அதனைத் திறந்துகொண்டு உட்புகுந்தான். நான் செய்யும் உபாயம் தோன்றாது திகைத்தேன். பின்பு ஒருவாறு தேறி, உரத்த குரலில் அச்சிறிய கதவின் பக்கலில், 'அடே துன்மார்க்கா! உன்னைக் கண்டுபிடித்து விட்டோம். கதவைத்திற. இல்லாவிடில் கடுந்துன்பத்திற் காளாவாய்' என்று ஆணவத்தொனியில் கூறவே, அவன் பயந்து மெல்லக் கதவைத்திறந்தான். உடனே என் கைத்துப்பாக்கியை அவன் முகத்திற்கு நேராகப்பிடித்தேன். 'அபயம். காப்பாற்றவேண்டும்' என்றான். 'உயிர் பிழைக்க விரும்பினால் கமலகாந்தாவை என்னிடம் விட்டுவிடு' என்றேன். அவன் சற்றுவிழித்து உட்சென்று கமலகாந்தாவைக் கொண்டுவந்தான். அவள் வெளிவந்ததும், திடீரென அச்சுரங்கக் கதவைத் தள்ளிவிட்டேன். பூட்டிக்கொண்டு விட்டது. மேலே கனத்த பாராங்கல்லைத் தூக்கி வைத்துவிட்டு கமலகாந்தாவை தூக்கிக்கொண்டு வந்தேன்' என்றாள்.

நியாயாதிபதி:—இப்பொழுது போலீஸ் இன்ஸ்பெக்டர் முதலியவர்களுடன்சென்று அக்கொடிய கள்வனை இங்கு கொண்டு வரலாமன்றோ?

'அவ்வாறே செய்யலாம்' என்றுகூறி போலீசார் பின்தொடர அவ்விடத்தை யணுகி, சுரங்கத்தைக் காட்டினாள். போலீசார் பிரவேசித்து பசியால் மெலிந்து கிடந்த கதிரேசனை கைப்பிடியாய்ப் பிடித்து விலங்கிட்டு நீதிஸ்தலத்தில் கொண்டுவந்து நிறுத்தினர்.

இப்பாதகன் வரலைக்கண்ட அங்கு குழுமியிருந்த மக்களனைவரும் தங்களுக்குள் பலவாறு பேசிக்கொண்டனர். 'இவனுக்கு சித்திரவதைக்கும் சிரமமான தண்டனையிருப்பின் அதனை விதிப்பதே மேல்' என்று பேசிக்கொண்டனர்.

நீதிபதி கதிரேசனை நோக்கி, 'நீ குற்றவாளி என்பது மெய் தானே?' எனக்கேட்டார். இக்கேள்விக்கு கதிரேசன் பதிலளிக்கு முன் மிஸ்டர் பாலாஜிராவ் குறுக்கிட்டு, 'கனம் நியாயாதிபதியவர்களே! தாங்கள் குற்றவாளியை மேலும் விசாரிக்கும்வரை நிரபராதியான கமலகாந்தனை கைதிக்கோலத்துடன் நிறுத்துவது முறையல்ல. முதலில் அவன் நிரபராதி என்பதை விளக்கி, பின் கதிரேசனை விசாரிப்பதுதான் உசிதம். இதை தாங்கள் சற்று ஊர்ந்து கவனிக்க மன்றாடுகிறேன்' என்றார்.

இவ்வாறு பாலாஜிராவ் கூறியதைக்கேட்ட அட்வகேட் எட்வின், 'கனம் ஜட்ஜ் அவர்களே! நண்பர் கூறியபடி செய்வது உசித

மாகத் தோன்றவில்லை. ஒருவேளை கமலகாந்தனே குற்றவாளி என்று ஜூரிகள் அபிப்பிராயம் கூறவும் இடமிருக்கலாம்' என்றார்.

'நீதிபதியவர்களே! இன்னுமா சந்தேகம். கையுமெய்யுமாய் குற்றவாளி அகப்பட்ட பின்னும் நிரபராதி மனதை துன்புறுத்தல் நீதியல்ல. ஒருவேளை அவனே குற்றவாளி என்று தீர்ப்புக் கூறினால் நான் அவனை ஆஜரப்படுத்துகிறேன். ஆதலால் என் ஜாமீனில் விடுங்கள். மற்றும் நான் கதிரேசனை குறுக்கு விசாரணை செய்யவும் விரும்புகிறேன்' என்றார் பாலாஜிராவ்.

நீதிபதியும் இணங்க, பாலாஜிராவ் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார். கதிரேசனின் உடம்பு வெடவெடத்தது.

பாலாஜிராவ்:—நீ யார்?

கதிரேசன்:—உங்களுக்குத் தெரியாதோ?

பாலாஜிராவ்:—கேள்விக்கு மட்டும்தான் பதில்வேண்டும்.

கதிரேசன்:—என்னை இன்னும் அவமானப் படுத்தவேண்டாம்.

பாலாஜி ராவ்:—அதைப்பற்றி இப்பொழுது யோசித்துப் பலனில்லை. பதிலளித்தே யாகவேண்டும்.

கதிரேசன்:—நல்லது, நான் யுவஜமீந்தார்.

பாலாஜி ராவ்:—இன்னும் யுவஜமீந்தாரா?

கதிரேசன்:—ஐயோ! அவமானப்படுத்தாதீர்கள்.

பாலாஜி ராவ்:—சிறையினின்றும் தப்பியோடியது உண்மைதானே?

கதிரேசன்:—மறைப்பதில் பயனென்ன? நான் ஓடியது உண்மைதான்.

பாலாஜி ராவ்:—மறுமுறை கமலகாந்தாவைக் கவர்ந்தது மெய்தானே?

கதிரேசன்:—கையும் களவுமாய்ப் பிடிபட்டபின் மறைக்க முடியுமா? மெய்தான்.

பாலாஜி ராவ்:—கமலகாந்தன் கஷ்டப்பட்டதற்குக் காரணம் நீதானே?

கதிரேசன்:—ஆம்.

பாலாஜி ராவ்:—காந்திமதியைக் கொலை செய்தவன் நீதானே?

கதிரேசன்:—ஆம். ஊழ்வினைப் பயன்.

'கனம் பொருந்திய நீதிபதியவர்களே! இங்கு நடைபெற்ற அனைத்தினின்றும் நீங்கள் ஒருவித முடிவிற்கு வந்திருப்பீர்கள்.' என்றார் பாலாஜி ராவ்.

நீதிபதி எட்வின் துரையை நோக்கி, தாங்கள் ஏதும்கூற விரும்புகிறீர்களா?' எனக் கேட்க, 'இவ்வளவு வெட்ட வெளிச்சத்திற்குமேல் நான் என்ன கூறவிருக்கிறது!' என்று பதிலளிக்க, நீதிபதியும் ஜூரிகளும் கன்சல்ட்டிங் ரூமிற்குள் சென்று நெடுநேரம் யோஜித்து ஒருவித முடிவிற்கு வந்து தீர்ப்பெழுதி வெளிவந்தனர்.

எங்கும் நிசப்தமே குடிகொண்டது. தீர்ப்பை எதிர்நோக்கிய வண்ணமிருந்தனர். அங்கு குழுமியிருந்த மக்களுள் பலர் கதிரேசனை குற்றவாளி என்று தீர்ப்புக் கூறுமுன் முடிவுகொண்டனர். சிலர் 'கிருஷ்ணபுரி ஜமீந்தார் திரண்ட ஆஸ்தியுடையவர். லஞ்சம் கொடுத்து நீதி சபையை வசப்படுத்தியிருப்பார். ஆகவே கதிரேசன் ஒருவேளை விடுதலையடையவும் கூடும்' என்று பேசிக் கொண்டனர்.

'இப்பொழுது ஜாமீனில் இருக்கும் கமலகாந்தன் நிரபராதி. குற்றமற்ற அவனை குற்றவாளி எனக் கருதி கைதியாக வைத்த காரணம்பற்றி மிகவும் வருந்துகிறோம். நிற்க, இந்த வழக்கில் நீதியை நிலைநாட்ட அரும்பாடுபட்ட மிஸ். சரோஜினிக்கும் அட்வகேட் பாலாஜி ராவுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கின்றோம்.

இங்கு நிறுத்தப்பட்டிருக்கும் கதிரேசன் சிறையினின்றும் தப்பியோடியதற்காகவும், பல சூழ்ச்சிகள் செய்து நிரபராதியான கமலகாந்தனை படாப்பாடுபடச் செய்ததற்காகவும், கமலகாந்தாவை காமச் சிறையிலிட்டதற்காகவும் தூக்குத் தண்டனை விதிக்கின்றோம்' என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

அத்துடன் கோர்ட்டுக் கலைந்தது. கதிரேசனின் தீயதோழர்களும் உற்றார்களும் உறவினர்களும் துக்கத்துடன் பிரிந்தனரென்றாலும் மற்ற மக்கள் நிரபராதியின் விடுதலைபற்றி மகிழ்வெய்தினர்.

(அடுத்த இதழில் முடிவு)

---

பிச்சைக்காரன்:—ஐயா, ஏதேனும் ஒரு புண்ணியம் செய்ய வேண்டும்.

பணக்காரர்:—என்ன புண்ணியமடா செய்யவேண்டும்?

பிச்சைக்காரன்:—ரொம்ப பசியாக இருக்கிறது, கொஞ்சம் சாப்பாடு போடவேண்டும்.

பணக்காரர்:—அதோ இருக்கிறதே சாப்பாடு கிளப்.

பிச்சை.—அது தெரியாமலா தங்களைக் கேட்டேன்?

—S. P. பழனிசாமி.

# நண்பனை ஏய்த்த நவநீதம்

[மூசிரி வி. ஷண்முகம்.]



மாலை மணி ஆறு அடித்தது. மணியன் கையில் காபியும் தட்டும் ஏந்தியவாறு சங்கா விலாஸின் உள்ளே நுழைந்தான். 'அடே, மணி! அதை அந்தக் கூடத்திலுள்ள மேஜையின்மீது வைத்துச்செல்' என்று கூறிக்கொண்டே ஓர் யௌவன வாலிபன் கூடத்தை யடுத்துள்ள அறைக்குள் நுழைந்தான்.

அறைக்குள் சென்ற சங்கரன் அடியில் கண்ட ஆலோசனையில் ஆழ்ந்தான். 'பல நாட்களாக எண்ணிய எண்ணம் இன்று ஈடேறுமென்பது திண்ணம். ஆனால் அதுவும் நம்முடைய தீவிரமான புத்தியினால்தான் நடைபெறும். எதிர்பாராத விதமாய் வந்த கடிதத்தைக் கண்ட நமது தாய்தந்தையரும் தங்கை சரோஜாவும் ஊருக்குச் சென்றனர். அது சரோஜாவின் உயிர்த் தோழி லீலாவுக்குத் தெரியாது. அவள் வழக்கம்போல் இன்று இங்கு வருவாள். என் எண்ணம் வெற்றியடையும். ஆ! அதோ! அவள் வருகிற சப்தம் கேட்கிறது; மறைந்து கொள்வோம்.'

'சரோஜா! சரோஜா!' என்று குயிலினும் இனிய குரலுடன் கூவிக்கொண்டே உள்ளே நுழைந்தாள் ஓர் இளங்கை. அழகே திரண்டு உருவாய்வந்த அவள் கூடத்தின் நாற்புறத்திலும் தன் கூரிய கண்ணோட்டத்தைச் செலுத்தி அங்கு ஒருவரையும் காணாது, மேன் மாடியை நோக்கிப் படிகளின் வழியாய் மேலே சென்றாள்.

அவள் மேலே சென்றதைக் கள்ளத்தனமாய் கவனித்துக் கொண்டிருந்த சங்கரன் உடனே கூடத்திற்குள்சென்று அங்குள்ள ஒரு சாய்வு நாற்காலியை எடுத்து கூடத்திலுள்ள தெருவாயிற் படியின் குறுக்கேபோட்டு உட்கார்ந்து ஒரு நாவலை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு படிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்தான். அவள் அழகிய வதனத்தை அருகே நெருங்கிப் பார்த்து ஓர் வார்த்தையும் இதற்கு முன்பு பேசியறியாத அவளிடம் அன்று எப்படிப் பேசி வசப்படுத்துவதெனப் பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் மேல்மாடிக்குச்சென்ற அந்த அழகிய மாதும் அங்கு ஒருவரையும் காணாது கீழே இறங்கினாள்.

அவளின் வருகையை எதிர்நோக்கிய சங்கரனின் மனம் சாந்தியடைய காட்சி தருவதேபோன்று, அப்பேதைப் பெண்மயிலாள் கூடத்தை யடைந்தாள். அங்கு வழியில் எதிர்பாராதவிதமாய் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கும் ஆடவனைக் கண்டதும், மின்சாரக் கம்பியில் செல்லும் மின்சாரம், மின்னலினால் கவரப்பட்டு விளக்கு அணைவதுபோல் அவளது உள்ளத்தில் ஓடிய சரோஜாவைப்பற்றிய நினைவுகள் அவனால் பறந்தோட, அவள் அதற்குமேல் ஓரடியும் அப்பால் வைக்காமல் தன் கைக்குட்டையை மோவாய்க் கட்டையில் வைத்து அழுத்தியவாறு அசையாச் சிலையாய் நின்றாள். இரண்டொரு நிமிடங்கள் கழிந்தன. இதற்குள் சாய்வுநாற்காலியில் சாய்ந்திருந்த சங்கரனின் மனதில் கோடானுகோடி எண்ணங்கள் மின்னல் மின்னி மறைவதுபோன்று தோன்றிமறைந்தன. தன் உள்ளத்தை முழுதும் புஸ்தகத்தில் பறிகொடுத்தவனேபோன்று அசையாமல் பாசாங்கு பண்ணிக்கொண்டிருந்த போதிலும் அவனது மனம் என்னும் கொத்தன் மனக்கோட்டைக்குச் சுவர் காரைகற்கள் இல்லாமலே வெகு துரிதமாய் வைத்துக்கொண்டிருந்தான்.

தன்னையே சதா மனதில் தோத்திரம் செய்துகொண்டிருக்கிற அவனுக்கு காட்சிதந்த அப்பெண் தெய்வம் தன் செவ்விய அதரங்களைத் திறந்து பேசத்துணிந்து 'எங்கே, சரோஜாவைக் காணோம்' என்றாள்.

உடனே சங்கரன் திடுக்கிட்டெழுந்து 'என்ன சரோஜாவா?' என்றான்.

'ஆம் சரோஜாதான்' என்றாள்.

'எதற்காகவோ' என்று வினயத்துடன் புன்முறுவல் பூத்த முகத்தைக் காட்டினான்.

'அவளைப் பார்ப்பதற்காகத்தான் வந்தேன்' என்றாள்.

'வேறொருவரையுமில்லையா?' என்றான்.

'அவளைத் தவிர வேறு எனக்கு இங்கு வேண்டியவர்கள் ஒருவருமில்லை' என்றாள்.

'ஏன்? நான்' என்று மன்மதபாணம் தொடுக்கவாரம்பித்தான்.

'என்ன, நீங்கள் சொல்வதின் கருத்து விளங்கவில்லையே' என்றாள்.

'லீலா! நான் சொல்வது விளங்கவில்லையா? சரோஜாவைப் பார்க்க வேண்டுமானால் இப்பொழுது வந்திருக்கமாட்டாய் என்று சொல்லுகிறேன்' என்றான்.

'பின் யாரைப்பார்க்க வந்திருக்கிறேன்' என்றாள்.

'என்னைத்தான்; சரோஜா ஊரில் இல்லாததைக் கேள்விப்பட்டு அவளைப் பார்ப்பதுபோல் என்னைத்தான் பார்க்கவந்தாய். உன்னைப் போன்ற இளகிய நெஞ்சம் உடையவர்களை நான் ஒருபோதும் பார்த்ததில்லை இதற்கு என்ன கைம்மாறு நான் செய்யப் போகிறேன்' என்ருன்.

இந்த வார்த்தைகளைகேட்ட அப்பெண்மணியின் முகம் சுருங்கிப் பின்மலர்ந்து 'தோட்டம் நிலப்பதற்குள் தென்னம்பிள்ளை வைத்து விட்டீர்களே' என்ருள்.

'லீலா! உன்னுடைய கருணையும் வாஞ்சையும் இருக்கும்போது எனக்கென்ன குறைவு? உன்னை அடையப்போகும் எனக்கு வேறு எதுவும் எட்டிக்காயே' என்ருன்.

'சரி, சரி நான் போகவேண்டும்; வழியை விடுங்கள்' என்ருள்.

'என்ன, எனக்கு ஒருவழியும் சொல்லாமல் போகிறேன் என்ருல்...முடியுமா?' என்ருன்.

'சரி, என்னை என்னசெய்யச் சொல்கிறீர்கள்' என்ருள்.

'நான் உன்னை ஒன்றும் அசாத்தியமான காரியத்தைச் செய்யச் சொல்லவில்லையே கரும்பு தின்னக்கூலியும் கேட்பாரோ......! நான் மறந்துவிட்டேன். நீ வந்து வெகு நேரமாகிறது. அதோ அந்த மேஜையின்மீது உள்ள காபியை முதலில் குடித்துவிட்டுப் பின் நீ உன் இஷ்டபபோல் என்னை ஐக்கியப்படுத்திக் கொள்' என்று சங்கரன் அணைகடந்த ஆசையுடன் கூறி, லீலாவின் இடக்காத்தை வலக்காத்தால்பற்றி மேஜைக்கு இழுத்துச்சென்று அங்குள்ள நாற்காலியில் அமர்த்தினன் லீலா அங்குள்ள அல்வாவில் ஒரு துண்டை தன் வாயில் போட்டுக்கொண்டு மற்ருெரு துண்டை அவன் வாயில் போட்டாள். அப்போது சங்கானின் மனமடைந்த மகிழ்ச்சியைச் சொல்லத் தரமன்று.

பின் கண்ணுடி டம்மளரில் உள்ள காபியை அருந்திவிட்டுப் 'அடடா! நான் மறந்துவிட்டேன். என் தாயார் பெருமாள் கோவிலுக்குப் போகவேண்டுமென்ருள். ஒருசமயம் தேடிக்கொண்டு வந்தாலும் வந்துவிடுவாள். நான் போய்விட்டுப் பிறகு மணி பத்துக்கு வருகிறேன்' என்ருள். அதைக்கேட்ட சங்கரன் சிறிது தயங்கிப் பின 'நிச்சயமாய் வருவாயோ?' என்ருன். 'ஓ! நிச்சயமாய் வருவேன். நீங்கள் வரவேண்டாமென்ருலும் நான் சரோஜா வரச் சொன்னதாகச் சாக்குப் போக்குகள் காட்டி வந்துவிடுவேன். தயாராய் இருங்கள்; நான் போய்வருகிறேன். அம்மா வந்தாலும் வந்து விடுவாள்' என்றுகூறிச் சரேலென்று லீலா அவ்விடத்தைவிட்டு அகன்ருள்.

* * *

இரவு மணி பத்து அடித்தது. சங்கரனின் மனதில் லீலாவைப் பற்றிய லீலைகள் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. ஆனால் லீலா வரவில்லை. மணி பதினொன்றும் ஆயிற்று. வந்தால்தானே அவன் எதிர்பார்த்தப் பெண்பாவை. மறைந்தவள் தோன்றவில்லை. என் செய்வான் பாவம். நினைவு நித்திரையைக் கெடுத்தது.

* * *

இரண்டு நாட்கள் கழிந்தன. தபாற்சேவகன் ஓர் கடிதத்தைச் சங்கரனிடம் கொடுத்துச் சென்றான். அதில் அடியில் கண்டவாறு எழுதி இருந்தது.

கல்கத்தா

7—4—34.

அன்பும் ஆசையும் நிறைந்த அருங்குணமணியே!

அன்று நான் தங்களைக் காணமுடியாமற் போனதைப்பற்றி வருந்துகிறேன். என்மீது அளவுகடந்த ஆசைகொண்ட தங்களை நான் எவ்விதத்திலும் திருப்திசெய்யாமல் போவதில்லை. ஒருநாள் இரவு ஓரிடத்தில் என்னைக் காணவிரும்பிய உங்களுக்கு நான் பல நாள் இரவில் பலவிடங்களில் கூடியசீக்கிரம் திரையில் காட்சி யளிப்பேன்.

இப்படிக்கு,

தங்களை என்றும் மறவாத

நவநீதம்.

இதை வாசித்ததும் சங்கரனை தூக்கி வாரிப்போட்டது. அப்பொழுதுதான் அவனுக்கு அன்று இரவு தன்னைச் சந்தித்தது தன் நண்பன் நவநீதம் என்றும், அவன் சினிமாவில் ஒரு சிறந்த பெண் வேடத்தைத்தாங்கி நடிக்கப்போகிறான் என்றும் தெரிய வந்தது. தன் நண்பன் தன்னைப் பற்றித் தப்பான எண்ணம் கொண்டு விடுவானே என்று அஞ்சினான். பின் சிறிதுநேரம் சென்றதும் ஓர்வித சூழ்ச்சி அவனுக்குத் தோன்றியது. உடனே ஒரு கடிதம் அடியில் வருமாறு எழுதினான்.

தஞ்சை

11—4—34.

நண்ப நவநீதம்,

நீ ஒரு சிறந்த சினிமா நடிகன் என்று பேர்வாங்குவது நிச்சயம். அன்றியும் பெண்வேடத்தில் பெண்களும் உனக்கு இணையாகார்கள். நீ அன்றையதினம் உன்னைத்தானே பரீக்ஷை பார்ப்பதற்காக வந்திருந்தாய்! அதையறிந்த நான் உன் நடிப்பின் திறத்தைக் காண

பதற்காகவே ஓர் காதலன்போல் நடித்தேன். பிறகு நீ கல்கத்தா சென்றதும் கடிதம் போடுகிறேன் என்றாயே' ஏன் போடவில்லை.?

இப்படிக்கு,

உயிர்த் தோழன் சங்கரன்.

பதில் கடிதம் சங்கரனுக்கு கிடைத்தது.

கல்கத்தா,

16—4—34

நண்பன் சங்கரனுக்கு,

எழுதும் கடிதம் யாதெனில், உன் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை. என் தங்கை லீலாவைப்பற்றியும் உன்னைப்பற்றியும் வதந்திகள் உலாவின. அதன் உண்மையை அறியும்பொருட்டே நான் அவ்வாறு உன்னை ஏமாற்றினேன். நீ பேசியதிலிருந்து இதுவரையில் என் தங்கை கெடவில்லை என்று தெரிகிறது. அதனால் என் சந்தேகம் நீங்கி என்மனம் திருப்தியடைந்தது. வெகு நாட்களாக எதிர்பார்த்த உனக்கும் திருப்தி ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறேன். ஏன்! சிறிதுநேரம் உன் ஆசை லீலா நானல்லவா?

இப்படிக்கு,

நவநீதம்.

வெளி வந்து விட்டது! வெளி வந்து விட்டது!!

## தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சோக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும் இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை எட்டணா தான்.

தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# காதல் உலகம்

—:o:—

[ஸ்ரீமான் கதிரேசன் அவர்களின் ரேடியோ பிரசங்கம்]

கொழும்பு தனவணிக இளைஞர் சங்கத் தலைவரும், சமூக சீர்திருத்த வேட்கையாளருமான ஸ்ரீமான் ஆர். எம். எஸ். எம். கதிரேசன் அவர்கள் (19—6—37) இரவு $7\frac{1}{2}$-மணிக்கு கொழும்பு ஒலிபரப்பு நிலையத்திலிருந்து 'வாழ்க்கையில் இன்பங்கள்' 'காதல் உலகு' என்பதுபற்றி ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் ஸ்ரீமான் கதிரேசன் அவர்கள் ஆற்றிய மேற்படி பிரசங்கத்தில் இல்வாழ்வின் இயல்புகளையும், இன்பவாழ்வின் பண்புகளையும், காதலுறவின் பெற்றியினையும், தற்காலத் தமிழர் மணமுறைக் கொள்கையின் தன்மையையும், தெளிவுறத் துலக்குவதாயிருக்கும் 'காதல் உலகம்' என்னும் பகுதியில் குறிப்பிட்ட சில வற்றைமட்டும் நமது 'தமிழரசில் வெளியிடுகிறோம்:—

### காதலை வளர்த்த தமிழ்மரபினர்

*காதல் தமிழர் தலையாயப் போற்றியதோர் உணர்ச்சி. இயற்கையோடு இயைந்த இன்பப் பெருக்குடன் அறநெறிப்பட்டு பண்டைத் தமிழர் காதலை வளர்த்தனர்; காதலைப் போற்றினர்; காதலுடன் மணந்தனர்; காதலை ஒரு தெய்வத் தன்மைகொண்டு பேருணர்ச்சியாகவே வணங்கினர். இன்பமெய்தி வாழ்தற்கு காதல் உணர்ச்சி அகத்தூய்மையுடன் அரும்ப வேண்டும் களங்கமற்ற காதல் வாழ்விலேயே பண்டைத் தமிழர் அன்பு ஊற்றாகத் திளைக்கப் பெற்றிருந்தனர். ஆனால் பண்டைத் தமிழர் காதல் வாழ்வு, இற்றை தமிழகத்தாரிடத்து மலரப் பெற்றிருக்கிறதா? காதல் வளர்த்த தமிழ்மரபின் மக்களே! உன்னுங்கள்; உணருங்கள். காதல் மணங்கொண்ட தமிழர் சமூகம் இப்பொழுது காம மணத்திலன்றோ கமழ்கின்றது!*

### காதலற்ற காம வாழ்வுக்கு காரணம் யாது?

*இக்காலத்தில் காதல்மணம் காணப்பெறாத நிலையுற்றதற்குக் காரணம் என்ன? இதுபற்றி விரித்துக் கூறுதற்கு இதுபோது நே*

மில்லை. எனவே, சுருங்கச் சொல்லுகிறேன். காதல் மணம் அருகிய மைக்குக் காரணம் பெண்ணுரிமை போனமைதான். தாய்மை நிறைந்த பெண் தெய்வங்களின் இயல்பான உரிமையை ஆணுலகத்தார் சிதறடித்து விட்டனர் என்றே நான் கூறுகின்றேன். பெண்ணின் உரிமையைப் பறிமுதல் செய்த ஆணுலகம் இப்போழ்து எந்நிலையுற்றிருக்கின்றது? காதலற்ற காம வாழ்வில் உழன்றுகொண்டிருக்கிறது. வாழ்வின்பத்தை இழந்து துன்பவாழ்வில் அவதியுறுகின்றது. இதுபோது ஆணுலகு பெற்றிருக்கும் 'இன்ப வாழ்வு' எதுவெனில் பெண்ணுரிமைக்குப் பழுது நேரச் செய்ததுதான். தாய்மை நிறைந்த மகளிரை காமப் பொருளாகக் கண்கொண்டு பார்ப்பின் ஆணுலகு உருவாவதெங்ஙனம்? இந்தியநாட்டின் செழுமை பெண்ணுரிமை வழங்கிய காலத்து வளங்கொண்டிருந்தது. மகளிரும் பண்டைநாளில் கல்வியாளராய், வீரத் தாய்மார்களாய், அரசிகளாய், பொதுநலத் தொண்டில் பேரார்வமுற்றவர்களாய் கருணை நிறைந்த செல்விகளாய் ஆற்றல்வாய்ந்திருந்தனர்.

## பெண் தெய்வங்களாக வணங்கினர்

பெண்ணினுஞ் சிறந்த பொருள் உலகத்தில் பிறிதொன்றில்லை. 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள' என்றார் வள்ளுவரும். பெண்ணின் பெருமை உணராத தமிழன்பர்களை பழந்தமிழர்கால உலகின்மீது நாட்டஞ் செலுத்துமாறு வேண்டுகிறேன். அக்காலத்து பெண்ணினம் பெற்றிருந்த உரிமையின் பெற்றியையும் இக்காலப் பெண்ணுலகு உற்றிருக்கும் இழிநிலையின் தன்மையையும் ஆழ்ந்து சிந்தித்தல் பெண்ணுரிமை நாமறுக்கும் பிற்போக்கர் தங்கடனும். நம் முன்னோர் பெண்ணின் பெருமைகண்டு பெண்ணை சக்தி வடிவாகப் போற்றினர். பெண் தெய்வங்களாக வணங்கினர். இடைக்காலம் பெண்ணினத்தை இழிவுபடுத்தி சிறுமைக்குள்ளாக்கி, இக்காலம் தமிழகத்துப் பெண்மணிகளை அடிமைப்பட்டு உரிமையிழந்து சிறுமையுறச் செய்கிறது. உலகம் ஆண் மக்களாலும் பெண் மக்களாலும் ஆக்கப்பட்டிருக்கிறது. பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றி பெண்ணில்லை ஆண்பால் பெண்பால் இன்றி உலகமே இல்லையென்று கூறல் மிக உண்மை. ஆண் பெண்பாலாரின் அன்புறவு இல்லையெனில் இவ்வுலகில் இன்ப வாழ்வு எங்ஙனம் நடாத்த இயலும் என்பதே என்னனையார் கேள்வி.

## பெண்ணுரிமை பேணுதல் அவசியம்

உரிமை எல்லார்க்கும் பொதுவானது. ஆணுலகிற்குமட்டும் உரிமை உரித்தானதல்ல. பெண்மையும் ஆண்மையும் உயிர்கலந்து துய்க்கும் உரிமையின்பமே பேரின்பமாகும். எனவே பண்டைக் காலத்து பெண்மக்களின் உரிமை இயல்பை இக்காலத்து பெண்

ணரசிகள் அடைதல் வேண்டும். பெண்ணுரிமைகொண்ட தாய்மைத் தெய்வங்கள் சுதந்தர தேவிகளாய் அன்பு, பொறுமை, இன்பம் ஆகிய உயர்வழி நின்று அமைதி நிறைந்த கடமையை ஆற்றுதலே பெருமை. ஆண் பெண் இருவர் உள்ளமும் ஒத்து இயங்குதலே இன்பம்.

## காதல் உலகம்

இவ்வுலகத்தை பலதிற உலகாகக் கூறுதல் மரபு. அத்தகைய பல திற உலகில் காதல் உலகம் ஒன்று. இதுபோது காதல் உலகு சீர்மை பெற்றிருக்கவில்லை என்பது என் கருத்து. யாண்டும் காதலற்ற கருமணமாய் மாறியிருக்கிறது. திருமணத்தின் அடிப்படை காதல். அன்பு, அறிவு, மனம், ஆவி முதலியன ஒன்றோடொன்று பிணைதலே உண்மைக் காதலின் உயரிய தத்துவம். ஆனால் இதுபோழ்து காதல் உலகு உற்றிருக்கும் சிறுமை நிலை என்னை? தமிழன்பர்களே! சிந்தியுங்கள். அன்பினின்று அரும்ப வேண்டிய காதல் மணம், இப்பொழுது யாண்டிருந்து அரும்புகிறது. பொன் பொருளினும், போலி மதிப்பினும் எத்துணையோ மணங்கள் அரும்புகின்றன.

தமிழக நண்பீர்! காதல் மணம் கமழ்ந்த தமிழ்நாடு இன்று அம்மணம் காணப்பெறாது இருக்கின்ற நிலையுணர்ந்த கவியரசர் பாரதியார்,

> 'காதலை வேண்டிக் கரைகின்றேன்—இல்லையெனில்
> சாதலை வேண்டித் தவிக்கின்றேன்'

என்று மனமுருகித் தவிக்கின்றார். தலைவி தலைவனிடத்து காதல் வாழ்வு அரும்பிய அன்புறவு இல்லையெனில், அவர்களின் இல்வாழ்வு இன்பம் பயக்குமா? என்றே நான் கேட்கின்றேன். உலக மக்களின் உயிர்நாடி எது? உலக மக்களின் உயிர் நாடியான இன்பக் காதல் ஒருவன் உள்ளத்தில் உதிக்கவில்லை யெனில் அவன் சாதலே சாலவும் நன்றென காதல் பிரேமையாளர் கண்டிப்பாகக் கூறுவர். காதல் வாழ்வுபற்றி தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் கூறிப்போந்த சிறப்புரைகளை ஈண்டுக் கூறின் மிகப் பெருகும். 'காதற் சிறப்புரைத்தல்' என்னும் அதிகாரத்தில் தலைவனுக்கும், தலைவிக்கும் உள்ள நட்பை ஓர் உவமை முகத்தான் விளக்குகின்றார் திருவள்ளுவர்.

> 'உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு'

என்பது திருவள்ளுவர் வாக்கு. உடம்போடு உயிரிடை யுளவாய நட்புக்கள் எத்தன்மையதோ அத்தன்மையதே தலைவி தலைமகன்பால் உள்ள நட்புக்கள் என்பதாம். காதலனும் காதலியும் ஈருடலில் ஒருயிராய் ஒன்றி உயிர் கலந்திருத்தலே உண்மைக் காதலின் உயரிய அம்சம்.

## புதுமைக் கவியின் காதற் பாக்கள்

காதல் வாழ்வு குறித்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாக்களைக் கேளுங்கள். புதுமைக் கவியின் காதற் பாட்டுகள் மனித உள்ளத்தை மலரச் செய்யும் மாண்புமிக்கதாகும்.

'காதலினால் மானிடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானிடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானிடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம் சிற்பமுதற் கலைகளுண்டாம்;
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!
அதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்'

தமிழன்பர்களே! காதல் வாழ்வின் தன்மை குறித்து புலவர் பெருமானான பாரதிச் செல்வர் பாடியதை உணருங்கள். வாழ்க்கையில் உயிர் நாடியான காதல், இவ்வுலகத் தலைமையின்பம் மிக்க காதல், மக்களிடத்து அரும்பவில்லையெனில், அன்பு மணம். அறவொழுக்கம், இன்பசுகம் எங்ஙனம் காணுதல் இயலும்? தமிழகத்தாரில், சிலர் காதல் வாழ்வுக்கு இடர்ப்பாடு செய்கிறார். தம் மக்கள் காதல் வழி மணம் புரிதற்கு வேட்கை கொள்ளும்போது அதனைத் தாய் தந்தையர் தடைப்படுத்த முயல்கிறார்கள். அஃது எத்துணை கொடிதென்பதை புதுமைக் கவி பாரதியே விளக்குகின்றார்.

'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பார்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;
பாடைகட்டி அதைக் கொல்லவழி செய்கின்றார்
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க;
மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே'

வீர் பாரதியார் விறல்கொண்டு பாடுவது தமிழர் காதில் நுழைதல் வேண்டும். காதற்பயிரை வளர்க்காது அழிக்க நினைக்கும் அறியாமைக்காக மகாகவி பாரதியார் மனமுருகி, மூடர் என்றே முறையிடுகிறார்.

## காதலுக்கும் காமத்திற்கும் உள்ள பாகுபாடு

காதலற்ற காமத்தில் இன்பம் உண்டோ? இன்பம் என்பது காம உணர்வைக் கடந்து நிற்கும் தெய்வீக அன்பு. இன்பக் கிளர்ச்சிக்கு காதலுணர்வே அடிப்படை. காதலின்பத்தின் பெற்றி புணாப்

பெறாத பலர் காதலுக்கும் காமத்திற்கும் உள்ள பாகுபாடுகளை அறியாதிருக்கின்றனர். காதல் அன்புவழி இயங்குவது, காமம் கயமைவழி போவது. காதலுக்கும், காமத்திற்கும் உள்ள பாகுபாட்டினை தமிழறிஞரான தோழர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தான் இயற்றிய 'பெண்ணின் பெருமை' என்ற நூலில் அழகுற சித்தரித்துள்ளார். அவைகளில் சிலவற்றை உங்கட்குக் கூறுகின்றேன்.

'காதல் என்னை? காமம் என்னை? காதல் ஓரிடத்தில் படிந்த வேட்கை; காமம் பல இடங்களில் தோன்றும் விருப்பம்; காதல் மாறாதது; காமம் மாறுவது; காதல் கடவுள்; காமம் பேய்; காதல் இன்பம்; காமம் துன்பம். காதல் அன்பெனும் தண்மையினின்றும் பிறப்பது; காமம் அவாவெனும் வெம்மையினின்றும் பிறப்பது. காதல் உடலை வளர்க்கும்; காமம் உடலை எரிக்கும். காதல் உடல் மனம் அறிவு என்னும் மூன்றினும் ஊடுருவிப் பாய்ந்து நிலைத்து நிற்கும்; காமம் உடலளவில் எழுந்து வீழ்ந்துபடும். காதல் நாளுக்கு நாள் பெருகுந்தன்மையது; காமம் நாளுக்குநாள் அருகுந்தன்மையது' என்று அறிஞர் கல்யாணசுந்தரர் விளக்கியுள்ளார் காதலென்ன காமமென்ன என்று கேட்கும் அன்பர்கள் இனியாதல் உண்மை உணர்வாராக.

### மக்கள் வாழ்வுக்கு இன்பம் இன்றியமையாதவை

தமிழன்பர்களே! காதலின் பெருமை காணுங்கள்; கட்டுப்பாட்டு மணத்தின் கொடுமையை நீக்குங்கள். உலக வாழ்வில் காதல் தோன்றினால்தான் மக்களுள்ளத்தில் விடுதலை வேட்கை எழும், இன்ப ஆக்கம்பெருகும், உற்சாக உணர்வு மலரும். மக்கள் வாழ்வுக்கு இன்பம் இன்றியமையாதது. இக்காலத்தில் சன்மார்க்க நெறியற்ற வேதாந்திகள் சிலருளர். மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் வெறுத்து துறவியல் சிறந்ததென்று வேதாந்தம் பேசுகின்றார்கள். இக்கூற்று திருமண வாழ்வைக் குலைக்கும் நீர்மையதென்பதை கருத்துணர்ந்தோர் அறிந்து கொள்வர். மனைவி மக்களுடன் வாழ்ந்து உலகை நடாத்திய உண்மைத் துறவிகள் இவவிதம் கூறுதற்குத் துணியார். பொருளற்ற முறையில் வேதாந்தம் பேசுதல் மக்களின் இன்பவாழ்க்கையைச் சிறக்கவிடாது சிறுமைப்படுத்தியதாகவே முடியும்.

### உண்மைக் காதலுக்கு ஓர் உதாரணம்

காதல்பற்றிய உரை நவிலும்போது அண்மையில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வருகின்றது. காதலுக்கு முன்னே சாதி சமய பாகுபாடு நிற்க மாட்டாவென்பதும், உண்மைக் காதலுணர்வு எத்தகைய தியாகத்தையும் செய்யும் வல்லமை மிக்கதென்பதும் நான் கூறப்போகும் அந்நிகழ்ச்சி உதாரணத்தால் உலகம்

அறிந்துணரும். சென்ற பல மாதங்கட்குமுன் உலகினையே கலங்கச் செய்த ஒரு பெரும் நிகழ்ச்சியுற்றதை நீங்களறிவீர்கள். அத்தகைய நிகழ்ச்சி காதல் மூகிழ்வால் எழுந்ததென்பது கண்கூடு. அது ஒரு பெரிய ஏகாதிபத்தியத்திற்கு தலைமை பூண்டிருந்த ஒருவர் வாழ்க்கையில் இன்புறுதற்காக அத்தலைமைப் பதவியை நொடிப்பொழுதில் துறந்தமையாகும்.

### காகலுக்குக் காதலே ஈடும் எடுப்பும்

காதல் என்பது தெய்வத் தன்மை வாய்ந்தது. காதல் தெய்வீக அன்புமிக்கது. காதல் காமப்பொருளன்று. காதல் கடலினும் பெரிது; மலையினும் பெரிது; உலகினும் பெரிது; அகிலத்தினும் பெரிது; அதற்கு ஈடுமில்லை; எடுப்புமில்லை. காதல் எல்லையற்றது; காதலின் மாண்பையறிவார் யார்? காதலரே காதற் பெற்றியை உணர்வர். காதலுக்கு முன்னே கல்வி என்ன—செல்வம் என்ன—சீர் என்ன—சிறப்பென்ன—பதவி என்ன—அரசு என்ன—சாம்ராஜ்யம் என்ன—எல்லாஞ் சிறுமை! சிறுமை!! காதலுக்குக் காதலே ஈடும் எடுப்பும். காதலுக்குக் காதலே பெருமை. காதலரிடம் காதலே வீறுகொண்டு நிற்கும், ஏனைய யாவும் பறந்தோடும். தமிழன்பர்களே! இதுபோது நான் கூறிய அனைத்தும் ஒருங்கமையப்பெற்ற ஆண்டகையான அருமையாளன் யார்? அவர்தான் இருபதாம் நூற்றுண்டு இணையற்ற காதலனான வின்சர்கோமகனாரவர்.

### மணிமுடி துறந்த மன்னர் வின்சர்கோமகனார்

இதுபோது இவர் காதல்வழி நிற்போர்க்கு வழிகாட்டும் வீர புருஷராவர். கருத்தொருமித்த காதலுக்காக கனகாசனத்தை துறந்த வின்சர்கோமகனார் இன்று உலக மக்களால் போற்றப்படுகின்றார், புகழப்படுகின்றார். மாஜி மன்னர் எட்டாவது எட்வர்ட் அவர்கள் இப்பொழுது நமக்குச் சீர்திருத்தத் தோழராவர். ஆங்கிலேய நண்பரான தோழர் வின்சர் பெருமகனார் காதல் தெய்வத்தின் கட்டளைக்கு இலக்காகி மணிமுடி துறந்தமை சீர்திருத்த இயக்கத்துக்கு சிறப்பளிப்பதாகும். இத்தகையாரின் உறுதிவழி நிற்றல் வேண்டுமென்றன்றோ நமது தேசிய மகா கவி பாரதியார்,

காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்

என்று தமிழ் நாட்டவர்க்குத் தைரியங் கூறி கர்ஜித்துச் சென்றார்.

### காதல் இல்லையேல் உலகமே இல்லை

காதல் இல்லையேல் உலகமே இல்லை—ஏன்—உலக வாழ்வில் இன்பமே இல்லையென்று நான் சொல்கிறேன். இது மூக்காலும்

உண்மை என்பதை பாரதியார் கூறிப்போந்தார். அந்த அரிய உண்மையை தோழர் வின்சர்கோமகனர் மெய்ப்பித்திருக்கிறார். பெண்ணின்பத்திலும் அரசின்பம் அத்துணை சிறப்புடைத்தா என்னும் கேள்விக்கு வின்சர்கோமகனர் விடையிறுத்துள்ளார். அரசின்பத்திலும் பெண்ணின்பம் பெரும் பேறுடைத்து என்று மாஜி மன்னர் எட்வர்ட் அவர்கள் மக்கள்உலகுக்கு அறிவுறுத்தியிருக்கிறார்.

## காதல் செல்வியை கண்டடைந்த தோழர் வின்சர் வாழ்க்கை

தோழர்களே! மணிமுடி துறந்த மன்னர் வின்சர்கோமகனர் வாழ்க்கையில் இன்பமின்றி—காதலித்த காதற் செல்வி இன்றி அரசாள முடியாத தன்மைபெற்றதாகக் கூறி அரசு துறந்து காதற் செல்வியைக் கண்டடைந்தார். உண்மைக் காதல் ஒப்பற்ற தியாகத்தைச் செய்யும்படி தூண்டிவிட்டது. வின்சர்கோமகனர் கனகாசனத் துறவுக்குக் காரணம் பல கூறலாம். இதுபற்றிய பேச்சு ஈண்டு வேண்டுவதில்லை. காதல்வழி மணப்பதற்கு தடைசெய்யும் கனகாசனம் எற்றுக்கு என்பதே தோழர் வின்சரின் எண்ணம். உரிமையில் உயிர்போன்ற காதல் இலக்ஷியத்திற்கு முட்டுக்கட்டை இடுபவர் எவராயினும் அவர் தம் இடர்ப்பாட்டை தடுத்தல்வேண்டும்.

## வின்சர் கோமகனின் விவாஹ தத்வம்

மனச்சான்றுக்கு மாறுபாடில்லாத நேர்மை உள்ளம்படைத்த தோழர் வின்சர்கோமகனர் அவர் தம் உள்ளத்திலுதித்து அரும்பி மலர்ந்த காதலின் கனிவால் திருமணம்பற்றிய தம் கருத்தை உலகினர்க்குத் தெரிவித்துள்ளார். அன்னவர் தம் விவாக தத்துவ அபிப்பிராயத்தை உங்கட்குக் கூறவேண்டுவது அவசியமெனநினைக்கின்றேன். 'காதலில்லாக் கலியாணம் ஒழுக்கவீனமாகும்; இயற்கைக்கு விரோதமானதுமாகும். உறுதியான குணமுள்ளவன் காதலில்லாக் கலியாணத்தை ஒப்புக்கொள்ளவேமாட்டான். லோகாய நோக்கங்களுக்காக சம்பிரதாயமாகச் செய்யப்படும் கலியாணம் மனச்சான்றுக்கு முரண்பாடாக நினைப்பதற்குக்கூட அருவருப்பை கொடுக்கக்கூடிய இழிநிலை நீர்மையதாயிருக்கும். காதலின்றிக் கலியாணம் செய்துகொண்டு தங்களை ஒழுக்கமுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் உடனே விவாக ரத்து செய்துவிடவேண்டும். அவர்கள் ஆஷாடபூதிகளாக இருக்கவேண்டாம்' என்று மாஜி மன்னர் எட்வர்ட் நவிலுகின்றார். வாழ்க்கையில் இன்பம் துய்ப்பதற்காக பெருங்காதலுற்று அரியாசனத்தைத் தவிர்த்த வின்சர் தம்பதிகளுக்கு நாம் வாழ்த்து வழங்குவோமாக. வாழ்க்கையில் இன்பம் உண்மைக் காதலர்க்கே உரியது என்பதை உலகினர் அறிய அக்கோமகனர் வழியே சாலவும் நன்றாம்.

## இன்பமான இனிய வாழ்க்கை

இன்பவாழ்க்கை நடத்துதற்கு ஏதுக்கள் பல. அவற்றுள் இறைகளோடியைந்த இயற்கை இன்பம் பெறுதலே சிறப்பு. இயற்கை இன்பம் துய்ப்பதற்கு உள்ளத்தில் இன்ப எழுச்சி, இருதய மகிழ்ச்சி தானாகவே கிளர்ந்தெழும்பவேண்டும்.

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோடிசைந்த வாழ்வு

என்றார் வன்றொண்டப் பெருந்தகையார்.

அன்பினால் ஆக்கப்பெற்ற இன்ப உள்ளத்தில் காதல் மலர் அரும்பி தேன்சுவை பொருந்திய தெய்வமணங் கமழும் கருத்தொருமித்த காதலர்கள் உள்ளம் அன்பினால் தோயுமபோது விளையும் இன்பநிலையையும் உள்ளத்தில் உதிக்கும் தெய்விகப் பிரிதியையும் இல்வாழ்க்கையில் பண்புடையார் அநுபவத்தில் உணர்தல்கூடும். மக்களோ என்றும் இன்பத்தையே விரும்புகிறார்கள் துன்பத்தை வெறுக்கிறார்கள். இவ்விருப்பு வெறுப்பு மனித சமூதாயத்தின் இயல்புக்குணம். அன்பு நிகழ்ச்சியிலேயே இன்ப வாழ்க்கை நடாத்த நினைக்கும் மக்கள் அழுக்காறு அவா இன்னாச் சொல் முதலிய தியசிந்தனைகளை விலக்கி இன்ப அன்புரிமையினை செயலிற்கொணர்வதே அறிவுடைமையாகும்.

## எந்நாளும் இன்பமே துன்பமில்லை

'எந்நாளும் இன்பமே துன்பமில்லை' என்று உலகிற்கு அறிவுறுத்தியிருக்கிறார் அப்பர். அவர் வழங்கிய இத்திருமொழியை மனத்திற்கொண்டு இவ்வுலகம் துன்பமா இன்பமா என்பதை ஆராய்தல் வேண்டும். உன்னி உன்னி உண்மை உணர்வோமானால் உலகிடைத் துன்ப நிகழ்ச்சிக்கு இடமில்லையென்றும், மக்களில் துன்ப உளத்தாருக்கு உலகமே துன்ப மயமாகத் தோன்றுகிறதென்றும் தெளிவுற அறியலாம். எனவே, தமிழகப் பெரியோர்களே தாய்மைச் சகோதரிகளே! வருங்கால வாலிப நண்பர்களே! உங்கட்கு ஒன்று சொல்லி முடிக்கின்றேன்.

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு

என்ற பெரியார் வாக்கிற்கேற்ப இறைகளோடிசைந்த இன்ப வாழ்வை, இல்லற இன்பமான காதல் வாழ்வை, இன்ப அன்பிற்குரிய புனித வாழ்வை, தமிழகச் செல்வர்கள் புதுமலர்ச்சி பொலிய புத்துணர்ச்சி பெருக, இன்புடன் பெற்று இவ்வுலக இன்பப்பேற்றினைத் துய்க்குமாறு வேண்டுகிறேன்.

---

# விஜயராம் அல்லது போலிச் சாமியார்

[M. S. ஜெய்லானி]

## 13-ம் அத்தியாயம்.

### மறு விசாரணை.

சாமியாருக்குப் பின் சப்இன்ஸ்பெக்டர் விசாரிக்கப் பட்டார் சப்இன்ஸ்பெக்டர் சாமியார் தன்னை அழைத்துக்கொண்டு போனதிலிருந்து, முஸ்லீம் உடையுடன் இருக்கும் சுப்பிரமணியனைக் கைது செய்ததுவரை நடந்தவைகளையும் சாமியார் கொடுத்த கடிதத்தை சுப்பிரமணியன் அறையில் கண்டு எடுத்ததையும் கூறிமுடித்தார்.

அடுத்தபடியாக வேலைக்காரமாது விசாரிக்கப்பட்டாள்.

ரங்கநாயகி:—'நான் 23ந் தேதி காலையில் 8 மணிக்குக் கடிதங்களைக் காலேஜிற்குக் கொண்டுபோகும்போது விலங்குடன் நிற்கும் இவ்வாலிபன் என்னை வழிமறித்து தன் தங்கைக்குக் கடிதங்கள் இருக்கின்றனவா என வினவினான். எனக்குத் தெரியாது என்று நான் சொன்னேன். இவ்வாலிபன் என் கையிலிருந்த கடிதங்களைக் கொடுத்தால், இருப்பதையும் இல்லாததையும் பார்த்து விடுவதாக கூறினான். நானும் கொடுத்தேன். இவன் எல்லாக் கடிதங்களையும் பார்த்துவிட்டு கடைசியில் ஒரு கவரை எடுத்துக்கொண்டு அதுதான் தன் தங்கையின் கடிதம் என்றான். நான் வழியில் கடிதத்தை ஓர் ஆண்மகனிடம் கொடுத்ததாக அறிந்தால், கல்லூரியின் தலைமை துரைசானி என்னை அதிகம் கோபிப்பாள், ஆகையால் துரைசானியிடமேவந்து கடிதத்தை வாங்கிக்கொள்ளும்படி சொன்னேன். அதற்கு இவ்வாலிபன் தன் தங்கை அதிக வியாதியாக விருப்பதாகவும் லீவ் விடும்பொழுது வழக்கமாய்க் கொடுக்கும் ரூபாய் ஒன்றை இப்பொழுதே கொடுத்திருப்பதாயும் கூறி என்னிடம் ரூபாய் ஒன்றையும் கொடுத்தான். எல்லா மாணவிகளும் லீவ் விடும்பொழுது ரூபாய் ஒன்று கொடுப்பது வழக்கமாதலால், ஒருவேளை இவனுடைய தங்கை வியாதியாய் இருப்பதால் பள்ளிக்கு வாமல் இருக்கலாம்; அதனால் தான் பணத்தை இப்பொழுதே கொடுத்தனுப்பி இருக்கின்றாள்; ஆகையால் இவ்வாலிபன் கேட்கும் கடிதம் உண்மையில் இவனுடைய தங்கைக்கு வந்ததாகத்தா னிருக்கவேண்டும், என்று எண்ணிக்

கொண்டு அக்கடிதத்தை இவ்வாலிபனிடம் கொடுத்துவிட்டேன். மறுநாள் என்னிடத்தில் இவ்வாலிபன் அதே கடிதத்தைக் கொடுத்து 'இது தன்னுடையதல்லவென்றும், 'இன்கம்டேக்ஸ் ஆபீஸர் குமாரி விஜயலக்ஷிமியின் கடிதம்' என்றும் தன் தங்கை கூறியதாகக்கூறி என்னிடத்தில் அந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டான். நான் அக்கடிதத்தை வாங்கிக்கொண்டுபோய் விஜயலக்ஷிமியிடம் கொடுத்து விட்டேன். இதுதான் எனக்குத் தெரிந்தது' என்று சொல்லி முடித்தாள்.

அடுத்தபடியாக கருப்பன் விசாரிக்கப்பட்டான்.

கருப்பன்:—'சுவாமி! விஜயாள் காணாமல்போன மாலை சுமார் 5 மணிக்கு இப்ராஹீம்பார்க் வழியாக நான் சென்றேன். அவ்வழியாகவந்த சுப்பிரமணியன் தனக்கு உதவிசெய்யும்படி என்னை வேண்டினார். எனக்கு ரூபாய் 100 கொடுப்பதாகவும் கூறினார். நான் என்ன காரியம் என்று கேட்டதற்கு, தன் மனைவி கோபித்துக்கொண்டதாகவும், தன்னுடைய வீட்டிற்குவாராமல் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருப்பதாகவும், அவள் இன்றையதினம் இங்கு 6-30 மணிக்கு வருவாள் என்றும், வந்ததும் அவளை எப்படியேனும் தூக்கிக் கொண்டுபோய் என் வீட்டில் சேர்த்தால் ரூபாய் 100 தருவதாகவும் கூறினார். அதற்கு நான் 'அப்படிச் செய்தால் பெண்ணின் சொந்தக்காரர்கள் என்மேல் குற்றம் சாட்டி விடுவார்கள்' என்றேன். இச்சுப்பிரமணியன் 'அவ்வாறு ஒன்றும் ஏற்படாது, என்னுடைய சொந்த மனைவியாக இருக்கும்பொழுது நான் பார்த்துச் செய்யச்சொன்னதை யார் தடுக்கப்போகின்றார்கள்' என்றார். நானும் செய்வதாக வாக்களித்தேன். சுப்பிரமணியன் 5 ரூபாய் நோட்டை என்னிடம் கொடுத்து சரியாக 6 மணிக்கு, என்னுடன் மற்றோர் ஆளையும் கூட்டிக்கொண்டு வரும்படி சொன்னார். நானும் சம்மதித்து சுப்பன் என்ற சிநேகிதனை அழைத்துக்கொண்டு சரியாக 6 மணிக்கே பார்க்கை அடைந்தேன். இவர் அப்பொழுது ஆங்கிலேய உடை அணிந்திருந்தார். எங்களைப் பார்த்ததும் இவர் நாங்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதைக் கூறினார். அதன்படியே நாங்களும் நடப்பதாகக் கூறினோம். சுமார் 6-45 மணிக்கு நாங்கள் நிற்குமிடத்தை நோக்கி ஒரு பெண் வருவதுபோல் தெரிந்தது. உடனே இவர் எங்கள் இருவரையும் அடர்ந்திருந்த புதரில் மறைந்து கொள்ளச் செய்தார். அந்தப் பெண் இவரை நெருங்கியதும் இவர் எங்களிடத்தில் முன்பு கூறியதுபோல் மறைவிலிருந்து வெளியே வந்து, அந்தப் பெண்ணைப் பிடித்துக்கொண்டு சப்தம் போடாமல் இருப்பதற்காக வாயில் துணியைவைத்து அடைத்து விட்டோம். உடனே நாங்கள் அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு தென்புறச் சுவர் ஓரமாகச்சென்று, வெளியில் எங்களுக்காகக் காத்துக்கொண்

டிருக்கும் குதிரைவண்டிக்கார குலாம்காதரின் உதவியாலும், இவருடைய உதவியாலும் பார்க்கிலிருந்து அப்பெண்ணை வெளியே கொண்டுவந்து வண்டியில் சேர்த்தோம். நாங்கள் வண்டிக்குப்பின் உட்கார்ந்து கொண்டோம். இவர் வண்டியின் முன் உட்கார்ந்து கொண்டார். அந்தப் பெண்ணை ஓர் வெள்ளைத் துணியால் மூடிவிட்டோம். குதிரைவண்டி புத்தூரில், சத்திரத்திற்கு அருகிலிருந்த ஓர் மாடிவீட்டின்முன் வந்துநின்றது. பெண்ணை வண்டியைவிட்டு இறக்கினோம். இதுவரையில் மூர்ச்சையுற்றிருந்த அந்தப் பெண் சற்று தெளிந்து கண்ணைத் திறந்து பார்த்தாள். உடனே நாங்கள் அந்தப் பெண்ணை அம்மாடி வீட்டிலுள்ள வடபுறத்து அறையில் ஓர் கட்டிலின்மேல் கிடத்தி, வாயிலிருந்த துணியை எடுத்து விட்டோம். மறுமுறையும் சற்று மயக்கம் வந்தமையால் கண்ணைமூடிப் படுத்துக் கொண்டாள். உடனே நாங்கள் அறையைப் பூட்டிவிட்டு, மாடி வீட்டையும் பூட்டிவிட்டு, வெளியேவந்து சத்திரத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது அந்த சத்திரத்தின் கிழக்குப் புறத்து சுவர் ஓரமாய் ஒரு பெண் நித்திரை செய்வதுபோல் தோன்றியது நாங்கள் அந்தப் பெண் யாரென்று பார்க்கப்போனபொழுது, அவள் அங்கு தனிமையில் இறந்து கிடப்பதைக் கண்டோம். உடனே இவர் அந்தப் பிரேதத்தின்மேல் கிடந்த சேலையைநீக்கிக் கையில் எடுத்துக்கொண்டு அந்தப் பிரேதத்தின்மேல் தலைமுதல் கால்வரையில் அக்னிதிராவகத்தை ஊற்றிவிட்டு மாடிவீட்டை அடைந்தார். சிறிது நேரத்தில் சிறைசெய்யப்பட்ட பெண் கட்டியிருந்த பட்டுசேலையையும், நகைகளையும் கொண்டுவந்து கொடுத்து அந்தப் பிரேதத்திற்கு அணிவிக்கும்படி செய்தார். நாங்களும் அவ்வாறே செய்தோம். பின்னர் எங்களிடத்தில் ஓர் கைக்குட்டையையும், சாவியையும் கொடுத்து, அந்தப் பிரேதத்தை இப்ராஹீம் பார்க்கில் கொண்டுபோய் போட்டுவிட்டு அதன் பக்கத்தில் அக்கைக்குட்டையையும் சாவியையும் வைத்துவிட்டு, வீட்டிற்குப் போகும்படி சொல்லி எங்களிடத்தில் ரூபாய் 20 ஐக் கொடுத்தார். நாங்கள் அதன்படியே அந்தப் பிரேதத்தைக் குதிரை வண்டியில் கிடத்தி இப்ராஹீம் பார்க்கையடைந்து அங்கு பிரேதத்தைப் போட்டுவிட்டு கைக்குட்டையையும், சாவியையும் அருகில்வைத்துவிட்டு வீட்டிற்குச் சென்றோம். இதுவரையில் எங்களுக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகையும் சேரவில்லை. (பின்னர் அருகிலிருந்த சாமியாரைக் காட்டி) இவர் எங்களுக்குச்சேரவேண்டிய பணத்தை வாங்கிக்கொடுப்பதாகச் சொன்னார். நாங்களும் சம்மதித்து இதுவரை காத்து இருந்தோம். இன்றைய தினம் காலையில் சாமியார் எங்களைக் கூட்டிக்கொண்டு வரும்படி கூறியதாகக் கூறி அழைத்துக் கொண்டுவந்து இங்கு எங்கள் கையில் விலங்கைப் பூட்டினார்கள்' என்றான்.

சுப்பனும் கருப்பன் கூறியவண்ணமே நடந்த விஷயங்களை உரைத்தான். பின்னர் குதிரைவண்டி யோட்டி குலாம் காதர் விசாரிக்கப்பட்டான்.

குலாம்காதர்:—'நான் அன்றுமாலை 5 மணிக்கு கோட்டை தபாலாபீஸிற்கருகில் குதிரையை ஓர் இடத்தில் கட்டிவிட்டு, வண்டியருகில் நின்றுகொண்டு, வாடகைகளை கவனித்து வந்தேன். அப்பொழுது (சுப்பிரமணியனைச் சுட்டிக்காட்டி) இவர் என்னிடம்வந்து குதிரைவண்டியைக் கட்டிக்கொண்டு வரும்படி கூறினர். நான் வண்டியை தயார்செய்து வழியில் கொண்டுவந்து நிறுத்தினேன். உடனே இவர் வண்டியில் ஏறிக்கொண்டு இப்ராஹீம் பார்க்கிற்கு ஓட்டும்படி சொன்னர். இப்ராஹீம் பார்க்கை யடைந்ததும் வண்டியிலிருந்து கீழேயிறங்கி, என்னிடத்தில் வண்டியைப் பார்க்கின் தென்புறச்சுவர் ஓரமாகக் கொண்டுபோய் நிறுத்தும்படி சொன்னர். அதன்படியே நானும் கொண்டுபோய் நிறுத்தினேன். சுமார் 7 மணிக்கு தென்புறச்சுவர் ஓரமாய் நின்றுகொண்டு இவர், தன்னுடைய மனைவி பார்க்கில் மூர்ச்சையாகி விட்டதாகவும், அவளை வண்டியில் கொண்டுவந்து போடுவதற்கு உதவிசெய்யும்படியும் வேண்டினர். அதன்படியே நானும் உதவிசெய்து, இந்த வாலிபனையும், இங்கு விலங்குடனிற்கும் இந்த மூடர்களையும், அதோ அங்கு நிற்கும் அந்தப் பெண்ணையும் புத்தூருக்குக் கொண்டுபோய் சத்திரத்திற்கு அருகிலுள்ள மாடி வீட்டில் சேர்த்தேன் பின்னர் சுமார் 1 மணிக்கு இந்த இரண்டு மூடர்களும் இறந்துபோன ஒரு பெண்ணின் பிரேதத்தையும் வண்டியில் வைத்து அவர்களை இப்ராஹீம் பார்க்கிற்கருகில் இறக்கிவிடும்படி கூறி ரூபாய் 5-ஐ என்னிடம் கொடுத்தார். அதன்படியே நான் 2 மூடர்களையும் அந்த பிரேதத்தையும் இப்ராஹீம் பார்க்கில் கொண்டுபோய் இறக்கிவிட்டுவிட்டு, நான் முன்போல் வண்டிகள் நிற்குமிடத்திற்குச் சென்றேன்' என்றான்.

பின்னர் அலமேலம்மாள் விசாரிக்கப்பட்டாள்.

அலமேலம்மாள்:—'ஐயனே! என்னுடைய சொந்த ஊராகிய கரூரைவிட்டு இந்த ஊருக்கு வந்தமுதல்நாள் பலவிடங்களில் அலைந்து திரிந்து கடைசியில் பசியின் கொடுமையால் களைத்துப்போய் அன்றிரவு சுமார் 10 மணிக்கு ஆண்டார் தெருவின் வழியாகச் சென்றேன். சற்று முன்பு முகம்மதிய வாலிபன்போன்று உடைகள் அணிந்திருந்த இவர் வசிக்கும் மாடிவீட்டை நெருங்கி திண்ணையில் ஓர் மூலையில் படுத்துக்கொண்டேன். கொஞ்சநேரத்தில் திண்ணையில் யாரோ நடமாடுவதுபோல் தோன்றியது. பசியின் கொடுமையால் கண்ணைத் திறந்து பார்க்க சக்தியற்றவளாய் படுத்திருந்தேன். மாடிப் படிகளின்மேல் ஒருவர் நடப்பதுபோல் தோன்றியது. சிறிது

நேரத்தில் திண்ணையில் ஆள் நடப்பதுபோல் தோன்றியது. சற்று நேரத்தில் பேட்டரி விளக்கின் வெளிச்சம் என் முகத்தில்பட்டது. என் அருகில் இவ்வாலிபர் நின்றுகொண்டு என்னை நோக்கி 'நீயார்?' என வினவினார். நான் அதிக கஷ்டத்துடன் என் கண்களைத் திறந்து இவ்வாலிபரைப் பார்த்து, எழுந்து நின்று, வீட்டின் சொந்தக்காரரா யிருக்கலாம் என்று எண்ணி, இவ்வாலிபரை வணங்கினேன். இவ் வாலிபர் மறுபடியும் 'நீ யார்? ஏன் இங்குவந்து தனிமையில் படுத்துக்கொண்டாய்?' என்றார். நான் கீழ்கண்டவாறு என்னுடைய வரலாற்றை இவ்வாலிபரிடம் கூறினேன்.

'என்னுடைய சொந்த ஊர் கரூர். நான் பிராமண குலத்தில் பிறந்தவள். என்னுடைய காலக் கொடுமையினால் சொந்த ஊரில் ஜீவனம் செய்ய முடியாமல் இந்த ஊருக்கு வந்தேன். வந்தது முதல் நான் பல இடங்களைச் சுற்றியும் எனக்கு ஒரு வேலையும் கிடைக்க வில்லை. பசியால் களைத்திருந்த நான் கடைசியில் இம்மாடி வீட்டைப் பார்த்தேன். இதன் முன் புறத்தில் விசாலமான திண்ணையிருந்தமை யால் இங்கு வந்து உட்கார்ந்தேன். பசியின் கொடுமையால் கண் பஞ் சடைந்தது. மேல் ஒரு அடியும் எடுத்துவைக்க முடியாமல் என் கால்களும் தள்ளாடின. உடனே இந்த வீட்டின் திண்ணையில் ஓர் மூலையில் சுருண்டு படுத்துக்கொண்டேன்' என்றேன்.

உடனே இவ்வாலிபர் என் பெயரைக் கேட்டார். நான் 'அலமேலம்மாள்' என்றேன். இவர் உடனே மாடியிலுள்ள தன் அறைக்குச் சென்று, கொஞ்சம் பழங்கள் கொண்டு வந்து கொடுத்து சாப்பிடும்படி சொன்னார். நான் அதிக கஷ்டத்துடன் எழுந்து தண்ணீர் குழாயில் கைகால்களைச் சுத்தம் செய்துகொண்டு பழங்களைப் புசித்து இரண்டு கைத்தீர்த்தம் அருந்தியபின் இவ்வாலிபரை வாழ்த்தினேன். இவ்வாலிபர் என்னைப் பார்த்து, இன்றிரவை இத்திண்ணையிலேயே கழித்து விடும்படியும், காலையிலிருந்து எனக்கு ஒரு நல்ல வேலை கொடுப்பதாகவும் கூறினார். நானும் அவ்வாறே அவ்விரவை அத்திண்ணையிலேயே கழித்தேன். காலையில் எழுந்ததும் இவ்வாலிபர் என்னிடம் நான்கு அணுக் கொடுத்து காப்பி சாப்பிட்டுவிட்டு வரும்படி சொன்னார். பின்னர் சிங்காரத்தோப்புத் தெருவிலுள்ள ஒரு சிறிய அறையை எனக்குக் குடிக்கூலிக்கு அமர்த்திக்கொடுத்தார். அன்றுமுதல் நான் இவர் சாப் பிடும் ஓட்டலிலேயே சாப்பிட்டுவிட்டு, ஒரு ஆள் சாப்பாடு வாங்கிக் கொண்டு, புத்தூருக்குச் சென்று சத்திரத்திற்கு அருகிலுள்ள மாடி வீட்டில் சிறையிலிருந்த இப்பெண்ணிற்கு, கொடுத்து வந்தேன். இதைத் தவிர நான் வேறொன்றும் அறியேன்' என்றாள். கடைசி யாக விஜயாள் விசாரிக்கப்பட்டாள்.

விஜயாள்:—அறிவிற் சிறந்த அதிபதியே! சாமியார் கூறியது போல் ஜெயராமன்மேல் நான் அளவிடமுடியாத காதல்கொண்டிருக்கின்றேன் என்பது வாஸ்தவமே. ஜெயராமன் எழுதியதுபோன்று எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. அதன்படியே அவரைப் பார்ப்பதற்கு நான் கடிதத்தில் குறித்த நேரத்திற்குப் பார்க்கிற்குச் சென்றேன். தென்புறச் சுவர் ஓரமாக ஒருவர் புஷ்பம் கொய்வது போல் தோன்றியது. அவ்விடத்தில் மரங்கள் அடர்ந்திருந்தமையால் மின்சார விளக்கின் வெளிச்சம் மரங்களின்மேல் பட்டமையால் அந்த வாலிபன் நின்றவிடம் சற்று இருட்டாக இருந்தது. நான் அங்கு நிற்பது ஜெயராமனாகத்தான் இருக்கவேண்டுமென்று எண்ணி, அவ்வாலிபனை நெருங்கினேன். உடனே இரண்டு முரடர்கள் மரப்புதரின் மறைவிலிருந்து வெளிவந்து என்னை இறுகப் பிடித்துக்கொண்டார்கள். நான் சப்தமிட முயற்சித்தபொழுது என் வாயில் ஓர் துணியை வைத்து அடைத்து விட்டார்கள். எனக்கு சற்று மயக்கம் வருவதுபோல் தோன்றியது. பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. மூர்ச்சை தெளிந்து பார்க்கும்பொழுது நான் ஒரு குதிரை வண்டியில் வெள்ளைத் துணியால், மூடப்பட்டு கிடப்பதையும் என் கைகள் இரண்டும் பின்புறமாக கட்டப்பட்டிருப்பதையும், சப்தமிடுவதற்கு வழியில்லாமல் வாயில் துணியை வைத்து அடைத்திருப்பதையும் அறிந்தேன். முன்புறத்தில் ஆங்கிலேய உடையுடன் ஒருவர் வீற்றிருப்பது மட்டும் பாதையின் ஓரத்திலுள்ள விளக்குகளின் வெளிச்சத்தால் மூடியிருந்த துணியின் வழியாகத் தெரிந்தது. முகம் முன்புறமாகத் திரும்பியிருந்தமையால் அது யார் என்று என்னால் அறிய முடியவில்லை. பின்புறத்தில் விலங்குடன் நிற்கும் இந்த முரடர்கள் உட்கார்ந்திருந்தார்கள். வண்டியும் ஓர் மாடி வீட்டிற்கருகில் நின்றது. என்னைக் கீழே யிறக்கி இந்த முரடர்கள் அந்த மாடி வீட்டிற்குள் அழைத்துச் சென்று வடபுறமாக இருக்கும் அறையில் என்னை விட்டுவிட்டு கைக்கட்டையும், வாய்த் துணியையும் நீக்கி, அறையைப் பூட்டிவிட்டு வெளியே சென்றுவிட்டார்கள். அறை விளக்கின்றி இருள் சூழ்ந்திருந்தது. சிறிது நேரத்தில் யாரோ ஒருவர் அறையைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார். அவர் தன் கையிலுள்ள பழைய சேலையை என்னிடம் கொடுத்து அதை அணிந்துகொண்டு என்னுடைய சேலையையும் நகைகளையும் கழற்றித் தரும்படி சொன்னார். நான் மாட்டேன் என்றால் எனக்கு ஆபத்து நேரிடுமென றெண்ணி ஆடைகளையும், நகைகளையும் ஒன்றுவிடாமல் கழற்றி அவரிடம் கொடுத்தேன். குரல்மட்டும் சற்று பழக்கமானதாகத் தோன்றியது ஆனால் அது யார் என்று என்னால் அந்த இருளில் அறிந்துகொள்ள முடியவில்லை. அவர் முன்போன்று அறையைப் பூட்டிவிட்டு, வெளியே

சென்றுவிட்டார். நானும் என் தலைவிதியை எண்ணி வருத்தத்துடன் வீற்றிருந்தேன். மறுநாள் முழுவதும் ஆகாரமில்லாமல் அந்த அறையில் மௌனமாக இருந்தேன். இரவு சுமார் 12 மணிக்கு இவர் முகம்மூடிய ஆடையுடன் என் அறையினுள் பிரவேசித்தார். இவர் என்னைத் தன் வேண்டுகோளுக்கு இணங்கும்படி வேண்டினார். நான் மறுத்தேன். உடனே இவர் பலாத்காரம் செய்ய ஆரம்பித்தார். என்னுடைய கற்பைக் காப்பாற்றிக் கொள்ள நான் அவரைக் காதலிப்பதாகவும், இன்னும் ஒரு மாதத்தில் என்னுடைய மனதை சீர்திருத்திக்கொண்டு, அவரை மணப்பதாகவும் கூறினேன். அவரும் சம்மதித்தார். அன்றுமுதல் எனக்கு மூன்றுவேளை ஆகாரம் அலமேலம்மாள் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தாள். நான் திருப்தியாகச் சாப்பிட்டுக்கொண்டு அந்த அறையைவிட்டு நீங்குவதற்கு ஏற்ற முயற்சிகளையும் செய்து வந்தேன். ஒன்றும் பயன்படவில்லை. கடைசியாக, நான் வாக்குக் கொடுத்த 30 நாட்களும் தீர்ந்தன. அந்தக் கடைசிநாள் இரவு என்ன நடந்தது, எவ்வாறு இவர் கைதி செய்யப்பட்டார் என்பது சாமியாரும், சப்இன்ஸ்பெக்டரும் கூறிய சாக்ஷியத்தில் தெளிவாக இருக்கின்றது ஆகையால் அதையும் நான் கூறவேண்டுவதில்லை' எனக் கூறியவண்ணம் கைதிக் கூண்டில் நிற்கும் தன் காதலனை காதல் கனிந்த பார்வையுடன் நோக்கியவண்ணம் தன் ஆசனத்தை அடைந்தாள்.

கச்சேரியும் கலைந்தது. குற்றவாளிகள் விலங்குடன் சிறைக்குச் சென்றார்கள்.

(அடுத்த இதழில் முடிவு)

---

புருஷன்:—அடி, செல்லம்மா. நீ கறிவைப்பதெல்லாம் நன்றாய்த் தானிருக்கிறது. ஆனால் எந்தக் கறிக்கும் இரண்டு கல்லுகூடப் போட்டால் மறுநாள்வரை கெட்டுப்போகாமலிருக்கும்.

மனைவி:—தங்களிஷ்டப்படியே இன்று எல்லாக் கறிகளுக்கும் இரண்டு இரண்டு கல்லும் போட்டிருக்கிறேன் நாதா. சாப்பிட்டுப் பாருங்கள்.

புருஷன்:—அட அசடே, நான் இந்த சினிக்கல்லையா போடச் சொன்னேன். —கே. எஸ். சோணாசலம்.

கிளார்க்:—ஐயா, உன் வேலைக்காக நீ துரையைபோய் பார்.

ஆள்:—எந்த ஆற்றின் வண்ணான் துரையை சார்.

கிளார்க்:—சீ, ஆபீஸ் துரையை —எஸ். எ. சஞ்சீவி.

---

# கனவும் நனவும்

[T. V. நாராயணன்]



'என்ன தூக்கம் இன்னம், எந்திருங்கோ, எந்திருங்கோ மணி நாலடிக்க போறது, போக வேண்டாமா? எந்திருங்கோன்னு, இப்படி படுத்தூண்டே இருக்கேளே' என்று கட்டிலில் படுத்து முன்னாள் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்த்த தூக்கக் களைப்புத் தீர, தூங்கிக்கொண்டிருந்த என்னை அங்குமிங்குமாக புரட்டினாள் எனது மனைவி விசாலா. நான் தூக்க மயக்கத்துடன் சிறிது கண்ணைத் திறந்து பார்த்தேன். அப்போது விசாலா முணுமுணுத்துக்கொண்டே மாடிப்படியருகில் திரும்பி போய்கொண்டிருந்தாள். சரி போகட்டும் என்று திரும்பி படுத்துகொண்டு தூங்கத் தொடங்கினேன். தூக்கம் சரியாய் வரவில்லை. வாசலில் கார் வந்து நின்ற சத்தம் கேட்டது. நான் விசாலாவிடம் முன்தினம் 'இன்று காயலில் படகேறி விளையாடப் போகலாம்' என்று கூறி யிருந்தேன். மாலை நேரங்களில் சந்திரிகை உள்ள சமயங்களில் படகில் ஏறி காயலின் நீர்பரப்பில் சுற்றி வருவது பேரின்பம் தருவதாகும். காயலின் கருநிறத் தண்ணீரும், அதன் அலைகளும், கடலை நோக்கி ஓடும் அதன் ஒழுக்கும், கடலும் காயலும் கலக்குமிடத்தில் வெகு தொலைவில் காணும் நீண்ட அழகிய பாலமும், காயலில் செல்லும் பிரயாணப் படகுகளும் மிஷின் படகுகளும், பூமியை பிளந்துகொண்டு வளைந்து செல்லும் நீர்பரப்பும், அதன் நாலாப் பக்கமும் அரண்போல் காட்சிதரும் தென்னஞ்சோலையும், அதனிடையில் காணும் தொழிற்சாலைகளும், நீண்டு உயர்ந்து காணும் புகைப்போக்கிகளும், அதிலிருந்து பாய்ந்து மேகமுடன் கலக்கும் கரும்புகையும், நீர்பரப்பில் செம்படவர்கள் தோணிகளில் மீன் பிடித்து திரிவதும், அவர்களின் மலையாள மனோரம பாட்டுகளும், திகட்டாத பேரானந்தத்தை அளிப்பதாகும். அடிக்கடி நானும் விசாலாவும் அங்கேபோய் சிறியதொரு இயந்திர போட்டில் ஆனந்தமாய் காயலில் சுற்றித் திரிவதுண்டு. அன்று பௌர்ணமி ஆனதினால் உற்சாகம் அதிகம். பழயபடி மாடிப்படியில் காலடி சப்தம் கேட்டது. திரும்பினேன் 'இன்னும் எழுந்திருக்கவில்லையா? என்ற சப்தத்துடன் ஒரு தட்டில் பலகாரமும், கிண்ணத்தில் பருகப்பாலும் எடுத்துக்கொண்டு, ஒய்யார உடைகளு மணிந்துகொண்டு வந்துவிட்டாள் விசாலா. நானும் அவள் முகத்தை பார்த்துக்கொண்டே டிபனைக் கழித்தேன். சில ஆடைகளை தந்து அணிந்து கொள்ளச் சொன்னாள். அவ்வாறே செய்தேன். அதற்குள் கிராப்பையும் வாரி சரிப்படுத்தினாள். தாடையை இருகைகளாலும் பிடித்துக்கொண்டு ஒரு

பார்வை பார்த்தாள். கையைப் பிடித்து காகா என இழுத்துக்கொண்டே கீழ் நோக்கி புறப்பட்டுவிட்டாள்.

எங்கே கீழே தள்ளிவிடப் போகிறுளோ என்று பயந்து நானும் கூடவே சென்றேன். எனக்கென்ன பெண் பைத்தியமா? என்று எண்ணி விடாதீர்கள்? நான் அவளுடன் ஐக்கியம்; அவள் செய்வது எனக்கு சரி. அது என் பெறமுடியாத பாக்கியம். கார் புறப்பட்டுவிட்டது 40 மைல் வேகத்தில் எலக்டிரிக் ஹார்ன் சப்தமுடன். நான் காரில் விசாலத்தின் இடதுபுறம் டிரைவர் பின் பக்கம்; கேட்பானேன் ஊரிலுள்ள போவோர் வருவோர் எல்லாம் விறைத்து பார்ப்பதற்கும். சென்றுவிட்டோம் மைல் 3-ம் நொடிப் போதில் படகுக்கரைக்கு; இறங்கினேம். அங்கே போட்டு டிரைவர் மிஷின் போட்டை ஸ்டார்டு செய்து வைத்துக்கொண்டு தயாராய் நின்றுன். நான் சுக்கான் பிடித்து ஓட்டலானேன். விசாலா என் அருகிலுட்கார்ந்து கொண்டாள். போட்டு மெதுவாக சப்தம் செய்துகொண்டு தண்ணீரை பிளந்து கொண்டே மனோகரமாய் சென்றுகொண்டிருந்தது.

சூரியன் தனது மெல்லிய தங்கக் கிரணங்களை வீசி மோகனமாக்கி கொண்டிருந்தான். மேற்கே இருந்துவரும் கடற்காற்றும், கரைக்காற்றும் சேர்ந்து வீசிக்கொண்டிருந்தது. காயல் தண்ணீர் அலைகளை எழுப்பி தத்தளித்துக்கொண்டிருந்தது. போட்டும் அலைகளில் ஏறிஏறி, ஆனந்தமாய் ஆடிஆடி, எதிர்நோக்கி போய்கொண்டிருந்தது. எதிரில்வரும் பாய் படகுகள் காற்றின் சக்தியால் வேகமாய் வந்துகொண்டிருந்தன. கரையிலிருந்து கேட்கும் ஆலைகளின் சப்தங்களும் ஓசைகளும் அடங்கி, அலை ஒலியும், காற்று ஒலியும், மீன்கள் துள்ளித்துள்ளிவிழும் சப்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. ஒரோரு சமயங்களில் காற்று உப்புத் தண்ணீரை எங்கள் முகமெல்லாம் வாரி வாரி இறைத்து ஆடைகளை நனைத்தது. போட்டை இஷ்டம் போல் செலுத்திக்கொண்டிருந்தேன். எனது மனைவி ஆனந்தமாய் இயற்கை ஒலிக்கு இசைய பாடத் தொடங்கிவிட்டாள். எங்களின் களிப்பு, கொஞ்சம் கொஞ்சமாய் உச்சஸ்தாயியை அடைந்துவிட்டது.

'சிந்து நதிக்கரையில் இசைநிலவில்
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்திர தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்'

என்ற பாரதியாரின் பாட்டைப் பாடத் தொடங்கிவிட்டாள். எங்கள் படகு பிரயாண போட்டுகள் படகுகள் போகும் வழியையும் கடந்து அழி முகத்திலிருக்கும் நீண்ட பாலத்தை நோக்கி போய்கொண்டிருந்தது. காயல் தண்ணீர் கடலை நோக்கி வேகமாய் பாய்ந்து கொண்டிருந்தது. நான் இது வரை போட்டு செலுத்துவதில் நோக்க இல்லாமல் அதன் போக்குப்போல் விட்டுவிட்டு விசாலா பாடும் பாட்டின் ஆனந்தத்தில் மூழ்கிக் கிடந்தேன்.

சிறிது நேரத்தில் ஆகாயத்தில் ஒரு பெரிய கரியமுகில் தோன்றி வானத்தை மறைத்துக்கொண்டது. எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. புயலும் சேர்ந்துகொண்டது. இப்போதுதான் நாங்கள் எங்கிருக்கிறேம் என்பதை

கவனித்தேன். காயல் தண்ணீரின் அலைகள் மலைபோல் உயர்ந்து எழும்பி வீசி அடிக்கிறது. போட்டு அதில் கிடந்து சுழல்கிறது. நான் விசையை முடுக்கி போட்டை பலமாக திருப்பவே, அது காற்றின் வேகத்தாலும், தண்ணீரின் ஓட்டத்தாலும் திரும்ப முடியாமல் படார் என்று ஒடிந்து போய்விட்டது. கடலை நோக்கி தண்ணீர் பாயும் போக்கில் போட்டு அவிழ்த்துவிட்ட பட்டுபோல் அடித்துக்கொண்டு போகிறது. மழையும் பெய்ய தொடங்கிற்று. என்னுடைய ஆடைகளும் விசாலாவின் ஆடைகளும் நனைந்து, உடல் மரத்துப் போயிற்று. மேல்வாய் பல்லும், கீழ்வாய் பல்லும், தையல் மிஷின்போல கடகடாவென்று அடித்துக்கொண்டது. ஆடைகளெல்லாம் உடம்போடு உடம்பாய் ஒட்டிக்கொண்டன. உடம்பு நடுங்குகிறது கூந்தல் நனைந்து நீர் சொட்டச் சொட்ட காற்றில் பறக்கிறது. உள்ளம் பதறுகிறது. விசாலா நான் அல்லவா, இக்கதிக்கு காரணம் என்று கூறி கதறி, என்னைக் கட்டிக்கொண்டு விம்மலானாள். நான் 'எல்லாம் ஆண்டவனிருக்கிறான், கலங்காதே' என்று சமாதானப்படுத்தி, போட்டி லிருந்த துடுப்பை எடுத்து துழாவத் தொடங்கினேன். இதற்குள் அலையால் வாரியடிக்கப்பட்ட தண்ணீர் போட்டில் நிறைந்துவிட்டது. விசாலாவைக் எனது உத்தரியத்தை நனைத்து நனைத்து தண்ணீரை வெளியில் பிழியும்படி சொன்னேன். தண்ணீரின் வேகமெங்கே, எனது அற்பத் துடுப்பின் சக்தி எங்கே, நான் பத்தடி உயிரைக்கொடுத்து படகை எதிர் பக்கம் கொண்டுபோனால் ஒரே அலையில் அது இருபதடிக்கப்பால் தூக்கி எறிந்துவிடும். விசாலா தண்ணீரை பாதி பிழிந்து வெளியில் விடுமுன் மீண்டும் ஒரே திரையில் அது நிரம்பிவிடும். உழைப்பதில் பிரயோஜனமில்லை. உடலும் களைத்து அயர்ந்துவிட்டது. ஆபத்தும் நெருங்கிகொண்டே இருந்தது. எனது கையிலிருந்த துடுப்பும், எங்கள் வருகையை முன்னால் போய் கடலினிடம் தெரிவிக்கப் போவதுபோல் தண்ணீரால் அடித்துக் கொண்டு போகப்பட்டது. நான் நாலாபக்கமும் சுற்றிசுற்றிப் பார்த்தேன். வெகு தொலையில் திரைகளினூடே சில தீப ஒளிகள் தென்பட்டதல்லாமல் பலனில்லை. வாய் கொண்டமட்டும் கத்திக் கதறினோம். யாது பயன்? இப்புயல் ஒலியில் இடியோசைகூட கேட்காதே, அப்படி இருக்க எங்கள் ஓசை எம்மாத்திரம்? ஆனால் பிறந்த பின் ஒரு உயிருக்கும் தீங்கு செய் தறியோமே ஆண்டவனே, உனக்கும் எங்கள் நிலைமையைக் காணமுடிய வில்லையா? அழுகுரல் கேட்கவில்லையா?' என்று துதித்தோம். ஒவ்வொரு அலையைக் காணும்போதும், விமலா இதோடு ஒழிந்தோம் என்று பயந்து என்னை வந்து கட்டிக்கொண்டு தேம்புவாள். 'சிறிது முன் நாம் கொண்ட சுகம் தேவர்களும் கொண்டிரார்களே. அவர்களின் பொறாமைக் கண்கள் தான் நம்மை இப்போது கொல்லப் போகிறது. இப்போதாவது அவர்கள் களிப்படையட்டும். வாழ்வும், தாழ்வும், யாவருக்குமுண்டு, தயங்காதே' என்று ஆறுதல் கூறினேன் அவள் எனது மார்பில் சாய்ந்துகொண்டு என் முகத்தை கலங்கிய கண்களுடன் நோக்கும்போது எனது மனம்தான் என்ன பாடு பட்டது! பட்டென் செய்ய! இவ்வளவுக்குள் நன்றாக காரிருள் சூழ்ந்து கொண்டது. ஆனால் அப்பெரிய காயலும் கடலும் கலக்குமிடத்திலுள்ள பாலமும், அதன் தீப ஒளியும், சிறிது சிறிதாக தெரியத் தொடங்கிற்று. எனக்கு சிறிது ஆறுதல். பாலத்தின் அடியில் தூண்களின் ஊடே இரும்பு

அழிபாச்சப்பட்டிருந்தது. அதனால் பாலம் வரையும் போட்டு மறையாமலிருந்தால் உயிர் தப்பிவிடலாம். ஆனால் அந்த பாலமோ பெரிது. அதன் நடுப் பாகம் கப்பல்களும், பெரிய படகுகளும் காயலுக்கும் கடலுக்கும் போக வேண்டி திறக்கவும் அடைக்கவும் தக்கபடி ஆக்கப்பட்டிருந்தது. அந்த பாகத்தில்மட்டும், தூணோ இரும்பு அழியோ, ஒன்றும் கிடையாது. தண்ணீரும் கடும்வேகமுடன் பாய்ந்துகொண்டிருக்கும் அந்த பக்கங்களிலுள்ள ஆழத்தையும், முன் நடந்திருக்கும் விபத்துக்களையும், எண்ணும்போது எனக்கு எங்கள் உயிரைப்பற்றிய நம்பிக்கையேயில்லை. என்ன செய்யலாம்? விதி வேறுவிதமாயல்லவா இருக்கிறது? போட்டு பாலத்தின் நடுப்பாகம் வழியாக அடித்துக்கொண்டு போக தொடங்கிவிட்டது. விசாலா என் உடலோடு சேர்ந்து அயர்ந்து மூர்ச்சையாய் சாய்ந்துவிட்டான் அவள் உடல் பனிக்கட்டிபோல் குளிர்ந்துவிட்டது. எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் அவளை மடியில் போட்டுக்கொண்டு போட்டின் மேல்படியில் உட்கார்ந்துகொண்டு பிரமித்துப்போய், அவள் உணர்வற்ற உடலை நோக்கிக்கொண்டே இருந்தேன். ஆசை தீர அதரத்தில் முத்தமிட்டேன். அதில் இன்ப உணர்ச்சி கடுகளவுமில்லை. அவள் கண்ணை மெதுவாய் திறந்து பார்த்துவிட்டு 'நாதா' என்று மெதுவாய் முணங்கினாள். மறுகுரலில்லை, படகும் பாலத்தினடிப் பாகம் வந்துவிட்டது. கடலிருந்து வந்த ஒரு பெரிய திரை, எங்கள் உயிரை உண்ண வந்த வெள்ளை திரை, எங்கள் சந்தோஷத்தில் பொறாமைகொண்டு, கொல்லக் கருதி படகை தூக்கி அடித்துக் கொண்டுபோன கருந்திரையுடன் மோதிற்று.

* * *

நான் கண்ணை விழித்துப் பார்க்கும்போது என் கட்டிலை சுற்றி நான்கைந்து பேர்கள் நிற்கக் கண்டேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சுற்றுமுற்றும் விழித்துப் பார்த்தேன். கை, கால், உடம்பு தலை எல்லாம் துணியால் சுற்றி கட்டப்பட்டிருந்தது. தேகமெல்லாம் வலி எடுத்துக்கொண்டிருந்தது. திரும்பிப் படுக்க முயன்றபோது ஆஸ்பத்திரி வேலைக்காரி உடை அணிந்த பெண் (நர்ஸ்) 'உடம்பை அசைக்ககூடாது. முறிவுண்ட இடங்களெல்லாம் தைக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது தீங்கு வந்துவிடக் கூடாது' என்று அன்பு கனியக் கூறினாள். பின் அருகில் கவுண் தரித்து நின்ற ஆங்கில மாது, ஆங்கிலத்தில் ஏதேதோ சொல்லிவிட்டுப் போனாள். நான் அவள் என்ன சொன்னாள் என்பதை கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் ஒரே ஒரு இளம்பெண் தவிர எல்லாரும் போய்விட்டார்கள். நான் கிடப்பது ஆஸ்பத்திரியில் என்பதை ஒருவாறு தெரிந்துகொண்டேன். அந்த பெண்ணிடம் 'அம்மா! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நான் இன்று சைக்கிளில் போய்கொண்டிருக்கும்போது ஒரு லாரியில் மோதுண்டேன். அதுதான் தெரியும். பின் என்ன நடந்தது, தயவுசெய்து கூறமாட்டாயா?' என்று கேட்டேன். அதற்கு அந்த இளம்பெண் ஆங்கிலம் கலந்த தமிழில் அன்பு கனியச் சொல்லத் தொடங்கினாள். அவளொரு ஆங்கிலோ இந்திய மாது என்றும், அவள் பாட்டி அடுத்த வார்டில் கண் ஆபரேஷன்செய்து சிகிச்சை பெற்று வருவதாயும், அவள் பெயர் ஜோஸப் என்றும், அவளுடைய தகப்பனார் சுற்றத்தார் முதலியவர்கள் பர்மாவிலிருப்பதாயும், அன்று அவள் பாட்டிக்கு வேண்டிய பணிவிடைகள் செய்துகொண்டிருக்கும்போது ஒரு

காரில் சிலர் என்னைக் கொண்டுவந்து பிரக்ஞையற்ற நிலைமையில் டாக்டரிடம் விட்டுவிட்டுச் சென்றதாயும், எனது ரத்தம் ஓடும் காயங்களை காண யாவரும் ஓடிவந்து கூடினர் என்றும், அப்போது அவளும் வந்ததாயும், பின் டாக்டர் மண்டையிலும் காயம்பட்டிருந்த பிற இடங்களிலும் வேண்டியபடி சிகிச்சைசெய்து மூர்ச்சை தெளியும்வரை கவனமாய் பார்த்துக் கொள்ளும்படி நர்ஸுகளிடம் கூறிவிட்டு சென்றார் என்றும், சிறிது கழிந்து நான் பிரக்ஞையடையுமுன் ஏதேதோ உளறிக்கொண்டே கட்டிலிலிருந்து கீழே புரண்டு விழுந்து விட்டதாயும், மீண்டும் ஜோஸப்பும் நர்ஸுமாக கட்டுகளை கட்டி பழயபடி படுக்க வைத்த பின் நான் முன்னிலைமைக்கு வந்ததாயும், விளங்கக் கூறி எனது முகத்தை கூர்ந்து நோக்கினாள். நான் இமைகொட்டாமல் அவள் கூறிய மொழிகளை கேட்டுக் கொண்டிருந்தேன். முன் கூறிய விசாலா, மாளிகை, நீர்படகு விபத்து எல்லாம் அயர்வில் கண்ட கனவு என்றும் தெரிந்துகொண்டேன்.

ஜோஸப் தினமும் காலையிலும், மாலையிலும், சௌகரியமுள்ள மற்ற சமயங்களிலும் என் கட்டிலண்டை வந்து தேக சுகத்தை விசாரித்து உண்ண ஆகாரமும் உதவி, சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவாள். டாக்டர் வரும்நேரத்தில் அவளும் வந்து புண்களின் கூடுதல் குறைவுகளைத் தெரிவித்து அன்போடு எனக்கு வேண்டியவைகளை அவரிடம் தெரிவிப்பாள். ஆதரவற்ற நிலையில் எனக்கு அவள் தாயினும் அன்பாக உதவினாள். அவளுக்கு என்ன காரணம்பற்றியோ, என்னிடம் ஆழ்ந்த அன்பு ஏற்பட்டுவிட்டது. எனக்கும் அவள் என்னருகிலில்லாத சமயமெல்லாம் என்னவோபோல் வெறிச்சென்றிருக்கும். தினமும் நான் கண் அயரும்வரை அந்த ஆஸ்பத்திரியிலுள்ள ஒவ்வொருவரையும், அவர்களின் சாமர்த்தியங்களையும் சிகிச்சைக்கு வந்திருப்பவர்களின் விசேஷங்களையும், அவள் பள்ளியில் படிக்கும்போதும், கப்பல் பிரயாணம் செய்யும்போதும், உறவினருடன் பேசிக்கொண்டிருக்கும் போதும் கண்ட அபூர்வங்களையும், அவள் சாதித்த சாமர்த்தியக் காரியங்களையும் பார்த்த சினிமாக்களையும், சொல்லி சொல்லி கிடையிலேயே கிடந்த எனது மனப்புண்ணையும் உடற்புண்ணையும் ஆற்றிவந்தாள். ஆஸ்பத்திரி மருந்துகளையும், ஆயுதங்களையும்விட, அவள் குரலுக்கும் உடலுக்கும் புண்களை ஆற்றும் சக்தி அதிகம் என்பது என் கருத்து. அவள் ஆங்கிலோ இந்திய மாதானாலும், அவளைக் கண்டார் யாவரும் விறைத்து நோக்கும் வனப்பு வாய்ந்திருந்தாள். அவள் கருங்கண்களும், நீண்டு வளர்ந்து தொங்கிய அடர்ந்த கருநறுமயிரும், தந்தப் பதுமை போன்ற உடலும், தங்கப்பதுமை போன்ற நிறமும் எவர் உள்ளத்தைத்தான் இழுக்காது? அவள் தனது சுருண்ட கருமயிரை ஒரு பக்கமாக அழகாக வாரிக்கொண்டிருப்பாள். காதிலோ, முகத்திலோ, கையிலோ எவ்வித ஆபரணமும் அணிந்துகொண்டிருக்கவில்லை. புன்னகை என்ற ஒப்பற்ற நகையை முகத்தில் கொண்டிருந்த தோடு கழுத்தில் மெல்லிய தங்கச் செயின் ஒன்றும் அணிந்திருப்பாள். சாதாரணத் துணியில் தைத்த அழகிய கவுன் தரித்திருப்பாள், காலில் அழகிய பூட்ஸும் அழகு செய்யும். அவளது குரல், கொலைகாரர்களையும் கொடிய துஷ்ட மிருகங்களையும் கூட அடக்கிவிடுமோ என்று எனக்கு தோன்றும். அவள் சிட்டுக்குருவிபோல் பறந்து வருவாள். ஒரு நிமிஷமும் ஓய்ந்திருக்கவேமாட்டாள். அவளுடைய துருதுரு என்ற நடையும் பார்வையும், எனது உடலையும் உயிரையும்

அவளுக்கு விலைப்படுத்திவிட்டது. அவளைக் காணாத ஒரு கணமும் எனக்கு ஒரு நாளாகத் தோன்றும்.

ஜோஸப்பும் அவள் பாட்டியும் சிகிச்சை முடிந்து பர்மா போகவேண்டிய நாள் நெருங்கிவிட்டது. அதற்காக அவள் தகப்பனாரிடமிருந்து அன்று ரூ. 300 மணியார்டரும் வந்தது. எனக்கு அப்போதெல்லாம் ஜோஸப்பை காணும்போது மிகுந்த வருத்தம் வரும். கண்ணில் நீரும் வரும். அவள் குறிப்பால் அறிந்துகொண்டு என்னை விசாரிப்பாள். நான் ஒன்றுமில்லை என்று கூறி மறைத்து விடுவேன். அவள் பாட்டியும் சிலநாள் மாலை நேரங்களில் பேத்தியுடன் வந்து தேக நிலைமையை விசாரித்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு ஆறுதல் கூறிச் செல்வாள்.

நான் கொல்லத்தில் கோரனா அண்டு கம்பெனியில் இரண்டு வருடமாய் வேலையாயிருந்தேன். ஷை கம்பெனியின் முதலாளி முன் மிகவும் ஏழையாயிருந்து, கடவுளருளால் எல்லாப் பாக்கியமும் பெற்று சுகமே வாழ்ந்து வந்தார். அவரும் சாதாரணமாய் எல்லா முதலாளிகளிடமும் காணும் எல்லாக் குணமும் படைத்தவர். பெருந்தன்மை சிறிது குறைவு. இந்தப் பொருள்மட்டும் எளிதல் கிடைத்துவிடாது. எவன் நன்றாய் உண்மையாய் வேலை செய்கிறான், எவன் இச்சகம் பேசி திருடுகிறான் என்பதை அறியும் சக்தியும் கிடையாது. நான் ஷை கம்பெனியில் ஆரம்பத்தில் இலவச வேலைக்கு போனாலும் எனது உழைப்பால், உண்மையால் பத்து வருடமாய் வேலை பார்த்து பெறும் முன் வேலைக்காரர்களைவிட கூடுதல் சம்பளம் அதாவது ரூ. 25 பெற்றேன். காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை வேலை. ஒரு சைகளின் வாயுண்டானால் அழும். அவ்வளவு வேலை. வழக்கம்போல் ஒருநாள் மிகவும் அவசர வேலையாய் ரயிலவே கூட்ஸுக்கு பகல் 11 மணி வெயிலில் சைக்கிளில் மிகவும் வேகமாய் போய்கொண்டிருந்தேன். ஒரு ரோடு, அது வளைந்து சரிந்து செல்கிறது. அதில் வேகமாய் வரும்போது கிளை ரோட்டிலிருந்து குறுக்காக ஒரு லாரி வந்தது. அவ்வளவுதான், பின் நடந்தவை ஜோஸப் கூறத்தான் தெரியும்.

எனக்கு உற்றார் உறவினர் யாரும் அந்த ஊரில் கிடையாது என்று தெரிவித்ததால் ஆஸ்பத்திரியிலிருந்தே ஆகாரம், மருந்து யாவையும் இனமாக தந்து வந்தார்கள். போதாததிற்கு ஜோஸப்பும் உதவி வந்தாள். எனது உடைகளை மாற்றவும் வேறு சில்லறை செலவுகளுக்குமாக என்னைப் பார்க்க வந்த கம்பெனி கூலி வேலைக்காரர்களிடம் முதலாளிக்கு ஒரு கடிதம் எழுதி அதில் என் நிலைமையை விளக்கி, அந்த மாத சம்பளத்தில் வரவேண்டும் பாக்கி ரூ 10 ம் கூடுதலாக ரூ. 5 ம் ஆக ரூ. 15 தந்து உதவவேண்டும் என்றும், அதிகப்பற்றை பின் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம் என்றும், இவ்வுதவியை செய்ய வேண்டும் என்றும் பணிவுடன் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தனுப்பி இருந்தேன். அதற்கு பதில் கடிதம் மறுதினம் கிடைத்தது. அதில் சம்பள பாக்கி ரூ. 10 ம் சைக்கிளின் சேதத்திற்கு நஷ்டஈடு செய்யப்பட்டது என்றும்; இப்போது வேறு உதவி செய்ய முடியாமல் விருப்பதுடன் மேல் வேலைக்கு தேவையில்லை என்றும் எழுதியிருந்தது. உயிரைக் கொடுத்து வேலை செய்த என்னை இவர் இவ்வளவுதான் மதித்தார். உலகமே பணக்காரர்களுக்கு மட்டும்தான். நாமெல்லாம் செக்கு மாடுகள் போல் உழைத்து சாகவே உலகில் பிறக்கிறோம். இச்சிறு உதவி செய்வதா

இருந்தால். அவருக்கு பெரிய காரியமா?' என்று பலவிதமாய் எண்ணவே எனது கண்ணில் நீர் வர தேம்பி தேம்பி அழலானேன். அப்போது ஜோஸப்பு உள்ளே வரும் பூட்ஸ் சப்தம் கேட்கவே, கண்ணைத் துடைத்துக்கொண்டு கடிதத்தையும் மறைத்துக் கொண்டேன். அவள் என்ன சாமானியமானவளா? எனது மாறுதலைக் கண்டு கலக்கமுடன் பல கேள்விகள் கேட்கத் தொடங்கினாள். நான் எவ்வளவுதூரம் மறைத்தும் பயனில்லை, முடிவில் கடிதத்தைக் கொடுத்தேன். அவள் படித்துப் பார்த்துவிட்டு கிழித்து கசக்கினாள். என்னைப் பார்த்து 'நான் உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். நான் ஒன்று கேட்கிறேன் உண்மையை சொல்வீர்களா?' என்று கேட்டாள். நான் 'என் உயிரை காத்த உத்தமியே நீ என்ன வேண்டுமானாலும் கேளு?' என்று ஆவலுடன் கூறினேன். அவள் சிறிதுநேரம் யோஜித்தாள். அங்குமிங்கும் பார்த்தாள், ஒற்றைக்கண்ணால் என்னை சாய்ந்து பார்த்தாள். புன்முறுவலித்தாள். பின் ஒரு சிறு கடிதத்துண்டை மனம் முன்தள்ள, நாணம் பின்தள்ள, இருகைகளாலும் தரலானாள். நான் கடிதத்துடன் அவள் இருகையையும் இறுகப்பற்றி இழுத்து எனது மார்புடன் அணைத்துகொண்டேன். அவள் திமிறினாள் விடவில்லை. முடிவில் உதறிக்கொண்டு நீங்கிப் போய் திரும்பிக்கொண்டு நின்றாள். கால் கட்டை விரல் சிமிண்டு தரையையும் துளைத்துவிடும்போல் வேலைசெய்தது. அவள் கையால் கதவைப்பற்றிக் கொண்டு, நகத்தால் பலகையை மெதுவாய் சுரண்டிக்கொண்டிருந்தாள். முகம் கீழ்நோக்கி இருந்தாலும், கண் எங்கெல்லாமோ பாய்ந்து சென்றது. பெருமூச்சு உடலை குலுக்கிற்று. இவ்வாறு சிறிதுநேரம் சென்றது. நான் மெதுவாய் 'அன்பே! நான் எனது மயக்கம் தெளிந்து பார்த்த அன்றே உனக்கு விலையாகி விட்டேனே. உனக்கு உடமையான இப்பொருளை நீ பெற்றுக் கொள்ளுவதில் எனக்கென்ன தடையிருக்கிறது?' என்று கூறி இளநகை புரிந்தேன். அவள் அப்படியே ஒரு சுற்றுச் சுற்றித் திரும்பினாள். முகத்தை ஒரு வலி, கண்ணை ஒரு வெட்டு, ஒரு குறும்புன்னகை, இவ்வளவும் செய்துவிட்டு காயிதச் சுருளை என்மேல் வீசிவிட்டு மின்னல்போல் மறைந்தாள். அவளுடைய நீண்ட பின்னலும் அவள் உடலை சுற்றிக்கொண்டே மறைந்தது.

மறுதினம், அதாவது ஜோஸப்பும் பாட்டியும், பர்மா செல்லவேண்டிய தினம். எனக்கு இன்னம் நான்கு நாள் கழியவேண்டும் வைத்தியசாலையை விட்டு பிரிவதற்கு. எனக்குண்டான கவலையோ சொல்லத்தரமன்று. தினமும் காலையில் நான் விழிக்கும் முன்வரும் ஜோஸப் அன்றுமணி 7 அடிக்கும் வரை வரவில்லை. 'அவர்கள் என்னிடம் கூறிக்கொள்ளாமல் போய்விட்டார்களோ? அப்படிப் போகமாட்டார்களே, ஒருவேளை எனக்கு தெரிந்தால் நான் புண்படுவேன் என்று எண்ணி போயிருக்கலாம்' என்று பலவிதமாய் எண்ணிக் கலங்கும்போது பாட்டியும் பின்னால் பேத்தியுமாக உள்ளே வந்தார்கள். நான் கட்டிலில் எழுந்து உட்கார்ந்துகொண்டு அவர்களையும் அதில் இருக்கச் சொன்னேன். பாட்டி சொன்னாள் 'அப்பா நீ வராமல் ஜோஸப் வர மறுக்கிறாள். என்ன செய்வது? இன்று போகாவிட்டால் கப்பல் டிக்கட்டு பயனற்றதாய் விடும். அவள் உன்னை எண்ணி கரைகிறாள். எனது வயது காலத்தில் அவள் தகப்பனுக்கு நான் என்ன பதில் சொல்லுவேன். நீயோ எங்களுக்கு முன்பின் தெரியாதவன். எனக்கும் உன்னைப் பார்க்கும்போது அளவற்ற

அன்பு மனதில் உண்டாகிறது. நான் மூன் தினம்வரை பேசி உன் உள்ளத்துடன் பழகினேனே யொழிய உனது உடலழகினையும், கட்டினையும் இன்றுதான் கண்டேன். நான் உன்னிடத்தில் சில உண்மைகள் கூற விரும்புகிறேன் கண்ணே! நீயும் கேட்டுக்கொள். நான் இதுவரையிலும் உன்னிடமும் உண்மையை கூறாமலிருந்ததற்கு என்னிடம் வருந்தக் கூடாது.

'எனது கணவர் மூன் இம்மலையாள ராஜ்ஜியத்தில் வேலையாயிருந்து காலமானபின் நானும் எனது மகளும், கும்பகோணத்தில் ஓவர்சியர் வேலையாயிருந்த எனது மகனுடன் அங்கே வசித்துவந்தோம். அப்போது ஒருசமயம் இடைவிடாது இரு தினங்கள் பெரும்புயலும் மழையும் அடித்தன. அதனால் நீர் எங்கும் பெருக்கெடுத்து ரோடுகளையும், கரைகளையும் உடைப்பெடுத்துக்கொண்டு ஓடிற்று. காற்றினால் எங்கும் மரங்களும் வீடுகளும் வீழ்ந்து கிடந்தன. சேதங்களைப் பார்த்து வேண்டிய நிவாரணங்களை செய்வதற்காக மறுதினம் விடியுமுன் குதிரையிலேறி எங்கும் சுற்றிப் பார்க்க மழைக்கோட்டும் அணிந்துகொண்டு எனது மகன் போனான். வெகுநேரம் கழிந்து அவன் வரும்போது ஒரு கிராமத்தின் பாழ்மனையில் சிறு குழந்தையின் அழுகுரல் கேட்டது என்றும், அங்கேபோய் பார்த்து அதை எடுத்து வந்ததாயும் கூறி, பிறந்து அதிக நேரமாகாத ஒரு இளம்குழந்தையை என்னிடம் தந்து, இதை வளர்ப்பது நமது கடமை என்று கூறினான். குழந்தையை கண்ட எனக்கும் யாவருக்கும் அளவற்ற சந்தோஷம். நாங்கள் குழந்தையை தேடி யாராவது வருவார்கள் என்று சில மாதங்கள்வரை எதிர்பார்த்தோம். யாரும் வருவாரில்லை. இரண்டு வருஷம் கழிந்த என் மகனுக்கு பர்மாவில் கூடுதல் சம்பளத்தில் இஞ்சினீயர் வேலை கிடைக்கவே, நாங்கள் யாவரும் அங்கே சென்றோம். சென்ற 16 வருடமாய் ஜோஸப் எங்கள் கண்மணியாய் வளர்ந்து வந்தாள். நீ அவளை கொள்ளை கொண்டுவிட்டாய்?' என்று கூறி பெருமூச்சுவிட்டாள். எங்கள் மூவர் கண்களிலிருந்தும் நீர் சொட்டிற்று. நீர்நிறைந்த கண்களுடன் அவள் என்னை நோக்கவும், நான் அவளை நோக்கவும், பாட்டி எங்கள் இருவரையும் நோக்கவுமாய் சிறிதுநேரம் மௌனமாய் ஆனந்த பாஷ்பம் வருஷித்தோம்.

பின் நான்கு தினங்கள் நாங்கள் மூவரும் ஒன்றாகவே கழித்தோம். இப்போதெல்லாம் ஜோஸப் ஒரு புதுக்களிப்பு உண்டாய் துள்ளிக்கொண்டிருந்தாள். எங்களின் மங்களச் செய்தியை அங்குள்ள யாவரும் அறிந்து வந்து கூடி பேசிப் போகலாயினர். எங்கள் இருவருடைய பாக்கியத்தையும் யாவரும் புகழ்ந்தார்கள். புகழுந்தோறும் பாட்டிக்கு கர்வம் ஓங்கி வளர்ந்தது. ஜோஸப்பை புகழ்ந்து பேசக் கேட்கும்போது, சந்தோஷத்தால் என் மேனி சிலிர்க்கும். அன்றே, நான்கு தினம் கழிந்துதான் புறப்படுகிறோம் என்று பர்மாவுக்கு தந்தி கொடுத்துவிட்டதுடன், எங்கள் மூவரின் புகைப்படத்தையும் மங்களமான கடிதத்தையும் அனுப்பி வைத்தோம்.

என்ன ஆனந்தமான நிலவு! சந்திரன் தனது முழுக்கதிர்களையும் எங்கும் வாரி வீசிக்கொண்டிருந்தான். நீலக்கடல் தனது திரையை நுரைகக்க அடித்துக்கொண்டிருந்தது. லக்ஷக்கணக்காக நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் மினுங்கிக்கொண்டிருந்தன. கப்பல் தனக்கு நிகரில்லை என்று கடலை இரண்டாகப் பிளந்து தள்ளிக்கொண்டே சென்றது. நடுஇரவு யாவரும் உறங்கும்

சமயம், கப்பல் ஒலியும் கடலொலியும், காற்றொலியும் தவிர மற்ற ஒலி ஒன்றும் கேட்பதற்கில்லை. நானும் ஜோஸப்பும் கப்பலின் மேல்தளத்தில் நின்று கொண்டு இயற்கையின் அழகினையும், மேல் நடக்கும் சந்தோஷங்களையும் கூறி ஆனந்தக் களிப்புடனிருந்தோம். கழிந்த மாதம் இத்தினத்தில் கண்ட எனது கனவின் மாட்சியை கூறி ஜோஸியை கட்டியணைத்து முத்தமிட்டேன்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால்
தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும்
கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா)

பி. சொக்கலிங்கம்,
பாரத் காபி, டீ, ஸ்டோர் மெயின்ரோட்,
அம்பாசமுத்திரம், திருநெல்வேலி ஜில்லா.

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

தி. ஞானப்பிரகாசம்,
122, மோகல்வீதி, ரங்கோன்.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி. வலையபட்டி
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்

A. V. R. A. ADYCAPPA CHETYAR
Lalji Mansing Building, 1st Floor,
Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2

# ராமமூர்த்தியின் தந்திரம்

[தே. வி. மாணிக்கம் எழுதியது.]



துப்பறியும் ராமமூர்த்தி தன் அறையில் உட்கார்ந்துகொண்டு அன்றைய தினசரிப் பத்திரிகையை புரட்டிப்புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான். அதன் கடைசிப் பக்கத்தில் காணப்பெற்ற ஒரு விஷயத்தைக் கண்டதும் திடுக்கிட்டு அதை ஆவலுடன் படிக்கவாரம்பித்தான்:—

10, 000 ரூபாய் பெறுமான தங்க நகைகள் களவு! நேற்று ராத்திரி நகை வியாபாரம் நடேச முதலியார் கடையில் ரூபாய் 10, 000 பெறுமான நகைகள் களவாடப் பெற்றிருக்கின்றன. கடையில் படுத்திருந்த காவலாளி தூங்கும்போது, திருடன் தந்திரமாய் காவலாளியின் நாசியில் மயக்க மருந்தை ஏற்றிவிட்டு கடைக்குள் நுழைந்து நகைகளை எடுத்துச் சென்றிருக்கிறான். போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

என்று காணப்பெற்ற விஷயத்தைப் படித்ததும் அவன் மூளை வேலை செய்யவாரம்பித்தது. இரண்டு நிமிஷத்தில் திருடனை கண்டு பிடிக்கக்கூடிய வழியொன்று அவன் மூளையில் உதயமாகவே, பத்திரிகையை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு பேனா மைக்கூடு முதலியவற்றை எடுத்து மேஜையின்மேல் வைத்துக்கொண்டு கீழ்வருமாறு ஒரு கடிதம் எழுதினான்:—

கந்தசாமி செட்டியார்
நெ, 10. காசுக்கடை,
திருவாரூர்.

மிக அவசரமான சமயம். 5000 ரூபாய் பெறத்தக்க நகைகளிருக்கிறது. அவசரத் தேவையை முன்னிட்டு ரூபாய் இரண்டாயிரம் தந்தால் போதும். ஆகையால் பணத்துடன் கீழ்குறிப்பிட்டிருக்கும் இடத்திற்கு சுணங்காமல் வரவும். சுணங்கினால் கைமாறிவிடும்.

பெருமாள்
140. எழும்பூர்,
சென்னை.

என்று எழுதி அதை உறைக்குள்போட்டு மேல் விலாசம் எழுதி அதை எடுத்துக்கொண்டு போஸ்டாபீசை நோக்கி நடந்தான்.

அதற்கு மறுநாள் காலை பத்துமணி சமாருக்கு திருவாரூரில் காசுக்கடை கந்தசாமி செட்டியார் தம் கடையில் உட்கார்ந்து தினசரி பத்திரிகை ஒன்றை கையில் வைத்துக்கொண்டு விஷயங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அது நகை வியாபாரம் நடேச முதலியார் கடையில் களவுபோன தேதிப் பேப்பாரகையால் அந்தச் செய்தி அவரது திருஷ்டியில் படவே, அதை அவர் படித்து முடித்ததும் அவரது முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது.

அவர் திருட்டு நகைகளை வாங்குவதில் கைதேர்ந்த புள்ளி. ஆகையால் எந்தத் திருடனாயிருந்தாலும் நகைகளைவிற்று முதலாக்க அவரிடம்தான் வருவார்கள். அவர் அந்த நகைகளை சொற்பத் தொகைக்குப் பெற்று அதில் கொழுத்த லாபம் அடைவது வழக்கம். அவர் முகம் சந்தோஷக் குறியைக் காட்டியதற்கு காரணம் அதே தான்.

அப்போது அவர் இருந்த இடத்திற்கு ஒரு குமாஸ்தாவந்து அன்றைய தபாலில்வந்த இரண்டு கடிதங்களை அவரிடம் கொடுத்து விட்டுப் போகவே, அவர் ஒரு கடிதத்தை எடுத்து அதில் எழுதி யிருந்த விஷயத்தைப் படித்து முடித்ததும் அவரது முகம் சந்தோஷக் குறியைக் காண்பித்ததிலிருந்து அக்கடிதம் நம் துப்பறியும் ராம மூர்த்தியினால் எழுதப்பெற்ற கடிதமாய்த்தானிருக்க வேண்டுமென்று சந்தேகமறத் தெரிந்து கொள்ளலாம். அவர் அதை மேஜைமேல் வைத்துவிட்டு அடுத்த கடிதத்தை எடுத்து அதன் உறையைக் கிழித்து அதற்குள்ளிருந்த லெட்டரைப் பிரித்துப் படிக்கலானார்:—

கந்தசாமி செட்டியார்
திருவாரூர்.

நீங்கள் நேற்றைக்கு முன்தினம் இவ்வூர் நகை வியாபாரம் நடேச முதலியார் கடையில் நகைகள் களவு போனதைப்பற்றி பேப்பரில் படித்திருக்கலாம். அதோடு நானே அவ்வித சாமர்த்திய திருட்டை நடத்த சக்திவாய்ந்தவனென்பதையும் யூகித்திருக்கலா மென்று எண்ணுகிறேன். உடனே பணத்துடன் வரவேண்டியது.

ராமையாத் தேவன்
சின்னத்தம்பி முதலி தெரு,
மதராஸ்.

என்று எழுதியிருந்ததைப் படித்து முடித்ததும் சந்தோஷங்கொண்டு அன்று ராத்திரி சென்னைக்குப் போகும் மெயிலில் அங்குபோக வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்.

மறுநாள் காலை எட்டுமணி. துப்பறியும் ராமமூர்த்தி தன் வீட்டில் உட்கார்ந்துகொண்டு கந்தசாமி செட்டியாரை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனிருந்த இடத்திற்கு கந்தசாமி செட்டியார் வரவே, மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்று உட்காரும்படி உபசரித்தான். செட்டியார் உட்கார்ந்து கொண்டு 'உங்கள் பெயர்தானே பெருமாள் என்பது? நீங்கள் தானே கடிதம் எழுதியவர்கள்?' என்று தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளக் கேட்டார்.

ராமமூர்த்தி:—ஆம்; என் பெயர்தான் தாங்கள் குறித்தது. நானேதான் கடிதம் எழுதியவன். பணங்கொண்டு வந்திருக்கிறீர்களல்லவா?

செட்டியார்:—பணம் கொண்டுவாராமல் எனக்கு இங்கு என்ன வேலை? சரி, நகைகளை எடுங்கள்.

மூர்த்தி:—நகைகளை எடுக்கத் தடை இல்லை. முதலில் விலை விபரத்தைப்பற்றி பேசிக்கொள்ளுவோம். சரியாக ஐயாயிரம் ரூபாய்க்கு நகைகளிருக்கிறது. அப்படியே மொத்தமாக எடுத்துக்கொண்டு என்ன கொடுப்பீர்கள்?

செட்டியார்:—தெரியாதா? உங்களைப் போன்றவர்களிடம் காலிலொரு பங்குதான் கொடுப்பது வழக்கம். அதேபோல் நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மூர்த்தி:—எங்களைப் போன்றவர்களென்றால் அதன் அர்த்தம் இன்னதென்று எனக்குப் புரியவில்லையே! அதைக்கொஞ்சம் விபரமாய்த் தெரிவியுங்கள்' என்றான்.

செட்டியார்:—நீங்கள் கேட்பது வேடிக்கையாக விருக்கிறதே! இந்த நகைகள் கஷ்டப்பட்டு சம்பாதித்த உங்களுடைய சொந்தப் பணத்திலிருந்து செய்த நகைகளாயிருந்தால் நாங்கள் இப்போது மார்க்கெட்டிலிருக்கும் விலையை அநுசரித்துப் போட்டுக் கொடுப்போம். ஆனால் இன்னொருவருடைய சொத்தைத்தானே நீங்கள் இப்போது விற்கப் போகிறீர்கள். அதுவரையில் உங்களுக்கு கிடைத்தது லாபம்தானே! நாங்கள் இந்த மாதிரி திருட்டு நகைகளை வாங்கிக்கொண்டுபோய் உருக்கிப் புடம்போடும்வரை எங்கள் மனம் படும்பாடு அந்தக் கடவுளுக்குத்தான் தெரியும். ஏனென்றால் போலீஸார் எங்கள்மேல் சந்தேகப்பட்டு திடீரென்று வந்து எங்கள் வீட்டை சோதனை போடுவதாய் வைத்துக்கொள்வோம். அப்போது எங்கள் கதி எப்படி முடியும்? அதை எல்லாம் உத்தேசித்துத்தான் எங்களுக்குத் தகுந்த லாபம் கிடைப்பதாயிருந்தால்மட்டும் துணிந்து இறங்கி விடுகிறது.

இந்த இடத்தில் முக்கியமான ஒரு விஷயத்தை நாம் குறிப்பிட வேண்டியதிருக்கிறது. அதாவது, துப்பறியும் ராமமூர்த்தியை அவர் இதற்கு முன் பார்த்திருந்தவரன்றாதலால் அவனை பெருமாள் என்று பெயருள்ள ஒரு பக்காத் திருடனென்றே நினைத்துக்கொண்டிருக்கிறார்.

மூர்த்தி:—நீங்கள் சொல்லுவது ஒரு விஷயத்தில் ஒப்புக் கொள்ளக் கூடியதாய்தா னிருக்கிறது. இது திருட்டு நகைக ளென்று தங்களுக்குத் தெரிந்ததுதான் எனக்கு ஆச்சரியமாக விருக்கிறது!' என்றான்.

செட்டியார்:—(புன்சிரிப்புடன்) இதுகூட எனக்குத் தெரியாதா? இது திருட்டு நகையா இல்லாமல் உங்கள் சொந்த நகையாயிருந்தால் இச்சென்னை நகரில் விற்க இடமில்லாமல் திருவாரூருக்கா எழுதுவீர்கள்? அதோடு தாங்களே லெட்டரில் 5000 ரூபாய் நகைக்கு 2000 ரூபாய் தந்தால் போதுமென்று எழுதி யிருந்தீர்கள். அதிலிருந்த திருட்டு நகையென்று சுலபத்தில் விளங்குகிறதே! திருட்டு நகைகளை நான்தான் வாங்குவேனென்று அநேகமாய் எல்லாத் திருட்டுத் தொழிலாளிகளுக்குமே தெரியும். அந்த முறையில் உங்களுக்கும் தெரிந்திருக்கலாமென்று நினைத்தேன். சரி, எனக்கு நேரமாகிறது நான் முதலில் சொன்ன விலைக்குத்தா இஷ்டமானல் நகைகளை எடுங்கள். நீங்கள் நகைகளை வேறு யாரிடமும் விற்க முயன்று அவர் மூலம் போலீஸாருக்குத் தகவல் தெரிந்து நீங்கள் போலீஸாரிடம் விருந்து சாப்பாடு சாப்பிட ஆசை இருந்தால் உங்கள் நோக்கம்போல் செய்து கொள்ளுங்கள்.

மூர்த்தி:—நீங்கள் ஒரேதாய் கத்தி முனையில் நிற்பதும் சரியல்ல. எங்களைப் போன்ற மற்றவர்களுக்கு என்ன விலை போட்டுக் கொடுப்பீர்கள்?

செட்டியார்:—நான் யாருக்குமே கால் விலைதான் போட்டுக் கொடுப்பது வழக்கம். உங்களுக்கும் அதே விலைக்குத்தா நோக்கமா இல்லையா! இரண்டிலொன்றை சொல்லிவிடுங்கள் நான் திரும்பிப் போவதற்கு. ஏன் வழவழவென்று பேசிக்கொண்டிருக்க வேண்டும்!

மூர்த்தி:—ஏன் அவசரப்படுகிறீர்கள்? நீங்கள்தான் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லுகிறீர்கள். வேறு என்ன செய்வது? சரி, நீங்கள் கேட்ட விலைக்குத் தாச் சம்மதம். இனி மறு பேச்சுக் கிடையாது. நீங்கள் எப்போது ஊருக்குத் திரும்பிப் போகப் போகிறீர்கள்?

செட்டியார்:—(பகற்கொள்ளைபோல் தான் கேட்ட விலைக்கு ஒப்புக்கொண்டதைப்பற்றி மகிழ்ச்சியடைந்து) சரி, ரெம்ப சந்தோஷம்.

இப்போது நான் சின்னத்தம்பி முதலி தெருவிலுள்ள ராமையாத் தேவன் வீட்டுக்குப் போகவேண்டும். அங்கு வேலை முடிந்ததும் அடுத்த மெயிலில் ஊருக்குப் போகவேண்டியதுதான். வேறு எனக்கு இங்கு என்ன வேலை?

மூர்த்தி:—அங்கே ஏன்? இந்த மாதிரி நகைகள் விஷயந்தானே?

செட்டியார்:—ஆம்; உங்களிடமிருப்பதைப்போல் ஐந்து பங்கு நகைகள் அவனிடமிருக்கிறது. அவனுக்கும் உங்களுக்கு கொடுக்கப் போகும் விலைதான் கொடுக்கப்போகிறேன். அவன் பலே கைகாரன். அவன்தான் என்னிடம் வாடிக்கையான ஆசாமி.

மூர்த்தி:—(ஆச்சரியத்துடன்) அவன் அவ்வளவு நகைகளை எங்கிருந்து அடித்துக்கொண்டு வந்தான்—என்று உண்மையை அவரிடமிருந்து பிடுங்கப் பார்த்தான்.

செட்டியார்:—தெரியாதா? அவன்தான் நேற்றைக்கு முன் தினம் நகை வியாபாரி நடேச முதலியார் கடையில் சாமர்த்தியமாய் திருட்டை நடத்தினவன். எல்லாம் அந்த நகைகள்தான். சரி, எனக்காக அவன் காத்துக்கொண்டிருப்பான். நான்போய் அங்கு வேலையை முடித்துக்கொண்டு வந்து உங்கள் நகைகளைப் பெற்றுக் கொள்ளுகிறேன். நான் சென்று வரட்டுமா?

ராமமூர்த்தி:—(தான் வெற்றியடைந்ததைக் குறித்து மகிழ்ந்து) ஓ! அவன்தானா அந்த திருட்டை நடத்தினவன்? நான் யாரோவென்றல்லவா நினைத்தேன். இந்த மாதிரி நாலைந்து திருடர்களிடம் நீங்கள் தொழில் நடத்திக்கொண்டிருந்தால் உங்கள் தொழில் பிரபலமடைவதற்கு கேட்க வேண்டியதில்லை. ஆனால் போலீசாருக்குத் தெரிந்துவிட்டாலோ, அதோடு உங்கள் தொழில் கோவிந்தாதான்! ஏன்? இப்போதே உங்கள் ரகசியங்களை ஒரு துப்பறிபவனிடம் வெளியிட்டுவிட்டோமென்று கொஞ்சம் உங்கள் மனதிலிருக்கட்டும். சரி, உட்காருங்கள்.

அவன் கூறியவைகளைக் கேட்டதும் அவரை தூக்கிவாரிப் போட்டது. அவர் ரொம்ப பயந்த மனிதராதலால் திகில்கொண்டு 'நீங்கள் பயமுறுத்தி வேடிக்கை பார்க்கிறீர்களா? அல்லது நீங்கள் துப்பறிபவரா?' என்று பயந்த சுபாவத்தில் கேட்டவண்ணம் மறுபடியும் உட்கார்ந்தார்.

உடனே ராமமூர்த்தி 'ஏன் சந்தேகம்? நான்தான் துப்பறியும் ராமமூர்த்தி. நீங்கள் திருட்டு நகைகளை வாங்குகிறீர்களென்று எனக்கு கொஞ்சநாளைக்கு முன்பே தெரியும். நடேச முதலியாரிடம் களவுபோன நகைகள் அநேகமாக உங்களிடம்தான் வருமென்பதை யூகித்து பெருமாள் என்ற பெயருடன் நகைகளிருப்பதாக ஆசை

வார்த்தையால் உங்களை வரவழைத்து, உங்களிடமிருந்தே திருடன் இன்னுரென்பதை தந்திரமாய் தெரிந்துகொண்டேன். என் திறுதிறு வென்று விழிக்கிறீர்கள்!" என்றான்.

---

அவன் உண்மையில் ராமமூர்த்திதான் என்பதை உணர்ந்த கந்தசாமி செட்டியார் 'நீங்கள்தான் என்னைத் திறுதிறுவென்று விழிக்கும் நிலைமைக்கு கொண்டுவந்து விட்டீர்களே! ஏதோ தெரியாமல் இந்த வேலையை செய்துவிட்டேன். நீங்கள் பெரிய மனது பண்ணி அதை மன்னித்து என்னை மேல் தொந்தரவுக்கு ஆளாக்காமல் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும். நீங்கள் என்ன சொன்னாலும் அதன்படியே செய்கிறேன்' என்று பரிதாபமான தொனியில் வேண்டினர்.

உடனே ராமமூர்த்தி 'நீங்கள் எனக்குமேல் வயது சென்றவர்களாயிருப்பதையும், என்னை இவ்வளவு தூரம் வேண்டிக் கொள்வதையும் உத்தேசித்து உங்களை மன்னித்து போலீஸாரிடம் காட்டிக் கொடுக்காமல் இத்துடன் உங்களை விட்டுவிடுகிறேன். இனி யாராவது உங்களிடம் திருட்டு நகைகளை கொண்டுவந்தால் அவன் இன்னுரென்பதை எனக்கு உடனே அறிவித்து விடவேண்டும் தெரிகிறதா?' எனக் கேட்டான்.

அவன் கூறியவைகளைக் கேட்ட செட்டியார் சந்தோஷங் கொண்டு 'சரி, இனி உங்கள் உத்தரவுப்படியே செய்கிறேன். இனி இந்த ஜென்மத்தில் இன்று நடந்த சம்பவத்தை மறக்கமாட்டேன். எனக்கு ஊரில் அவசரமான ஜோலிகளிருக்கிறது. எனக்கு போக உத்தரவளிக்க வேண்டும்' என்றார்.

ராமமூர்த்தி அவரை ஊருக்குப் போக விடைகொடுக்கவே, அவர் அடுத்த நிமிஷம் 'தப்பினேம் பிழைத்தோம்' என்று ரயில்வே ஸ்டேஷனை நோக்கி நடந்தார்.

அவர் போனதும் ராமமூர்த்தி விஷயத்தை போலீஸாருக்குத் தெரியப்படுத்தி அவர்களை துணைக்கு அழைத்துக்கொண்டு சின்னத் தம்பி முதலி தெருவிலுள்ள ராமையாத்தேவன் வீட்டுக்குப் போனான். அவர்கள் சென்றசமயம் ராமையாத்தேவன் நகைகளை எடுத்து வைத்துக்கொண்டு கந்தசாமி செட்டியார் வரவை அவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தானதலால் கையும் களவுமாகப் பிடித்து போலீஸாரிடம் ஒப்புவித்துவிட்டு தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

---

# சிவகாமி அல்லது
# தன் கற்பை காத்த காரிகை

[V. ஜெயராமன்]



(சென்ற மாதத் தொடர்ச்சி)

இவரின் நிலையிப்படியாக, காளி சந்நிதியிற் கண்ணயர்ந்திருந்த சிவகாமியை யாரோ தட்டி யெழுப்பியதாகத் தோன்ற, அவள் திடுக்கென கண்விழித்து எழுந்து உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்க்க, ஓர் யௌவன பெண் பிரசன்னமாயிருக்கக் கண்டு வெருண்டு ஒருக்கால் 'நாம் அன்று சந்தித்த வனதேவதையாக இருக்குமோ'வென்று, சமீபத்தில் சென்றும் அப்பெண் பேசாமல் இருப்பதைக் கண்டு 'இவள் நாம் அன்று சந்தித்த வனதேவதையாய் இருந்தால் நம்முடன் ஒரு வார்த்தையாட மாட்டாளா? காளித்தாயே நம்மை சோதிக்க இவ்வுருவம் கொண்டாளோ, அல்லது வேறு ஏதாவது ஓர் துஷ்டப் பிசாசு நம்மை புசிக்க இவ்வுருவம் கொண்டதோ' என்று விசாரப்பட்டதுடன் 'மூன்றுஜாம ராத்திரியாய் விட்டதே, வீட்டில் என்னை எங்கென்று தேடுகின்றார்களோ என்னவோ' என்ற ஏக்கமும் பெரிதும் கொண்டாள்.

அத்தருணத்தில் அப்பெண் அவள் முன்வந்து நின்றாள். இதையும் சிவகாமி கவனியாமல் அம்மனை கண்மூடிக்கொண்டு தோத்திரம் செய்துகொண்டிருந்தாள். பிறகு கண்விழித்துப் பார்க்க, ஓர் யௌவன பிராமணவாலிபன் தன் முன் நிற்கக்கண்டாள். 'இதென்ன ஆச்சரியம்! முதலில் நாம் கண்டது ஓர் பெண். இப்பொழுது நம் முன் ஓர் வாலிபன் நிற்கிறானே! நம்முடன் வேறு ஓர் புருஷனிருக்க யாராவது கண்டால், என்ன விபரீதமாய் நினைத்து விடுவார்கள்! நாளை நம் தலைமேல் விழப்போகுமிடியை தடுத்தாட்கொள்ளவல்லவா, நம் தாயை நாடிவந்தோம். அப்படியிருக்க, இத்திவ்விய புருஷன் நிற்கக் காரணமென்ன? இதெல்லாம் நம் காளித்தாயின் திருவிளையாடல்' என்று எண்ணினாள். பிறகு அவனைப் பார்த்து 'அப்பா! நீர் யார்?' என்றாள்.

வாலிபன்:—காளியின் தாசன்.

சிவகாமி:—தாசன் என்றால் என்ன?

வாலிபன்:—தாசன் என்றால் தலைவன்.

சிவகாமி:—யார்க்கு தலைவன்?

வாலிபன்:—பல காளிதாஸர்களுக்கு தலைவன்.

சிவகாமி:—தாஸனா, தலைவனா?

வாலிபன்:—பெரியவர்களுக்கு தாஸன், சிறியோர்க்கு தலைவன்,

சிவகாமி தனக்குள் 'நமக்கோ பொழுதுவிடிந்து போகிறது. இவனுடன் பேசிக்கொண்டிருந்தால் விடிந்துவிடும்' என்று எண்ணிக் கொண்டு, அம்மனை பார்த்து 'அம்மணி! எல்லாம் உன்செயல். விடிந்துவிட்டால் நான் வீடு போக முடியாது. என் சுற்றத்தார் களும், பெற்றோர்களும் என்னைத் தூற்றுவார்கள். உன் திருவடியே ஏழையாகிய எனக்கு கதி. என் துன்பத்தை போட்டி இன்பத்தை யூட்டுவது உன் கடமை' என்று நமஸ்கரித்துவிட்டு வெளியே வந்தாள். மறுபடியும் அவ்வாலிபன் அவள் முன் தோன்றினான்.

சிவகாமி:—நீரோ சிறுபிள்ளையாய் இருக்கிறீர். ஆனால் உம் முடைய வார்த்தைகளை என்னால் அர்த்தம் செய்துகொள்ள முடிய வில்லை. அதனால் என் சிற்றறிவுக்கு தெளிவாக புரியும்படி உம் வரலாற்றை தெரிவிக்கவும்.

வாலிபன்:—ஆண் பிள்ளையாகிய என்னுடைய வரலாறு உனக்கு தெரிய வேண்டிய அவசியமில்லை.

சிவகாமி:—பின் எதற்காக என்னைத் தொடர்கிறீர்?

வாலிபன்:—நீ தனிமையாக செல்வதால், உனக்கு துணையாக வரலாமென்று தொடர்ந்தேன். அதிருக்கட்டும், இந்த இராத்திரியில் நீ தனியாக வரக் காரணமென்ன?

சிவ:—எனக்கு இப்பொழுது ஓர் இக்கட்டு நேர்ந்திருக்கிறது. அதை என் காளித்தாயிடம் முறையிட்டு, என்னை காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ள வந்தேன்.

வாலிபன்:—அதென்ன சமாசாரமோ? அதை யெனக்கு தெரி விக்கலாகாதோ?

சிவ:—வாழ்வையே பெரிதாகக் கொண்டிருக்கும் அற்ப மானி டரால் என்னுடைய குறைகள் தீரா. எல்லாம்வல்ல கடவுளால்தான் தீர்க்கமுடியும். ஐயா! என்னை தடுத்துப் பேசவேண்டாம். நான் விடிவதற்குள் வீடுபோய் சேரவேண்டும். அப்படிக்கில்லாவிடில் நான் உயிர்விட நேரிடும்.

வாலிபன்:—அம்மா! நானும் உன்னுடன் பேசிக்கொண்டே வருகிறேன். நீ உன் வரலாறுகளை கூறிக்கொண்டே வா.

சிவ:—தாங்கள் எங்கு செல்லவேண்டும், தாங்கள் ஏன் கோயிலுக்கு வந்தீர்கள்?

வாலிபன்:—ஒரு பெண்ணுக்கு நாளை பெரும் விபத்தொன்று நேரிடப் போகிறதாம். அவள் சில தினங்களாக வந்து கதறிவிட்டு போகிருளாம். அவளுக்கு ஏதாவது உபகரிக்க கூடுமாவென்று பார்த்துவர தேவியார் கட்டளையிட்டார். அதற்காக செல்லுகிறேன்.

சிவகாமிக்கு சந்தோஷம் உண்டாய்விட்டது. 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பது என்வரையிலும் சரியாக இருக்கிறது. இதற்கு பிறகும் நாம் 'நம் குறைகளை கூறுமல் சும்மா இருந்தால் அபசாரமாகும்' என்று வாலிபனைப் பார்த்து,

'என்னைக் காப்பாற்ற வந்த கருணாகரமே! நீங்கள் அறியாமல் என்னுள்ளத்தில் மறைந்திருப்பது வேறு உளதோ? நீங்கள் கேட்கிறபடியால் கூறத் தடையில்லை. நிதானமாகக் கூறப் பயமாக இருக்கிறது.

வாலிபன்:—என்ன பயம்?

சிவ:—பொழுது விடியுமானுல், என்னை, என் பெற்றோர்கள் தூற்றுவார்கள்.

வாலிபன்:—அவர்களுக்கு தெரியாமல் வருவானேன், பிறகு இப்படி சங்கடப்படுவானேன்?

சிவ:—அம்மன் எனக்கு அருள்புரியவில்லையே. என்ன செய்வேன்?

வாலி:—சகோதரீ! பயப்படாதே. அம்மன் அருள் சாந்துதான் எனக்கு கட்டளையிட்டு அனுப்பினுள்.

சிவ:—நான் உயிர் துறப்பதாக வல்லவோ திரும்பினேன். ஆயினும் இப்பொழுது தேவரீருடைய திருவாக்கே தேவியார் திருவுள்ளமென்று உணர்கிறேன்.

வா:—எதற்காக இப்படிக் காலதாமதம் செய்கிருய்! விஷயத்தை வெளிப்படுத்தினுல் அல்லவோ தக்க உதவிசெய்ய முடியும். சீக்கிரம் சொல்.

சிவ:—நானே அறியாதவள். என் பெற்றோர்கள் என்னை என் தாயாரின் தம்பிக்கு விவாகம் செய்துகொடுக்க சம்மதித்து விட்டார்கள். சகல ஏற்பாடுகளும் நடந்தேறிவிட்டது. மணமகனும் வந்து

சேர்த்துவிட்டார். ஆனால் எனக்கோ இவ்விவாகத்தில் இஷ்டமில்லை மணப்பெண்ணாகிய நான் இக்காட்டில் பரிதவிக்கிறேன்.

வா:—அப்பால் உன் கருத்தென்ன?

சிவ:—இன்னும் என்ன சொல்ல சொல்லுகிறீர்? பெண் பிள்ளை ஆண்பிள்ளையிடம் இன்னும் என்ன சொல்ல முடியும்?

வா:—எண்ணம் இன்னதென்று தெரியாமல் என்ன செய்யக் கூடும்?

சிவ:—சிறு பெண்ணாகிய என்னை அலையவிடுவது சரியா? உமக் கொன்றும் தெரிவிக்காமலா காளித்தாய் எனக்கு துணைகூட்டி யனுப்பினாள்? நீர்படுத்தும் அவஸ்தையால் என் நடை சாயவே யில்லை. விடிந்தால் மடியவேண்டிய துன்பம் காத்துக்கொண்டிருக் கிறது.

வாலி:—நீ எவ்வளவு விரைவாக சென்றாலும் நான் பேசிக் கொண்டு வரத் தடையில்லை. பேசிக்கொண்டே விரைவாக நட.

சிவ:—எனக்கோ வீடுபோய் சேரவேண்டுமே என்ற திகிலில் சந்தோஷமே கிடையாது. பொழுதுவிடியும் முன் வீடுபோய் சேரா விட்டால் உலக நிந்தைக் கிடமுண்டாகுமே யென்ற பயமும் என் னுள்ளிருக்கிறது. நான் என்னதான் செய்வேன்?

வா:—சிவகாமி! பயப்பட வேண்டாமென்ற என் சொல்லையும் பதரெனக் கொண்டாய். உன் கருத்தை வெளியிட்டால் என்ன? உள்ளதை சொன்னால் உன் கஷ்டம் தீர்ந்துபோம்.

சிவ:—சொல்லத் தடையில்லை. வெட்கத்தை விட்டு சொல்லியும் கைவிட்டு விடுவீராகில் என்ன சுகம்? அதனால் காப்பாற்றுவதாக கூறினால் கூறுகிறேன்.

வாலி:—நான் எத்தனை தடவை கூறியும் உனக்கு நம்பிக்கை யில்லை. உறுதிமொழி கூறி உனக்கு உபகரிக்காவிட்டால் என்னை யார் தண்டிப்பார்கள்? சொல்ல பிரியமில்லாவிட்டால் சும்மா இருந்துவிடு.

சிவ:—ஐயோ! என்ன கஷ்டம். என்னைக் காப்பாற்றவே நீர் வந்ததாய் சொல்லியிருக்கிறீர். என் நிமித்தமாகவே நீர் வந்ததாயும் கூறுகிறீர். அப்படியிருக்க நீர் வாய் காட்டிவிட்டு வந்தவழி திரும்பப் பார்க்கிறீரே? இனி நான் உம்மை விடுபவளல்ல. எனக்கேதாவது ஓர் வழி காட்டிவிட்டுத்தான் போகவேண்டும்.

வா:—என்னால் முடியாதென்றால் என்ன செய்வாய்?

சிவ:—தற்கொலை செய்து கொள்வேன்.

வா:—அதனால் எனக்கென்ன கெடுதி?

சிவ:—காளியே தங்களை எனக்கு உதவிக்கு அனுப்பினதாக சொன்னீர். நீர் காளித் தாயின் ஆணை தவறி துன்பத்துக் கிடம்தந்த தோஷம் உம்மைத்தான் சேரும்.

வாலி:—இதுவரையில் உன்னை அறியாப் பெண்ணென்று நினைத் திருந்தேன். இப்பொழுதுதான் உன் கொடுமை வெளிப்பட்டது. அதிருக்கட்டும். அடுத்த ஊரில் என்ன விசேஷம். ஆரவாரமாக இருக் கிறதே.

சிவ:—ஒரு வீட்டில் நாளை காலை விவாகம்.

வாலி:—விவாகமா? ஆச்சரியமாக இருக்கிறதே. நடக்கட்டும் பார்க்கிறேன்.

சிவ:—தேவரீர் கோபங் கொண்டதற்கு காரணம் என்னவோ?

வாலி:—போ! போ!! நீ அறியாதவள். உனக்கு என்ன தெரியும்? கோயிற்பூசை போடாமல் அல்லவோ அவர்கள் கலியாணம் செய்ய தொடங்கிவிட்டனர். என் தாய் பிரார்த்தனையை செலுத் தாமல் அவர்கள் கலியாணம் செய்வதை நான் பார்க்கிறேன். யார் வீட்டில் விவாகம்?

சிவ:—வீராசாமி ஐயர் வீட்டில்

வாலி:—அவர் வீட்டில் யாருக்கு?

சிவ:—அவர் குமாரத்திக்கு.

வா:—மாப்பிள்ளைக்கு என்ன வயது?

சிவ:—'சுமார் 30 இருக்கும்.

வாலி:—'வீராசாமி ஐயருக்கு புத்தி சொல்பவர் ஒருவரு மில்லையா? பெண்ணின் மனதிலிருப்பதை தெரிந்து கொள்ளாமல் இப்படி நடக்கிறுரே. பெண்ணுக்கு என்ன வயது?

சிவ:—15 வயதுதான் இருக்கும். நானே அப்பெண். தேவரீர் திருவடிக்கு நமஸ்காரம் செய்கிறேன். காப்பாற்ற வேண்டியது உமது கடமை'

வாலி:—'எல்லாம் சரிதான். இன்னும் உன் இஷ்டத்தை தெரி விக்கவில்லையே'

சிவ:—'தேவரீருக்கு எல்லாம் தெரிந்திருந்தும் என்னை பரிக்ஷிக் கிறீர். என் மனதில் இருக்கும் புதையலை வெளிப்படுத்தி மகிழ்ச்சி கொள்ள விரும்புகிறீர் போலும்'

வா:—ஆனல் உன் புதை பொருளை நீயே கண்டு மகிழ்வாய். சற்று உற்றுப் பார். யாரோ உன் வரவுக்காக கல்லின்மேல் உட்கார்

திருப்பதாக தெரிகிறது. இனி நான் உன்னுடன் வருவது சரியன்று. நான் போய் வருகிறேன்' என்று கூறி மறைந்துவிட்டான்.

மணியோ 3 ஆய்விட்டதுபோல் தோன்றிற்று. தாஸன் மறைந்ததை கண்டு திடுக்கிட்டாள். 'முதலில் நம் கண்ணுக்கு ஓர் யௌவன பெண்ணாக தோன்றியது காளித்தாயாகத்தான் இருக்க வேண்டுமென்று எண்ணினாள். 'ஐயோ! பாவியாகிய நான் அவளை யாரென்று தெரியாமல், அவளுடன் சம்பாஷிக்காமல் போனேனே. காளித்தாயே என்னை சோதிக்க இவ்வாடவரூபம் கொண்டாள் போலும். எல்லாம் 'ஈனையாளும் ஈசன் செயல்' என்று எண்ணிக் கொண்டே வெகு விரைவாக சென்றாள். சிவகாமி ஓர் ஆடவனுடன் பேசிவந்ததை கண்ட நடேசன் 'ஐயோ! இதென்ன விபரீதம். இவள் வேறு ஒருவனை நேசித்திருக்கிறாள்போல் இருக்கிறது. இருக்கட்டும் அவனை விசாரித்து தெரிந்துகொள்ளுகிறேன்' என்று உட்கார்ந்திருந்தார். சிவகாமி கல்லின்மேல் உட்கார்ந்திருப்பது யாரென்று உற்றுப் பார்க்க, தன் காதலனாக இருக்கக்கண்டு அருகில்சென்று, அவரை நமஸ்கரித்து, 'நாதா! அடிமைக்காகவா நீங்கள் இவ்வளவு பிரயாசைப்பட்டது? நான் உங்கட்கு என்ன பிரதி உபகாரம் செய்யப் போகிறேன்' என்றாள்.

நடேச-ஐயர்:—அதெல்லாமிருக்கட்டும், உன்னுடன் பேசிவந்த புருஷன் யார்? என்னைக் கண்டவுடன் ஓடிவிட்டானே?

சிவகாமி:—நீங்கள் கொண்ட விபரீத எண்ணத்திற்குகேற்றபடி நான் என்ன சமாதானம் சொல்லி, உங்கள் சங்கையை ஒழிக்கப் போகிறேன்? என்னுடன் பேசிவந்தவர் காளிதாஸர்.

நடேச:—கோவில் பூசாரியா?

சிவ:—இல்லை. காளித்தாயின் மகனாம்.

நடேச:—என்ன விபரீதமாக இருக்கிறது! விடிந்து போவதால் சீக்கிரம் சொல்லிக்கொண்டு நட. அவர் என்னை கண்டதும் உன்னைப் பிரிந்துபோகக் காரணமென்ன?

சிவ:—காளியின் கட்டளையாம், விரிவாக சொல்ல நேரமில்லை.

நடேச:—தேவபுருஷனானால் என்னைப் பார்த்துவிட்டு ஓட வேண்டிய பிரமேயமே இல்லை.

சிவ:—தேவபுருஷர்கள் கட்டளைமீறி மற்றவர் கண்ணுக்கு தென்படமாட்டார்கள்.

நடேசன்:—உனக்கு மாத்திரம் அவர் எப்படி தென்பட்டார்?

சிவ:—நானின்று காளிகோயிலில், காளியை பூஜித்தது இவ்வளவல்ல. நான் குளத்தில் குளித்து எழுந்தபோதே ஓர் ஜோதி

உண்டாயிற்று. பிறகு காளியை துதித்துக்கொண்டிருக்கும்பொழுதே அயர்ந்து தூங்கிவிட்டேன். விழித்துப் பார்க்க ஓர் யௌவனப்பெண் என்முன் நின்றுகொண்டிருந்தாள். நான் வீட்டிற்கு செல்ல எழுந்தவுடன், அப்பெண் இருந்த இடத்தில் அப்புருடர் இருக்கக் கண்டேன்.

நடேசன்:—தேவபுருஷன் என்றால் என் சந்தேகம் தெளியாது?

சிவ:—என்னுடன் தேவபுருஷன் பேசிவந்த சம்பாஷணையை நீங்கள் கேட்டால் அல்லவோ தெரியும். அவர் சொல்லும் வார்த்தைகளை என்னால் அர்த்தம் செய்துகொள்ள முடியவே இல்லை.

நடேசன்:—நீங்கள் இருவரும் நிலா வெளிச்சத்தில் தனிமையாய் சம்பாஷணை செய்யவேண்டியது அவசியம்தான்.

சிவ:—ஐயோ! நீங்கள் எவ்வளவோ படித்திருந்தும், உங்கட்கு பைத்தியம் பிடித்து, உத்தமர்மேல் குறை கூறுகிறீர்கள். அவரோ நம்மிருவருக்கும் நலம்செய்யத் தோன்றியவர்.

நடேசன்:—பின் ஏன் எனக்கு தரிசனம் தரப்படாது?

சிவ:—நீங்கள் அவர்பேரில் கூறிய குறைகளுக்காக, மன்னிப்பு கேட்டுப் பிரார்த்தித்தால், அவர் தரிசனம் உங்கட்கு கிடைக்குமென்று எண்ணுகிறேன்.

நடேசன்:—அப்படியானால் இப்பொழுதே பணிந்துகொண்டேன். அப்படி அவர் தரிசனமானால் எல்லாம் ஒழிந்துபோம்.

சிவ:—அவர் இப்பொழுது என்னிடமிருந்து விவாக விஷயங்களை கேட்டுக்கொண்டு போயிருக்கிறார். நாளை நம் வீட்டிற்கு வருவார் போலிருக்கிறது. நீங்கள் ஏன் இவ்விடத்திலேயே உட்கார்ந்துவிட்டீர்கள்?

நடேசன்:—அதை இப்பொழுது சொல்லமுடியாது.

சிவ:—என்னதுதான் என்று கொஞ்சம் சொல்லுங்களேன்.

நடேசன்:—ஒரு நல்ல ஸர்ப்பம் என்னை மடக்கி, தடுத்தாட்கொண்ட திருவிளையாட்டின் சிறப்பேயன்றி, வேறு ஒன்றும் இல்லை.

சிவ:—அதுவும் நம் காளித்தாயின் திருவிளையாட்டென்றே நினைக்கிறேன். இன்னும் என்னென்ன விபரீதங்கள் நடக்கப் போகிறதோ நாமறியோம். ஆகையால் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்.

(அடுத்த இதழில் முடிவு)

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றி கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல் சாம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை அளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும்போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டுவரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாக்கும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை இனுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தை யில்லாத தம்பதிகளுக்குப் புத்திர சந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சாத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும் சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய
### சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ணு அண்டு கம்பெனியாரையும் கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும். தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் ஒன்று மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக்கூடிய 30 மாத்திரைகள் அடங்கிய

புட்டி 1-க்கு விலை ரூபா 5.

விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களையும், கட்டிகளையும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலையில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளை ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரிகளிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேச பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களை ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலை, அறையாப்புக் கட்டி இவைகளையும் எத்தகைய ராஜ கட்டிகளையும், புரைப் புண்களையும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளை நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினால் இரணம் ஆறிவிடும்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

குறிப்பு:—கணக்கற்ற இரணங்களும், இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இங்கு குறிப்பிடவில்லை

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.